REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 23 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
92 1932–2024 ANNIVERSARY
තිනකරන්

Monday 23, September, 2024 | வரு. 92 இல. 227 | 24 பக்கங்கள் | 50/-



# முழு நாடும் அநுரவுக்கு

## நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவு

## தமிழ், முஸ்லிம் மக்களினதும் பேராதரவுடன் அமோக வெற்றி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஸாதிக் ஷிஹான்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் (21) நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கமைய அநுரகுமார திசாநாயக்க 57 இலட்சத்து 40 ஆயிரத்து 179 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் அநுர குமார திசநாயக்க வெற்றி பெற்றுள்ளார்.

இம்முறை தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 07 மாவட்டங்களில் மட்டுமே வெற்றி பெற்றதுடன் அவர் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 45 இலட்சத்து 30 ஆயிரத்து 902 ஆகும்.

இம்முறை தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்ட அதேவேளை, இந்த தேர்தலில் எவரும் 50 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால், இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டன.

அதன்படி, இம்முறை தேர்தலில் போட்டியிட்டவர்களில் அதிகூடிய வாக்குகளைப்பெற்ற அநுரகுமார திசாநாயக்கவும் இரண்டாவதாக அதி கூடிய வாக்குகளைப் பெற்ற சஜித் பிரேமதாச ஆகிய இருவர் தவிர்ந்த ஏனைய அனைத்துப் போட்டியாளர்களும் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவரினால் போட்டியிலிருந்து நீக்கப்பட்டவர்களாக கருதப்பட்டு, அவர்களின்

08

## அநுரகுமார திசாநாயக்க குறித்த சில குறிப்புகள்...

முழுப்பெயர்: திஸாநாயக்க முதியன்சலாகே அநுரகுமார திசாநாயக்க
பிறந்த திகதி: 1968.11.24
பிறந்த ஊர்: தம்புத்தேகம
ஆரம்பக் கல்வி: தம்புத்தேகம காமினி வித்தியாலயம்
உயர்கல்வி: தம்புத்தேகம மத்திய கல்லூரி
பல்கலைக்கழகம்: களனி பல்கலைக்கழகம்
1997 இல் சோஸலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர்
1997 இல் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினர்
1998 இல் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர்
1998 இல் மத்திய மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டி
2000 இல் பாராளுமன்றத்துக்கு தெரிவு
2004 இல் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவு, விவசாய அமைச்சர்
2008 இல் ஜே.வி.பியின் பாராளுமன்ற குழு தலைவர்
2010 இல் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம்

08

## ஜனாதிபதியாக அநுர இன்று சத்தியப்பிரமாணம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க இன்று(23) சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

புதிய ஜனாதிபதியின் சத்தியப் பிரமாண நிகழ்வு, கொழும்பு காலி முகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் காலை 09 மணிக்கு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப கட்டமாக 15 அமைச்சுகள் புதிய ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படவுள்ள

08

## அமெரிக்க தூதரகம் இன்று மூடப்படும்




கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் இன்று (23) மூடப்பட்டிருக்குமென தூததரகம் நேற்று (22) அறிவித்துள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இன்றைய தினத்தை விசேட

08



03

**நான் அன்பு வைத்துள்ள இலங்கையெனும் பாசமிகு குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்**



03

**அமைதியான ஒரு தேர்தலாக வரலாற்றில் இடம்பிடிக்கும்**
PAFFREL அமைப்பு பாராட்டு

ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள

## அநுரகுமார திசாநாயக்கவுக்கு அலிசப்ரி வாழ்த்து தெரிவிப்பு



தேர்தலில் வெற்றியீட்டியுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார வெற்றிபெறக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அமைச்சர் அலி சப்ரி தனது உத்தியோகப்பூர்வ

08

## பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மீள அமுல்படுத்தப்படமாட்டாது

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பையடுத்து நேற்று முன் தினம்(21) இரவு அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று(22) நண்பகல் 12 மணிக்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் அது நீடிக்கப்பட

08

## தென்மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இராஜினாமா

### கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி தேர்தல் முடிவுகளையடுத்து தென்மாகாண ஆளுநரான முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று (22) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்துள்ளார்.

08

தேர்தலில் அமோக வெற்றியீட்டிய

## அநுரவுக்கு சுமந்திரன் வாழ்த்து தெரிவிப்பு

### தோல்வியை ஏற்றது ஐ.ம.சக்தி



ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆலோசனைக்

08

# மக்களால் பெரும் எதிர்பார்ப்போடு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அனுரகுமார திசாநாயக்க

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைவரும், ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அபேட்சகருமான அநுரகுமார திசாநாயக்கா இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 09 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் ஊடாக இவர் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். இவரது தெரிவை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் உத்தியோகபூர்வமாக நேற்று அறித்தார்.

ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த இத்தேர்தலின் நிமித்தம் நாடெங்கிலும் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றது.

அதன் ஊடாக 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 வாக்குகளையும் ஒரு இலட்சத்து 5ஆயிரத்து 264 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார். இவர் மொத்தம் 57 இலட்சத்து 40ஆயிரத்து 179 வாக்குகளைப் பெற்று இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். அதாவது எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அபேட்கருமான சஜித் பிரேமதாசவை 12 இலட்சத்து 09 ஆயிரத்து 227 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார் அனுரகுமார திசாநாயக்க.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 39 பேர் இத்தேர்தலில் போட்டியிட்ட போதிலும் அவர்கள் அனைவரையும் பின்தள்ளி இவர் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வெற்றியின் ஊடாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா இந்நாட்டின் அரசியலில் தனியிடம் பிடித்துள்ளார். அத்தோடு சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றின் திருப்புமுனைக்கும் அவர் வித்தூன்றியுள்ளார். இதன் ஊடாக நாட்டின் புத்தெழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் அவர் வழிவகுத்துள்ளார்.

அனுரகுமார திசாநாயக்கவின் வெற்றியின் ஊடாக இந்நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இற்றை வரையும் நடைமுறையில் இருந்து வந்த கட்சி அரசியல் முறைமைக்கு மாற்றமாக வித்திடப்பட்டிருக்கிறது.

1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மாவட்டத்தின் தம்புத்தேகமவுக்கு அருகிலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமத்தில் ஒரு தொழிலாளியின் மகனாக திஸாநாயக்க முதியன்சலாகே அநுர குமார திஸாநாயக்க பிறந்தார். இவரது தயார் ஒரு இல்லத்தரசியாவார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தமது கல்வியை தம்புத்தேகம காமினி மத்திய மகாவித்தியாலயத்திலும் தம்புத்தேகம மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கற்ற இவர் பல்கலைக்கழக பிரவேசத்தை பெற்றார். களனிப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பிரில் கற்று பட்டதாரியானார்.

அதேநேரம் பாடசாலைக் காலம் முதலே மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளிலும் இவர் ஈடுபடலானார். அதன் ஊடாக இவர் சொற்ப காலத்தில் தீவிர அரசியல் செயற்பாட்டாளர் ஆனதோடு 1987 முதல் முழு நேர அரசியல் பங்காளர் ஆனார்.

அதே காலப்பகுதியில் இவருக்கு பேராதனைப் பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனால் அன்றைய அச்சுறுத்தல் மிக்க சூழலில் பல்கலைக்கழகத்தில் இருந்து அவர் வெளியேறினார். அதனால் அவர் ஒரு வருடம் கழித்து 1992 இல் களனி பல்லைகழகத்திற்கு மாற்றப்பட்டு பௌதீகவியல் பிரிவில் கற்று பௌதீகவியல் பட்டதாரியாக வெளியானார்.

ஜே.வி.பி ஊடாக இடதுசாரி அரசியலில் பிரவேசித்த இவர் ஜே.வி.பியின் தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்த நிலையில் 1995 இல் சோசலிஷ மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ஆனார் அனுரகுமார திசாநாயக்கா. அத்தோடு மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1998 இல் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினரானார்.

இதேவேளை 1994 இல் ஜனாதிபதித் தேர்தல் ஊடாக மக்கள் விடுதலை முன்னணி பிரதான அரசியல் நீரோட்டத்தில் பிரவேசித்தது. அதனைத் தொடர்ந்து அநுர திஸாநாயக்காக 2000 இல் பாராளுமன்ற உறுப்பினரானார். அன்று தொடக்கம் இற்றை வரையும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார் இவர்.

அதேநேரம் 2001 இல் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய அரசியல் இருந்து எதிர்க்கட்சிக்கு சென்றதும் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசுக்கு மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிது காலம் ஆதரவு நல்கினர்.

அந்த வகையில் 2004 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமைத்தது. அந்த முன்னணியில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட இவர், ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 868 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். அதன் ஊடாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் விவசாய அமைச்சராகப் பதவியேற்றார்.

என்றாலும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பி கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாட்டினால் 16.06.2005 இல் இவர் உட்பட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த அமைச்சர்களும் தங்களது அமைச்சு பதவிகளை இராஜிநாமாச் செய்தனர்.

பாராளுமன்ற அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த அநுர திஸாநாயக்கா, மக்கள் விடுதலை முன்னணியின் 17 ஆவது மாநாட்டில் கட்சியின் தலைவராக 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதி நியமனம் பெற்றார். அதன் பின்னர் 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 65 ஆயிரத்து 966 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரான இவர், 2020 பாராளுமன்றத் தேர்தலிலும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 49 ஆயிரத்து 814 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

இந்தச் சூழலில் 2015 செப்டம்பர் முதல் 2018 டிசம்பர் வரையான காலப்பகுதியில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவாகவும் பாராளுமன்றத்தில் கடமையாற்றினார்.

இந்நிலையில் நாட்டில் பரந்த அரசியல் அமைப்பை மக்கள் விடுதலை முன்னணி தலைமையில் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்தார். இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அதனடிப்படையில் அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி 2019 ஒகஸ்ட் 18 ஆம் திகதி அதன் ஜனாதிபதி அபேட்சகராக இவரை அறிவித்தது. அந்தத் தேர்தலில் 4 இலட்சத்து 18 ஆயிரத்து 553 வாக்குகளைப் பெற்ற அநுர குமார திஸாநாயக்கா மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை ஆட்சி பீடமேற்றுவதற்காக இவர், இரவு பகல் பாராது அயரது உயராது உழைத்து வந்தார். இந்தப் பின்புலத்தில் 2024 ஜனாதிபதி தேர்லில் தேசிய மக்கள் சக்தியின் அபேட்சகராக 2023 ஒகஸ்ட் 23 ஆம் திகதியே அறிவிக்கப்பட்டார்.

அதற்கேற்ப 2024 செப்டம்பர் 21 ஆம் திகதி இந்நாட்டின் 09 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப வேட்புமனுவை சமர்ப்பித்து இத்தேர்தலில் போட்டியிட்டார். இதன் நிமித்தம் நாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' தொனிப்பொருளில் 26.08.2024 இல் வெளியிட்டார். நாட்டிலுள்ள அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்ட இவ்விஞ்ஞாபனம் வீண் விரயம், ஊழல் மோசடி, திருட்டு என்பவற்றை ஒழித்து வளமான வாழ்வை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. அதற்கான அதற்கான அனைத்து திட்டங்களையும் இவ்விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ளது.

இந்நாடு சுதந்திரம் அடைந்து 76 வருடங்கள் கடந்தும் நாடு இன்னும் முன்னேற்றமடைந்ததாக இல்லை. அதற்கு நாட்டில் புரையோடிப்போயுள்ள ஊழல், மோசடிகளும், வீண் விரயங்களும்தான் மூல காரணம். இதனை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா நாட்டு மக்கள் முன் தெளிவாக முன்வைத்தார். இந்நாடு பின்னடைந்திருப்பதற்கு அதுவே காரணம் என்பதுதான் நாட்டின் பெரும்பாலான மக்களின் கருத்தும் ஆகும்.

அதனால் ஊழல், மோசடிகளையும் வீண்விரங்களையும் ஒழித்து நாட்டை வளமானதாகவும் சுபீட்சம் மிக்கதாகவும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு நாட்டு மக்களில் பெரும்பகுதியினர் அங்கீகாரம் அளித்து ஆணை வழங்கியுள்ளனர். இதன் ஊடாக அதிகூடிய வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியாகியுள்ளனர்.

உண்மையில் நாடு வளமானதாகவும் பொருளாதார சுபீட்சம் மிக்கதாகவும் இருந்திருந்தால் கடந்த காலத்தில் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி இருக்க முடியாது. அவ்வாறான நிலைக்கு நாடும் மக்களுக்கும் இனியொரு போதும் உள்ளாவதைத் தவிர்ப்பதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது வளமான வாழ்க்கை அழகான நாடு என்ற தொனிப்பொருளிலான தேர்தல் விஞ்ஞாபனம்.

ஆகவே நாட்டு மக்கள் புதிய எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் தெரிவு











மர்லின் மரிக்கார்...

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.44
லுஹர் - 12.04
அஸர் - 03.16
மஃரிப் - 06.07
இஷா - 07.17

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் புரட்டாதி 07
ராகுகாலம் : காலை : 7.32 - 9.02வரை
சுபநேரம் : பகல் : 12.02 - 1.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# நான் அன்பு வைத்துள்ள இலங்கையெனும் பாசமிகு குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்

## பதவியிலிருந்து நீங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்தி



கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின்படி, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் எனவும், அவருக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் பதவியிலிருந்து நீங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட ஊடக அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எனும் அன்புக்குரிய குழந்தையை சவால்மிகு தொங்கு பாலத்தின் ஊடாக தான் இதுவரை பாதுகாப்பாகக் கொண்டுவந்துள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதி அந்தக் குழந்தையை இன்னும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் ஊடாகக் கொண்டுசெல்ல முடியும் என நம்புவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பதவியிலிருந்து நீங்கும் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அன்புள்ள பிரஜைகளே, செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்மானமொன்றை வழங்கியுள்ளனர். நாம் அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில் இருந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன்.

அந்தச் சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயே நான் அந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பினை நான் சிறப்பாக நிறைவேற்றினேன்.

இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது. எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காக செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன்.

இந்த நாட்டின் ஆட்சியாளர் என்ற வகையில் வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன். நான் சரியான பாதையில் சென்று மக்களின் துயரங்களை முடிந்தளவு நீக்கினேன். புதிய ஜனாதிபதி அவர்களும் அவருக்குக் கிடைத்த மக்கள் ஆணையின் பிரகாரம் சரியான பாதையினைத் தெரிவு செய்து மக்களின் துயரங்களை நீக்குவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

மிகவும் சவால் மிகுந்த தொங்கு பாலத்தில் இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையினை நான் முடிந்தளவு

08

# பல நூற்றாண்டுகால கனவு நனவாகி கொண்டிருக்கிறது

## ஜனாதிபதியாக வெற்றிபெற்ற அநுரகுமார திசாநாயக்க செய்தி



பல நூற்றாண்டு காலமாக நாங்கள் கண்ட கனவே இறுதியில் நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கனவை நனவாக்குவதற்காக பல சிரமங்களுக்கு மத்தியில் இலட்சக்கணக்கான எண்ணிக்கையிலான மக்கள் அனைவரும் கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சி பலனளித்துள்ளதாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்க தான் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

என்னால் உங்களுக்கு நன்றிகூற முடியாது. அதற்கான காரணம் அது என்னுடையதல்ல, எமது கூட்டுமுயற்சியின் பெறுபேறாகும். இது எம்மனைவரினதும் வெற்றியாகும்.

நாங்கள் மாத்திரமல்ல, இந்த வெற்றிக்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இரத்தம், கண்ணீர், வியர்வையை மாத்திரமன்றி உயிர்களைக்கூட தியாகம் செய்துள்ளார்கள். எதிர்பார்ப்புகள் நிறைந்த உங்களின் இலட்சக்கணக்கான விழிகள் எமக்கு தெம்பூட்டுகின்றன. இலங்கையின் வரலாற்றினை புதிதாக எழுத வேண்டுமென எமக்கு அழைப்பு விடுக்கின்றன.

கனவை முழுமையாகவே யதார்த்தபூர்வமானதாக அமைத்துக் கொள்வதற்காக இந்த மண்ணுக்கு புத்தம்புதிய ஆரம்பமொன்று அவசியமாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம்களாகிய எம்மனைவரதும் ஒன்றுசேர்ந்த வலிமை நாம் ஆரம்பிக்கின்ற யுகத்தின் அடிக்கல்லாக அமையும். அதன் மீதுதான் புதிய மறுமலர்ச்சி யுகம் கட்டியெழுப்பப்படும். வாருங்கள் நாங்கள் அதற்காக கைகோர்த்துக் கொள்வோம்!

என ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# புதிய ஜனாதிபதியாக பதவியேற்கும் அநுரகுமாரவுக்கு ஹரின் வாழ்த்து



நாட்டு மக்களின் விருப்பத்தை நான் புரிந்து கொண்டதால், பெரும்பான்மை முடிவை முழுமையாக மதித்து தலை வணங்குவதாக, புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஹரின் பெர்னாண்டோ வாழ்து தெரிவித்துள்ளார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றுவதில் மிகவும் பெறுமதியான பங்கை ஆற்றிய ரணிலுக்கு ஆதரவாக இருந்தமை பெருமையென ஜனாதிபதி ஆலோசகர் ஹரின் பெர்னாண்டோ தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ரணிலுடன் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்டு அநுரவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். குறித்த பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என் அரசியல் பயணத்தில் நான் எப்போதும் சவால்களை ஏற்றுக் கொண்டேன். உண்மையான தலைமை என்பது பெரிய நன்மைக்காக ஆபத்துக்களை எடுப்பதைக் குறிக்கிறது என நம்புகிறேன். நமது நாடு அதன் இருண்ட தருணங்களை எதிர்கொண்டபோது, மீட்சியை நோக்கி நம்மைத் திசைதிருப்ப தேவையான கடினமான முடிவுகளை எடுத்தேன். தோல்வியை எதிர்கொண்டாலும் அந்த தேர்வுகள் பற்றி எனக்கு எந்த வருத்தமும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க வெற்றியடையாமல் இருக்கலாம். ஆனால், அவர் எமது தேசத்தை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றுவதில் மிகவும் பெறுமதியான பங்கையாற்றினார். அவரை ஆதரித்து அந்தச் செயற்பாட்டில் நான் வகித்த பங்கைப் பற்றி பெருமைப்படுகிறேன்.

ஒரு நாடாக நாங்கள் எதிர்கொண்ட மிகவும் சவாலான தருணங்களில் உங்கள் ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் நன்றி. மக்களின் விருப்பத்தை நான் புரிந்து கொண்டதால், பெரும்பான்மை முடிவை முழுமையாக மதித்து, தலை வணங்குகிறேன். புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### 2,26,343 வாக்குகளைப் பெற்ற

# தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் எம்.பி



நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பினரால் வட, கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்ட பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் மொத்தமாக 226,343 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இது செல்லுபடியான வாக்குகளில் 1.70 சதவீதமாகும். மிகக் காத்திரமானதாகக் கருதப்பட்ட இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குறித்த சில தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் பொது வேட்பாளராகக் களமிறக்கியிருந்தன.

கிழக்கு மாகாணங்களில் செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேல், அதாவது சுமார் 700,000 வாக்குகளைப் பெறவேண்டும் என்பதை இலக்காகக்கொண்டு பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் போட்டித்தன்மை மிக அதிகமான இத்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் மொத்தமாக 226,343 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

# 44 மில். அமெ. டொ. கடனை திருப்பி செலுத்திய இலங்கை

இலங்கை அண்மையில், 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவுக்கு திருப்பிச் செலுத்தியதுடன், ஆசிய கிளியரிங் யூனியனுக்கு செலுத்த வேண்டிய 2.2 பில்லியன் டொலர் கடனுடன் மேலதிகமாக 200 மில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்தியதாக நிதி அமைச்சு தரப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கி, ஆசிய கிளியரிங் யூனியனின் கடன் மற்றும் இந்தியாவின் 400 மில்லியன் டொலர் பரிமாற்றத்தை தவணைகளில் திருப்பிச் செலுத்தி வருகிறது.

இதன்படி, 02 பில்லியன் டொலர்களை ஆசிய அமைப்புக்கும், 400 மில்லியன் டொலர்கள் இந்திய ரிசர்வ் வங்கிக்கும், இலங்கை மத்திய வங்கி செலுத்த வேண்டியுள்ளது.

உத்தியோகபூர்வ தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை ஏற்கனவே 225 மில்லியன் டொலர்களை இந்திய ரிசர்வ் வங்கிக்கு திருப்பிச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 2024 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல்

# அமைதியான ஒரு தேர்தலாக வரலாற்றில் இடம்பிடிக்கும்

## PAFFREL அமைப்பு பாராட்டு



இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தலாக, இவ்வாண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பிடிக்குமென சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தலுக்கான (PAFFREL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலையடுத்து நேற்று (22) ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இம்முறை நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதி தேர்தலில், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமையும் குறைவென அவர் சுட்டிக்காட்டினார். நாட்டில் பொலிஸ் மாஅதிபர் இல்லாதபோதும் தேர்தல்களை நடத்துவதற்கு பொலிஸார் தம்மால் இயன்ற ஆதரவை வழங்கியதாகவும் அவர் கூறினார். இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் 75 வீதம் முதல் 80 சதவீதமான வாக்குகள் பதிவாகியிருந்ததாகவும் பஃவ்ரல் மேலும் தெரிவித்துள்ளது.

### அநுரவின் வெற்றி பன்மைத்துவத்துடன்

# சமூக நீதியை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பம்



அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகள், புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும் என தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்துக்கூறி, மனோகணேசன் தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' பதிவொன்றை இட்டுள்ளார்.

அப்பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

'மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். அதே போன்று சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாம் கடுமையாகப் பணியாற்றிய மத்திய, மேல், சப்ரகமுவ, ஊடக மாகாணங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு நன்றி கூறுகின்றோம். ஜனநாயக செயன்முறை வெளிப்பட்டிருக்கிறது. அநுரகுமார திசாநாயக்கவின் இந்த வெற்றி பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பமாக அமையும் என நம்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

### தொடர்ந்தும் அமைதியை கடைப்பிடிக்க

# பொது மக்களிடம் பொலிசார் வேண்டுகோள்

## பேரணிகள், ஊர்வலங்கள், அநாவசிய ஒன்று கூடல்களுக்கும் தடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேர்தல் வெற்றியை அமைதியாக கொண்டாடுமாறும் பொதுமக்கள் மத்தியில் அமைதியை சீர்குலைக்கும் செயற்பாடுகள் தொடர்பாக பொலிசார் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் குறிப்பிடத்தக்க பாரதூரமான எத்தகைய சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பதை குறிப்பிட்ட அவர், ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிக அமைதியான முறையில் நடைபெற்றதாகவும் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதையடுத்து பொதுமக்கள் தொடர்ந்தும் அமைதியைக் கடைப்பிடிப்பது அவசியமெனவும் அவர் வலியுத்தியுள்ளார்.

குழுக்களாக ஒன்று கூடுதல், வாகனப் பேரணி உட்பட ஏனைய பேரணிகளும் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டார்.

அமைதியும் சுதந்திரமானதுமான தேர்தலை

08

# முப்பதாவது ஆண்டில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்: அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்க பெரும்பணி



சிட்னி பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க பட்டதாரிகள் குழுவினரால் 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் முப்பதாவது வருடமாக நடத்தப்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

புலம்பெயர் மண்ணில் தமிழ் மாணவர்கள் தமிழில் பேசவும் எழுதவும் ஊக்குவிக்கவும், தமிழ்மொழி என்றென்றும் தமிழ் பேசும் மக்கள் நாவிலும் இல்லங்களிலும் ஒலித்துக் கொண்டே இருக்கவுமென இந்த பெருமுயற்சியினை அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

**புலம்பெயர் மண்ணில் தாய்மொழி:**

புலம்பெயர் மண்ணில் தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழ்மொழியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். அதே போன்று பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் என்றென்றும் மதிக்கப்பட வேண்டியவை. தமிழ்மொழி போன்ற உலகின் மூத்த மொழி நிச்சயம் பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும். அதனைப் பாதுகாப்பதற்கான வளமும், வலிமையும் இன்றைய சந்ததியினரிலேயே தங்கியுள்ளன.

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழி, பல நூற்றாண்டுகளாக பல்வேறு போர்களையும், பிறமொழித் தாக்குதல்களையும் எதிர்கொண்டு, சமாளித்து நின்று நிலைத்த மொழியாகும். எமது தாய் மொழியான தமிழ் தொடர்ந்தும் அவ்வாறு நிலைகொள்ள வேண்டுமாயின், புலம்பெயர் மண்ணிலும் நிலைத்துநிற்க பெரும் பணிகள் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இத்தகைய செழிமையான பணியினை தற்போது அவுஸ்ரேலியாவில் முப்பது ஆண்டுகளாக தொடரும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சான்று பகர்கின்றன. அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றமை புலம்பெயர் மண்ணில் வரலாற்றுச் சாதனையாக அமைந்துள்ளது.

**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்க பெரும்–பணி:**

எதிர்கால சந்ததியினருக்கு தேவையாய் அமையும் இப்போட்டிகளிலே தமிழ் இளையோர் பெருமளவிலே பங்குபற்றி தங்களின் தமிழ் ஆற்றலை வளர்த்து வருகின்றமைக்கு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் சேவை பாராட்டுதற்குரியது.

ஒவ்வொரு வருடமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு கொள்வர். அத்துடன் இப்போட்டிகள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளின் எல்லா மாநகரங்களில் இந்தப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. மாநில மற்றும் தேசிய மட்டங்களில் நடத்தப்படுகின்ற இப்போட்டிகளின் பிரதான நோக்கமாவது தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணிக் காப்பாற்றுவதோடு, எதிர்வரும் சந்ததிகளுக்கும் இவற்றை எடுத்துச் செல்லக்கூடிய தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த இளைஞர்களை உருவாக்குவதாகும்.




அத்தோடு இளைய தலைமுறையினர் எந்நிலையிலும் தளராமல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை அறிவூட்டும் வகையிலும், தோல்விகளைக் கண்டு தளர்ந்து போகாமல், எதிர்த்துப் போராடக் கற்றுக் கொள்ள உத்வேகம் அளிக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மூன்று தசாப்தங்களைத் தாண்டிப் பயணிக்கும், அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கப் போட்டிகளில், தமிழை நேசிக்கும் தலைமுறைகளின் உருவாக்கத்துக்கு வழியமைக்க, வருடந்தோறும்

08

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்காயும் கேடீன் பது

பொறாமைக் குணம் கொண்டவர்களுக்கு அவர்களை வீழ்த்த வேறு பகையே வேண்டாம். அந்தக் குணமே அவர்களை வீழ்த்தி விடும்.

## மக்களின் நம்பிக்கையை வென்றுள்ள நாட்டின் புதிய தலைவர் அனுரகுமார

சுதந்திர இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நேற்று உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கு ஏற்ப இன்று அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொள்வார் என்று தேசிய மக்கள் சக்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பதவி நீங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 39 அபேட்சகர்கள் போட்டியிட்ட இத்தேர்தலில் ஒரு கோடி 33 இலட்சத்து 19 ஆயிரத்து 616 பேர் வாக்களித்தனர். அவர்களில் 3 இலட்சத்து 300 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்ட போதிலும், 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 பேரின் வாக்குகளுடன் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 264 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார். இவர் மொத்தம் 57இலட்சத்து 40ஆயிரத்து 179 வாக்குகளுடன் ஜனாதிபதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை 12 இலட்சத்து 9 ஆயிரத்து 227 வாக்குகள் வித்தியாசத்தில் இவர் வெற்றி பெற்றுள்ளார். அதாவது நாட்டிலுள்ள 22 மாவட்டங்களில் 15 மாவட்டங்களை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தேர்தலில் சஜித் பிரேமதாச 7 மாவட்டங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

அனுரகுமார திசாநாயக்கவின் வெற்றி நாட்டிலும் நாட்டு மக்கள் மத்தியிலும் புதிய எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மாவட்டத்தின் தம்புத்தேகவில் சாதாரண குடும்பமொன்றில் 1968 இல் பிறந்த இவர், களனிப் பல்லைக்கழகத்தின் பௌதிகவியல் பட்டதாரியாவார்.

பாடசாலைக் காலம் முதல் மக்கள் விடுதலை முன்னணி ஊடாக அரசியல் செயற்பாடுகளில் பிரவேசித்த இவர், 2000 களில் தேசிய அரசியலில் பிரவேசித்தார். அதன் ஊடாக பாராளுமன்ற உறுப்பினரான இவர் அமைச்சர், எதிர்க்கட்சிப் பிரதம கொரடா உள்ளிட்ட பதவிகளையும் வகித்துள்ளார்.

2000 காலப்பகுதி முதல் பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டுவரும் இவர், 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். இம்முறை தேர்தலில் போட்டியிட்டு நாட்டின் 09 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்று கடமைகளை ஏற்றுக் கொள்கின்றார்.

இந்நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் இம்முறைதான் முதல் தடவையாக இரண்டாவது விருப்புவாக்குகள் எண்ணப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு வெற்றி பெற்ற ஜனாதிபதி அறிவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிடுகையில், இத்தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள், ஜனாதிபதி தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய 50 சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளத் தவறியதன் விளைவாக விருப்பு வாக்குகளை எண்ணி வெற்றியாளரை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தார். சஜித் பிரேமதாசவை விடவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா 12 இலட்சத்து 71 ஆயிரத்து 880 வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அபேட்சராக இத்தேர்தலில் போட்டியிட்ட அவர், நாட்டின் முன்னேற்றத்தையும் மக்களின் வளமான வாழ்வையும் இலக்காகக் கொண்ட தேர்தலை விஞ்ஞாபனத்தை 'வளமான நாடு, அழகான வாழ்க்கை' என்ற தொனிப்பொருளில் மக்கள் முன்வைத்தார்.

இந்த விஞ்ஞானபம் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் கவனம் செலுத்தியதாக அமைந்துள்ளது. குறிப்பாக நாட்டை அனைத்துத் துறைகளிலும் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டுள்ளது. அதாவது ஏனைய அபேட்சகர்கள் முன்வைத்த விஞ்ஞாபனங்களையும் விடவும் அனுரகுமார திசாநாயக்கவின் விஞ்ஞாபனமே மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த விஞ்ஞாபனம் நாட்டுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கும் வகையில் அமைந்திருப்பதே இதற்கான காரணமாகும். அதன் விளைவாக நாட்டின் எல்லா இன மத மக்களதும் ஆணையைப் பெற்ற விஞ்ஞாபனமாக இத்தேர்தல் விஞ்ஞாபனம் விளங்குகிறது. குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அபேட்சகரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இவ் வெற்றியில் தமிழ் முஸ்லிம் மக்கள் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு பங்களிப்பு நல்கியுள்ளனர். ஆகவே நாட்டினதும் மக்களினதும் எதிர்பார்ப்பு வளமான நாடு அழகான வாழ்க்கையாகும்.

அதேநேரம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நாட்டுக்கும் மக்களுக்கும் அளித்துள்ள வாக்குறுதிகள் தெளிவானவையாகவும் நடைமுறைச் சாத்திய மானவையாகவும் அமைந்துள்ளன.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள 9 ஆவது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க

இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகியுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, பொதுவாக ஏ.கே.டி என்று இலங்கை அரசியலில் அழைக்கப்படுகிறார். அவர் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவராவார். அவர் ஜனதா விமுக்தி பெரமுன (2014 முதல்) மற்றும் தேசிய மக்கள் சக்தி (2019 முதல்) ஆகியவற்றின் தற்போதைய தலைவரும் ஆவார்.



அனுரகுமார திசாநாயக்க 2019 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். மீண்டும் 2024 இல் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தற்போது வெற்றி பெற்றுள்ளார்.

அனுரகுமார திசாநாயக்க தனது இளமைப் பருவத்திலிருந்தே ஜே.வி.பியில் ஈடுபாடுள்ளவராக இருந்து வந்தார்.

1995 இல் ஜே.வி.பியின் அரசியல் பிரிவில் இணைவதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் மாணவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் அவர் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

2004 முதல் 2005 வரை விவசாயம், கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராகவும், 2015 முதல் 2018 வரை எதிர்க்கட்சியின் தலைமை கொறடாவாகவும் பணியாற்றியுள்ளார். பெப்ரவரி 2, 2014 அன்று நடைபெற்ற கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டில் ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அனுரகுமார திசாநாயக்க 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தம்புத்தேகம கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். அவர் தம்புத்தேகம காமினி மகாவித்தியாலயம் மற்றும் தம்புத்தேகம மத்திய கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைப் பெற்றார். அங்கிருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றார்.

இளமைக் காலத்தில் இருந்து ஜே.வி.பியில் கட்சியில் தீவிரமாக ஈடுபட்டார். 1987 இல் ஜே.வி.பியில் இணைந்து, மாணவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 1987 முதல் முழுநேர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.1995 இல் அவர் சோசலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளரானார். ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவிலும் நியமிக்கப்பட்டார். அவர் 1998 இல் ஜே.வி.பியின் அரசியல் பிரிவுக்கு நியமிக்கப்பட்டார்.

2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் இருந்து எம்.பியாக தெரிவானார். 2004 பாராளுமன்றத் தேர்தலில், ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒரு அங்கமாகப் போட்டியிட்டது. இதில் அவர்கள் 39 இடங்களை கைப்பற்றினர். ஸ்ரீ.ல.சு.க_ஜே.வி.பி கூட்டு அரசாங்கத்தில் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு நடந்த முதல் ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்தமாக 75 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாயின. அத்தேர்தலில் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக வெற்றிபெற்றுள்ளார்.

# பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறிவரும் சவுதி அரேபியா

சவுதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தினம் தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றது. இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் ஆல் சஊத், இளவரசரும் பிரதமருமான முஹம்மத் இப்னு சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் ஆல் சஊத் மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி மற்றும் சவுதி மக்கள் இக்கொண்டாட்டத்தில் பங்கேற்கின்றனர்.






பொருளாதார ரீதியிலும், அபிவிருத்தியிலும் பாரியளவில் முன்னேற்றமடைந்துள்ள நாடாக சவுதி அரேபியா திகழ்கின்றது. மன்னரதும் இளவரசரதும் தலைமை மற்றும் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் 'நியோம்', 'தலைன், '2030 விஷன்' 2030 எக்ஸ்போ போன்ற பொருளாதார வேலைத்திட்டங்கள் சவுதியின் புகழை பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் பெரிதும் உயர்த்தியுள்ளன.

சவுதி அரேபியாவானது பிராந்திய நாடுகளுடன் மாத்திரமல்லாமல் உலகின் அனைத்து நாடுகளுடனும் சிநேகபூர்வமான நட்புறவைப் பேணி வருகிறது. அந்த வகையில் இலங்கைக்கும் சவுதிக்கும் இடையிலான நட்புறவு மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி உட்பட பல்துறைகளின் முன்னேற்றங்களுக்கும் பாரிய நிதிப்பங்களிப்பை சவுதி நல்கி வருகிறது. கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காக்கைவலிப்பு நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான நரம்பியல் சிகிச்சை பிரிவு உள்ளிட்ட அதி நவீன கட்டடங்கள், கிண்ணியா பாலம், கிழக்குக்கான நீண்ட நெடுஞ்சாலை, அரச பல்கலைக் கழகங்களுக்கான கட்டடங்கள், சுனாமி, கொரோனா மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போதான மனிதாபிமான உதவிகள், சவுதி அரேபிய பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு மேற்படிப்பைத் தொடர ஒவ்வொரு வருடமும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றமை, நோன்பு காலங்களுக்கென ஆயிரக்கணக்கான தொன் பேரீச்சம்பழத்தை இலவசமாக வழங்குகின்றமை என்பன சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

அத்தோடு இலங்கையில் முதற் தடவையாகப் பெருந்தொகைப் பணப்பரிசில்களுடன் கூடிய குர்ஆன் மனனப் போட்டி, இலங்கை_ சவுதி அரேபிய பாராளுமன்ற நட்புறவு ஒன்றியம், இலங்கை சவுதி அரேபிய பொருளாதார கூட்டு ஒப்பந்தங்கள், எல்லைகள் இல்லாத மனிதநேயத்தை நோக்கி என்ற தொனிப் பொருளில் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஊடாக இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும்மக்களுக்கு இலவச கண் சத்திரசிகிச்சைகள் போன்றனவும் சவூதியின் உதவிகளில் அடங்குகின்றன.

முஸ்லிம்களின் புனிதஸ்தலங்கள் அமைந்திருப்பதால் உலக முஸ்லிம்களின் மனதில் தனியிடம் பிடித்த நாடும் அதுவாகும். உலகில் முஸ்லிம் அல்லாத நாடுகளின் நலன் விடயங்களிலும் மிகுந்த அக்கறை செலுத்தி அந்நாடுகளோடும் பரஸ்பர உறவுகளைப் பேணி வருகிறது. உலக வல்லரசு நாடுகளுடனும் மிகப்பலமான உறவுகளைக் கொண்டுள்ள சவுதியுடன், வல்லரசு நாடுகளும் நெருக்கமான உறவைப் பேணி வருகின்றன.

மேலும் தீவிரவாதம் பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கியெறிந்து சகிப்புத் தன்மை சகவாழ்வை உலகில் நிலைநாட்டிய மிகச் சிறந்த நாடாகவும், போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பில் வெற்றிகண்ட நாடாகவும் திகழ்கிறது சவுதி.

மேலும் நிர்க்கதியான நாடுகளுக்கு உதவுதல், அந்நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த அந்நாடுகளின் திறைசேரிகளில் வட்டியில்லா நீண்ட கால தவணையில் கடன் அடிப்படையில் பல பில்லியன்களை வைப்பிலிடுதல், உள்நாட்டுப் போர் நடக்கும் நாடுகளில் தலையிட்டு அங்கு சமாதானத்தை நிலைநாட்டுதல் போன்றவானான ஒத்துழைப்புக்களை முன்னெடுக்கிறது. குறிப்பாக பலஸ்தீன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் சவுதி முன்னணியில் திகழுகிறது. அத்தோடு நவீன கண்டுபிடிப்புகள், ஏ ஐ தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு போன்றவற்றிலும் சவுதி மிக முன்னேற்றமடைந்த நாடாக விளங்குகிறது.

சவுதியை பொருளாதார மற்றும் இதர அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் நோக்கில் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆரம்பித்த 2030 விஷன் எக்ஸ்போ 2030 போன்றன குறிப்பிடத்தக்கவையாகும். பொருளாதார ரீதியில் சவுதி அரேபியா தன்னிறைவடைந்து வருகின்றது. இதற்கு ஜி 7 நாடுகள் அமைப்பு மற்றும் ஜி 20 அமைப்பு நாடுகளின் மாநாடுகள் நல்ல எடுத்துக்காட்டுகளாகும். உலகிலுள்ள பெற்றோலியவள நாடுகளில் சவுதியும் ஒன்றாகும். பெற்றோலிய வளம் சாராத உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சவுதி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறான சூழலில் 94 வது தேசிய தினத்தை சவுதி கொண்டாடுகின்றது.



அஷ்ஷைக்
எம்.எச் ஷைஹுத்தீன்...
பி.ஏ. மதனி, பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

# முஸ்லிம்களின் இரு புனித தலங்களை கொண்டுள்ள பெருமைக்குரிய நாடு சவுதி

## 94 ஆவது தேசியதின கொண்டாட்டம் இன்று



சவுதி அரேபியாவின் தேசிய தினம் மற்றும் ஸ்தாபக தினம் என்பன வெவ்வேறுபட்ட இரு விடுமுறை தினங்களாகும். சவூதி அரேபியா தேசத்தின் உருவாக்கம் 3 காலகட்டங்களைக் கொண்டது. 1727 பெப்ரவரி 22 இல் முதலாம் சவுதி இராச்சியத்தின் மன்னரான இமாம் முஹம்மது பின் சஊத் தன் தந்தை சுஊத் அவர்களுக்குப் பின் ரியாத் மாகாணத்தின் திர்இய்யா என்னும் பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முதலாம் சவூதி இராச்சியத்தை உருவாக்கிய தினமே சவுதியின் ஸ்தாபக தினம் என அழைக்கப்படுகிறது.

பின்னாளில் மன்னர் அப்துல் அஸீஸ் 1932 இல் அகண்ட நிலப்பரப்பை உள்ளடக்கிய இன்றைய சவுதி அரேபியாவுக்கு தனது பாட்டனார் சஊத் நினைவாக சவுதி அரேபியா என பெயர் சூட்டி தேசத்தை உருவாக்கிய தினமே செப்டம்பர் 23 இல் தேசிய தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

சவுதியின் தேசிய தினத்தை மன்னர் அப்துல் அஸீஸ் தனது ஆட்சிக் காலத்தில் பிரகடனப்படுத்தினார். ஸ்தாபக தினத்தை 2022 இல் தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தினார். இவ்விரு தினங்களும் அந்நாட்டு அரசு விடுமுறை தினங்களாகும். சவுதி அரேபியா அரபிய தீபகற்பத்தில் ஐந்தில் நான்கு பகுதிகளை தனது நிலப்பரப்பாக கொண்டுள்ள மிகப் பெரிய ஒரு நாடாகும். 2250,000 சதுர கிலோமீட்டர் இதன் பரப்பளவாகும். சவுதி அரேபியாவின் நாணயம் சவூதி ரியால் ஆகும். 3. 57 ரியால் ஒரு அமெரிக்க டொலருக்கு நிகரான பெறுமதியைக் கொண்டுள்ளது. உலகின் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடுகளில் சவூதி அரேபியா முதலாம் இடத்தையும் இயற்கை எரிவாயு வளத்தில் 5 ஆம் இடத்தையும் எரிவாயு உற்பத்தியில் 9 ஆம் இடத்தையும் பெறுகின்றது.



2030 தொலைநோக்கு திட்டத்தின்கீழ் சவூதி அரேபியாவை சர்வதேச சுற்றுலாத்தலமாக வடிவமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறே ஹஜ் உம்ராவுக்காக வருடாந்தம் வருகைதரும் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்களுக்கான வசதிகளை செய்வதனூடாகவும் நாடு வருமானம் ஈட்டுகின்றது.

சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் நகரம் சவுதியின் மிகப்பெரிய நகரமாகும். நாட்டின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் இங்குதான் அமைச்சின் அலுவலகங்கள், தூதுவராலயங்கள், அரச மாளிகைகள் ஆலோசனை மண்டபம், மாநாட்டு மண்டபங்கள், சர்வதேச விமானநிலையங்களான மன்னர் காலித், மன்னர் பஹ்த் விமானநிலையங்கள், ராஜதந்திர பிரதிநிதிகளில் வாசஸ்தலங்கள், சவூதிய தேசிய ஒலி, ஒளிபரப்பு நிலையங்கள் , சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் முக்கிய அலுவலகங்கள்அனைத்தும் அமைந்துள்ளன. முஸ்லிம்களின் இரு புனித தலங்களான மக்கா மதினா மற்றும் முஸ்லிம்களின் வணக்கத் திசையாகிய கஃபத்துல்லாஹ் இங்குதான் அமைந்துள்ளன. இஸ்லாமிய வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஏராளமான இடங்கள் இங்கு காணப்படுகின்றன. இறுதித்தூதர் முஹம்மது நபியின் அடக்க ஸ்தலமும் மற்றும் இஸ்லாத்துக்கு தோள் கொடுத்த ஆயிரக்கணக்கான சஹாபாத் தோழர்களும் அடக்கப்பட்டு இருக்கும் புனித மண்ணாகும்.

இஸ்லாமிய குற்றவியல் சட்டங்கள் அதிகம் அமுல்படுத்தப்படும் நாடுகள் வரிசையில் சவுதி அரேபியா முதலிடத்தை வைக்கின்றது. உலகில் மிக அதிகம் பெட்ரோலிய வளத்தை கொண்டுள்ள அதிக பெட்ரோலை உற்பத்தி செய்யும் முதல் நாடாக சவுதி அரேபியா காணப்படுகின்றது. உலகில் மிக அதிக விமானங்களை கொண்டிருக்கும் நாடுகள் வரிசையில் இரண்டாம் இடத்தை சவுதி வகிக்கின்றது.



ஏ.ஜி.எம்.ஜெலீல்...
பகுதித் தலைவர், மதனி, மஃஹதுஸ் ஸுன்னா அறபுக் கல்லூரி, காத்தான்குடி



# ஜனாதிபதி 2024 தேர்தல் முடிவுகள்

## இரத்தினபுரி மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 19,185 | 60.83.% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 6,641 | 21.06% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,675 | 14.82% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 500 | 1.59% |
| செல்லுபடியான வாக்குகள் | 31,539 | 98.01.% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 640 | 1.99% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 32,179 | 98.92% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 32,530 | |

## மொனராகலை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 14,050 | 58.57% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 5,733 | 23.90% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 3,401 | 14.18% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 470 | 1.96% |
| செல்லுபடியான வாக்குகள் | 23,989 | 93.74% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 555 | 2.26% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 24,544 | 98.98% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 24,797 | |

## காலி மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஅனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 25,892 | 64.50% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 7,226 | 18.00% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 5,338 | 13.30% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 863 | 2.15% |
| செல்லுபடியான வாக்குகள் | 40,140 | 97.74% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 927 | 2.26% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 41,067 | 99.11% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 41,437 | |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 14,48 | 67.20% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 3,397 | 16.76% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 2,502 | 11.61% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) 819 3.80% | | |
| செல்லுபடியான வாக்குகள் | 21,549 | 97.96% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 449 | 2.04% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 21,998 | 99.24% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 22,167 | |

## திருகோணமலை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 5,480 | 37.89% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,537 | 31.37% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 3,630 | 25.10% |
| பா. அரியநேத்திரன் (த.பொ,வே) | 431 | 3.98% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 129 | 0.89% |
| செல்லுபடியான வாக்குகள் | 14,463 | 97.86% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 317 | 2.14% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 14,780 | 98.77% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 14.984 | |

## திகாமடுல்ல மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 11,120 | 42.66% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,368 | 28.27% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 6,719 | 25,78% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 318 | 1.22% |
| செல்லுபடியான வாக்குகள் | 26,066 | 98.15% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 491 | 1.85% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 26,557 | 99.17% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 26.773 | |

## வன்னி மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) 4,899 38.38% | | |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 4,257 | 33.35% |
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,092 | 16.39% |
| பா. அரியநேத்திரன் (த.பொ,வே) | 1,160 | 9.09% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 68 | 0.53% |
| செல்லுபடியான வாக்குகள் | 12,764 | 97.38% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 344 | 3.62% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 13,108 | 97.9% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 13,389 | |

## கொழும்பு மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 20.864 | 61.02% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 7,645 | 22.36% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,080 | 11.93% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 561 | 1.64% |
| செல்லுபடியான வாக்குகள் | 34,190 | 97% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,059 | 3% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 35,249 | 98.91% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 35,636 | |

## மாத்தறை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 19.712 | 65.92% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 5,088 | 17.01% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,041 | 13.51% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 543 | 1.82% |
| செல்லுபடியான வாக்குகள் | 29,904 | 98.06% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 593 | 1.94% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 30.497 | 98.75% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 30,882 | |

## மட்டக்களப்புமாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,479 | 19.55% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 5,967 | 46.97% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 3,205 | 46.97% |
| பா.அரியநேத்திரன் ( த. பொ. வே) | 901 | 7.09 |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 19 | 0.15% |
| செல்லுபடியான வாக்குகள் | 12,704 | 98.18% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 235 | 1.82% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 12,939 | 98.65% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 13,116 | |

## குருநாகல் மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 47,126 | 63.19% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 13, 081 | 17.54% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 11,998 | 16.09% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,384 | 1.86% |
| செல்லுபடியான வாக்குகள் | 74,583 | 97.67% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,777 | 2.33% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 76,360 | 99.2% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 76,977 | |

## அனுராதபுரம் மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 32,750 | 61.23% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 8,218 | 15.37% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 10,956 | 20.48% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 783 | 1.48% |
| செல்லுபடியான வாக்குகள் | 53,484 | 98.16% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,000 | 1.84% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 54,484 | 98.72% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 55,191 | |

## மாத்தளை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 12,186 | 58.23% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 4,243 | 20.27% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 3,816 | 18.23% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 372 | 1.78% |
| செல்லுபடியான வாக்குகள் | 20.928 | 97.24% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 484 | 2.26% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 21,412 | 98.82% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 21,667 | |

## கேகாலை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 20,052 | 59.17% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 7,229 | 21.32% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 5,604 | 16.53% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 482 | 1.42% |
| செல்லுபடியான வாக்குகள் | 33,904 | 97.43% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 894 | 2.57% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 34,798 | 99.13% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 35,103 | |

## புத்தளம் மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச | 64,692 | 73.39 |
| ரணில் விக்கிரமசிங்க | 16,688 | 18.93 |
| அநுர குமார திசாநாயக்க | 2,978 | 3.38 |
| நாமல் ராஜபக்ஷ | 1,912 | 2.17 |
| செல்லுபடியானவை | 88,143 | 90.78% |
| நிராகரிக்கப்பட்டவை | 8,955 | 9.22% |
| மொத்தம் | 97,098 | 77.05% |
| பதிவுசெய்யப்பட்டவை | 126,022 | |

## கண்டி மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 32, 295 | 60.14% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 10,635 | 19.8% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 9,134 | 17.01% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 702 | 1.31% |
| செல்லுபடியான வாக்குகள் | 53,700 | 97.29% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,494 | 2.71% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 55,194 | 98.92% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 55,797 | |

## பதுளை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 23,629 | 58.36% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 7,967 | 19.68% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,757 | 19.16% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 598 | 1.48% |
| செல்லுபடியான வாக்குகள் | 40,488 | 98.1% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 783 | 1.9% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 41,271 | 98.12% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 42,061 | |

## கம்பஹா மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 33,226 | 65.68% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேச்சை) | 9,116 | 18.02% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 6,383 | 12.62% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 943 | 1.86% |
| செல்லுபடியான வாக்குகள் | 50,589 | 97.28% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,416 | 3.72% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 52,005 | 99.08% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 52,486 | |

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 9,277 | 68.56% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,640 | 31.75% |
| பா. அரியநேத்திரன் (த.பொ,வே) | 4,207 | 17.48% |
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,250 | 9.35% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 79 | 0.33% |
| செல்லுபடியான வாக்குகள் | 24,061 | 95.67% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,089 | 4.33% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 25,150 | 98.9% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 25,429 | |

## களுத்துறை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 21,589 | 60.04% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 5,465 | 15.20% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 7,456 | 20.73% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 30 | 0.08% |
| செல்லுபடியான வாக்குகள் | 35,959 | 97.92% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 763 | 2.08% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 36,772 | 98.32% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 37,348 | |

## நுவரெலியா மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 8,946 | 47.15% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 5,087 | 26.81% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,334 | 22.84% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 308 | 1.62% |
| செல்லுபடியான வாக்குகள் | 18,975 | 97.25% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 536 | 2.75% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 19.511 | 98.91% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 19.727 | |

## பொலன்னறுவை மாவட்டம்

### தபால் மூல வாக்குகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 11,768 | 61.26% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 4,120 | 21.45% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 2,762 | 14.38% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 188 | 0.08% |
| செல்லுபடியான வாக்குகள் | 19,211 | 981.% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 372 | 1.9% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 19,583 | 98.62% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 19,858 | |





# ஜனாதிபதி 2024 தேர்தல் முடிவுகள்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### கிளிநொச்சி தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 30,571 | 47.33% |
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 20,348 | 31.51% |
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,806 | 4.34% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 7,182 | 11.82% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 102 | 0.16% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 64,585 | 93.22% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,695 | 6.78% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 69,280 | 71.24% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **97,251** | |

### யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 7,494 | 30.23% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 7,080 | 28.56% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,058 | 28.48% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,186 | 8.82% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 43 | 0.17% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 24,786 | 95% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,242 | 4.77% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 26,028 | 69.68% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **37,355** | |

### நல்லூர் தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 10,097 | 32.03% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 8,804 | 27.93% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,464 | 23.68% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 3,835 | 12.16% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 76 | 0.24% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 31,526 | 94.43% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,860 | 5.57% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 33,386 | 65.65% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **50,853** | |

### காங்கேசன்துறை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 9,277 | 38.56% |
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 8,365 | 30.32% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 7,640 | 31.75% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,250 | 9.35% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 79 | 0.24% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 24,061 | 95.67% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,089 | 4.33% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 25,150 | 98.9% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **25,429** | |

### பருத்தித்துறை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா.அரியநேத்திரன் (த.பொ.வே) | 8,658 | 37.66% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 6,100 | 26.54% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 5,162 | 22.46% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 1,806 | 7.86 |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 47 | 0.2% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 22,988 | 93.69% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,548 | 6.31% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 24,536 | 61.83 |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **39,681** | |

### ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 5,726 | 35.40% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 5,155 | 31.87% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 3,687 | 22.80% |
| அனுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 593 | 3.67% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 31 | 0.19% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 16.174 | 94.02% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,028 | 5.98% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 17,202 | 69.02% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **24,860** | |

### கோப்பாய் தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 12,639 | 33.90% |
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 11,410 | 30.60% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 7,654 | 20.53% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,541 | 6.81% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 81 | 0.22% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 37,287 | 92.98% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,817 | 7.02% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 40,104 | 64.22% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **62.449** | |

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா.அரியநேத்திரன் (த.பொ.வே) | 11,170 | 35.36% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 8,749 | 27.70% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 7,367 | 23.32% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 1,887 | 5.97% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 80 | 0.06% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 31,589 | 92.84% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,437 | 7.16% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 34,026 | 6532 |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **52,092** | |

### மாணிப்பாய் தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| பா.அரியநேத்திரன் (த.பொ.வே) | 11,587 | 31.04% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 11,609 | 31.10% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 8,871 | 23.76% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 2,886 | 7.73% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 84 | 0.23% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 37,330 | 93.39% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,644 | 6.61% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 39,974 | 66.46% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **60,144** | |

## காலி மாவட்டம்

### பத்தேகம தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 37,301 | 46.67% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 23,442 | 29.33% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 12,963 | 16.22% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 3,204 | 4.01% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 79,931 | 98.05% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,591 | 19.5% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 81,522 | 81.32% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **100,243** | |

### ஹபராதுவ தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 35,428 | 52.35% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 16,929 | 25.01% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 10,602 | 15.67% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,041 | 3.02% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 67,678 | 98.34% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1145 | 1.66% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 68,823 | 80.53% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **85,463** | |

### அம்பலாங்கொடை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 33, 026 | 53% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 17,453 | 28.01% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 7,428 | 11.92% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,245 | 3.6% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 62,314 | 98.16% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,169 | 1.84% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 63,483 | 79.56% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **79,794** | |

### காலி தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 34,839 | 53.42% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 17,935 | 57.50% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 9,478 | 14.53% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,220 | 1.87% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 65,220 | 98.49% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,001 | 1.51% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 66,221 | 79.02% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **83,799** | |


### பத்தேகம தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 37,301 | 46.67% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 23,442 | 29.33% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 12,963 | 16.22% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 3,204 | 4.01% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 79,931 | 98.05% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,591 | 19.5% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 81,522 | 81.32% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **100,243** | |


### அக்மீமன தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 45,632 | 55.65% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 18,731 | 22.84% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 12,922 | 15.76 |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,990 | 2.43% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 82,005 | 98.37% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,355 | 1.63% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 83,360 | 80.4% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **103,687** | |

## காலி மாவட்டம்

### கரந்தெனிய தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 32,895 | 55.23% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 15,110 | 25.37% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 7,032 | 11.81% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 2,310 | 3.88% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 59,583 | 98.66% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 807 | 1.34% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 60,370 | 77.76% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **77,636** | |

### காலி தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 33, 026 | 53% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 17,453 | 28.01% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 7,428 | 11.92% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,245 | 3.60% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 62,314 | 98.16% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,169 | 1.84% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 63,483 | 79.56% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **79,794** | |

### ஹினிதும தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 35,677 | 43.37% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 25,388 | 30.86% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 14,741 | 17.92% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 3,013 | 3.66% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 82,256 | 98.28% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,442 | 1.72% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 83,698 | 81.18% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **103.104%** | |

### பலபிட்டிய தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 20,096 | 49.23% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 12,339 | 30.23% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 5,345 | 13.09% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 1,689 | 4.14% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 40,821 | 98.26% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 723 | 1.74% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 41,544 | 75.57% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **54,973** | |

### பெந்தர தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 35,612 | 49.37% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 19,733 | 27.35% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேச்சை) | 11,595 | 16.07% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,571 | 3.56% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 72,137 | 98.28% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,265 | 1.72% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 73,402 | 79.64% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **90,167** | |

### ரத்கம தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 30,323 | 49.91% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 17,157 | 28.24% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 8,004 | 13.17% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 3,236 | 5.33% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 60,755 | 98.02% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,116 | 1.8% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 61,871 | 76.52% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **80,860** | |

## வன்னி மாவட்டம்

### மன்னார் தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 28,491 | 44.93% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 17,181 | 27.09% |
| பா.அரியநேத்திரன் (த.பொ.வே) | 10,757 | 16.96% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 4,276 | 6.74% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 125 | 0.20% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 63,412 | 96.82% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,082 | 3.18% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 65,494 | 75.71% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **86.509** | |

### வவுனியா தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 33,731 | 39.31% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 24,018 | 27.99% |
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 11,650 | 13.58% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 11,591 | 13.51% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 671 | 0.78% |

| | | |
|---|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 85,808 | 96.19% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,395 | 3.81% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 89,203 | 72.61% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **122,860** | |

# ஜனாதிபதி 2024 தேர்தல் முடிவுகள்

## மாத்தறை மாவட்டம்

### கம்புறுபிட்டிய தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 35,076 | 53.24% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 18,648 | 28.15% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 8,265 | 12.55% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,802 | 2.74% |
| செல்லுபடியான வாக்குகள் | 65,880 | 98.26% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,164 | 1.74% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 67,044 | 81.23% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **82,533** | |

### வெலிகம தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 42,182 | 53.70% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 21,248 | 27.05% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 10,628 | 13.53% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,969 | 2.51% |
| செல்லுபடியான வாக்குகள் | 78,549 | 98.4% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,279 | 1.6% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 79,828 | 79.71% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **100,152** | |

### மாத்தறை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 43,827 | 59.39% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 16,822 | 22.8% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 9,661 | 13.09% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,489 | 2.02% |
| செல்லுபடியான வாக்குகள் | 73,791 | 98.52% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,111 | 1.48% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 74,902 | 80.85% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **92,643** | |

### தெவிநுவர தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 34,690 | 54.66% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 19,516 | 30.75% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 5,701 | 8.98% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,775 | 2.80% |
| செல்லுபடியான வாக்குகள் | 63,462 | 98.05% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 968 | 1.5% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 64,430. | 78.7% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **81,870** | |

### அக்குரெஸ்ஸ தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 41,067 | 51.90% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 21,265 | 26.88% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 12,154 | 15.36% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,678 | 2.12% |
| செல்லுபடியான வாக்குகள் | 79,125 | 98.41% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,281 | 1.59% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 80,406 | 81.95% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **98,112** | |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

### தங்காலை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 59,117 | 55.49% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 28,857 | 27.09% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 9,056 | 8.5% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 177 | 0.17% |
| செல்லுபடியான வாக்குகள் | 106,537 | 98.53% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,584 | 1.47% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 108,121 | 82.69% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **130,755** | |

### திஸ்ஸமஹாராம தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 72,907 | 49.19% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 55,815 | 37.66% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்ச்சை) | 7,007 | 4.73% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) 8,289 5.59% | | |
| செல்லுபடியான வாக்குகள் | 148,211 | 98.64% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,037 | 1.36% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 150,248 | 82.62% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **181.846** | |

### பெலியத்த தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 34,321 | 53.43% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 16,820 | 26.18% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 5,460 | 8.50% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 5,385 | 8.38% |
| செல்லுபடியான வாக்குகள் | 64,239 | 98.53% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 959 | 1.47% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 65,198 | 81.75% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **79,751** | |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

### முல்கிரிகல தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 41,086 | 47.48% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 26,614 | 30.76% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேச்சை) | 9,192 | 10.62% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 6,250 | 7.32% |
| செல்லுபடியான வாக்குகள் | 86,526 | 98.39% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,414 | 1.61% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 87,940 | 82.63% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **106,421** | |

## கண்டி மாவட்டம்

### கண்டி தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 13,336 | 44.29% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 9,083 | 30.17% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 6,361 | 21.13% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 380 | 1.20% |
| செல்லுபடியான வாக்குகள் | 30,109 | 98.26% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 534 | 1.74% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 30,643 | 74.19% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **41,303** | |

### கலகெதர தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 18,232 | 42.8% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 15,568 | 30.54% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 5,982 | 14.04% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,224 | 2.8% |
| செல்லுபடியான வாக்குகள் | 42,603 | 97.94% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 895 | 2.06% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 43,498 | 80.2% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **54,236** | |

### பாத்ததும்பர தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 29,760 | 41.72% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 26,788 | 37.55% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 10,539 | 14.77% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,367 | 1.92% |
| செல்லுபடியான வாக்குகள் | 71,337 | 97.54% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,796 | 2.46% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் 73,133 78.6% | | |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 93,042** | | |

### குண்டசாலை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 38,452 | 46.46% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 27,999 | 33.83% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 11,628 | 14.05% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,933 | 2.34% |
| செல்லுபடியான வாக்குகள் | 82,768 | 97.53% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,100 | 2.47% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 84,868 | 79.81% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **106,339** | |

### கம்பளை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 31,503 | 36.13% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 28,750 | 32.97% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 21,991 | 25.22% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,652 | 1.89% |
| செல்லுபடியான வாக்குகள் | 87,198 | 96.94% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,750 | 3.06% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 89,948 | 79.33% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **113,385** | |

## கண்டி மாவட்டம்

### உடுதும்புர தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 22,336 | 44.65% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 17,226 | 34.44% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 6,280 | 12.55% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,386 | 4.77% |
| செல்லுபடியான வாக்குகள் | 50,022 | 98.08% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 981 | 1.92% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 51.003 | 83.22% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **61,289** | |

## அநுராதபுரம் மாவட்டம்

### அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 39,348 | 44.09% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 32,068 | 35,92% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 12,231 | 13.71% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 2,776 | 3.11% |
| செல்லுபடியான வாக்குகள் | 89,243 | 98.35% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,493 | 1.65% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 90,736 | 81.19% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **111,758** | |

### கெக்கிராவ தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 31,632 | 45.04% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 24,241 | 34.52% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 10,263 | 14,61% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,659 | 2.36 |
| செல்லுபடியான வாக்குகள் | 70,231 | 98.23% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,265 | 1.77% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 71,496 | 79.99 |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **89,380** | |

### மிஹிந்தலை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 26,034 | 46.81% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 18,836 | 33.86% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 7,888 | 14.18% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,071 | 1.93% |
| செல்லுபடியான வாக்குகள் 5 | 5,621 | 98.38% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 916 | 1.62% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 56.537 | 80.43% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **70.291** | |

### மதவாச்சி தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 30,877 | 41.67% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 30,118 | 40.65% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேச்சை) | 7,672 | 10.35% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 2,867 | 3.87% |
| செல்லுபடியான வாக்குகள் | 74,092 | 98.73% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 952 | 1.27% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 75,044 | 83.22% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **90,179** | |

## திகாமடுல்லை மாவட்டம்

### கல்முனை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 26,873 | 46.96% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 15,686 | 27.42% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 10,937 | 19.12% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 93 | 0.16% |
| செல்லுபடியான வாக்குகள் | 57,200 | 98.37% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 950 | 1.63% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 58,150 | 72.35% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **80.368** | |






# இன்று 23ஆம் திகதி விசேட அரச விடுமுறை

**பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு**

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளையிட்டு இன்று விஷேட அரசாங்க விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிவிப்பை நேற்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டதுடன் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன அறிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியிருந்ததுடன் இன்று திங்கட்கிழமை 23ஆம் திகதியும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நான் அன்பு வைத்துள்ள... 03ஆம் பக்கத் தொடர் ...

அதிகபட்ச தூரம் பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன். தொங்குபாலத்தின் முடிவிடம் கண்களுக்கு மிகவும் எட்டும் தூரத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த பாசம் மிகுந்த குழந்தையினை அனுரகுமார திசாநாயக்கவிடம் ஒப்படைப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அனுர ஜனாதிபதி அவர்களே, நீங்களும் நானும் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் மிகவும் கருணையுடன் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு வந்தததை விடவும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் முடிவிடத்திற்கு கொண்டு செல்லும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பதவிகளை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை ஏற்புடைய சந்தர்ப்பங்களில் எந்த விதமான தயக்கமும் இன்றி நான் நிறைவேற்றுவேன்.

அத்துடன், எனது ஆட்சிக் காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும், இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## பொது மக்களுக்களிடம்.. 03ஆம் பக்கத் தொடர் ...

நடத்துவதற்கு இம்முறை தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர், தொடர்ந்தும் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் வகையில் செயற்படுவது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

## முப்பதாவது ஆண்டில்.. 03ஆம் பக்கத் தொடர் ...

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

நவீன உலகு சவால்கள் நிறைந்ததாக உள்ளது. இன்றைய தலைமுறையில் நாம் எதிர்கொண்ட சவால்களை விடவும் அதிக சவால்களை தற்போதைய தலைமுறை எதிர்கொள்கின்றது.சவால்களைசிறப்பாக எதிர்கொள்பவர்களே வாழ்க்கையில் வெற்றிகரமான மனிதர்களாக விளங்க முடியும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ள தமிழ்மொழி அறிவு இன்றைய தலைமுறைக்கு அல்லது அடுத்துவரும் தலைமுறைக்கு எந்த வகையில் உதவப் போகின்றது என்பதைக் கருத்திற் கொண்டு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2024:

இவ்வருடமும் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தமிழ் ஊக்குவிப்பு போட்டிகளில் பல நூறு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உலகமெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான இளையோரை தமிழ் உணர்வால் இணைத்த இந்த மகத்தான பயணத்துக்கு பட்டதாரிகள் தமிழர் சங்கம் மிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

## முழு நாடும் அநுரவுக்கு...

இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பு வாக்குகள் மேற்படி இரு பிரதான போட்டியாளர்களுக்கு ஆதரவு வாக்குகளாக எண்ணப்பட்டன.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட முதற்கட்ட தேர்தல் முடிவுகளுக்கு இணங்க அநுர குமார திசாநாயக்க 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 வாக்குகளை பெற்றுக்கொண்டார். அவற்றுடன் ஒரு இலட்சத்து 5264 விருப்பு வாக்குகளைப் பெற்று மொத்தமாக 57 இலட்சத்து 40 ஆயிரத்து 179 வாக்குகளை பெற்றுக்கொண்ட அவர், நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நேற்றிரவு (22) உத்தியோகபூர்வமாக அறிவித்தார் .

அதேவேளை, 43 இலட்சத்து 63 ஆயிரத்து 35 வாக்குகளை முதலாவது வாக்கெடுப்பில் பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 867 விருப்பு வாக்குகள் உள்ளடங்களாக 45 இலட்சத்து 30 ஆயிரத்து 902 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டதாகவும் தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இந்த தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் விசேட நிகழ்வு நேற்றிரவு (22) 8 மணியளவில் தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு இம் முறை தேர்தலில் அதிகூடிய வாக்குகளை பெற்ற அநுர குமார திசாநாயக்க உட்பட அவருடன் போட்டியிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இந்த தேர்தலை அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து வேட்பாளர்கள், அவர்களது ஆதரவாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு நன்றி தெரிவித்தார்

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல் தொடர்பான பல சட்டங்கள் மிக நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமலும் இவற்றை தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அவற்றை நிறைவேற்றுவதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## அனுரகுமார திசாநாயக்க குறித்த...

2014 ஜனவரி 2 ஆம் திகதி ஜே.வி.பி தலைவர்2015 பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வெற்றி, எதிர்க்கட்சி பிரதம கொறடா 2019 ஒகஸ்ட் 18 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி

## ஜனாதிபதியாக அநுர...

துடன் செயலாளர்களின் கீழ் நிர்வாகம் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் ஹர்ஷ டி சில்வா எம்பி உட்பட பல அரசியல் தலைவர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் நிறைவு பெற்றுள்ளதுடன் இம்முறை தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க 56,34,915 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க தூதரகம்...

விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்க தூதரகம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

## அநுரகுமார திசாநாயக்கவுக்கு அலிசப்ரி...

எக்ஸ் தளத்தில் பதிவிட்டு தனது வாழ்த்தையும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தலைமை தாங்கும் முயற்சிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக அவர் தனது பதிவில குறிப்பிட்டுள்ளார்.

தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக தீவிர பிரசாரங்களை மேற்கொண்டதாகவும், எனினும் மக்கள் தங்களது தீர்மானத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கு மதிப்பளிப்பதாக தெரிவித்துள்ள அலி சப்ரி, தேர்தலை வெற்றி கொள்வது மெய்யான சவால் கிடையாதென்பதனை வரலாறு எமக்கு கற்றுக்கொடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் வாக்குறுதி அளித்து தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் அந்த உறுதிமொழிகளை வழங்கத் தவறியுள்ளதாக இந்த கடந்த கால தவறுகளிலிருந்து அநுரகுமார தரப்பினர் பாடம் கற்றுக் கொள்வார்களௌன எதிர்பார்ப்பதாகவும் அலி சப்ரி தனது எக்ஸ் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் ஊரடங்குச் சட்டம்...

மாட்டாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று (22) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்த அவர்,

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதனையடுத்து அந்த ஊரடங்குச் சட்டம் மீண்டும் நேற்று நண்பகல் 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

இந்நிலையில், ஊரடங்குச் சட்டம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பையடுத்து தேர்தல் முடிவுகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அறிவிக்கப்பட்டன. அதற்கிணங்க தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நடவடிக்கைகள் நேற்று தொடர்ந்ததுடன் நேற்றைய தினம் பிற்பகல் அந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன.

தேர்தல் நடவடிக்கைகள் நிறைவு பெற்றாலும் தொடர்ந்தும் நாடு முழுவதுக்குமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மாகாண ஆளுநர்...

நடைபெற்று முடிவடைந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில், வேறொரு வேட்பாளர் வெற்றியீட்டியுள்ளதையடுத்து, தனது தென்மாகாண ஆளுநர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்ததாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தன் மீது நம்பிக்கை வைத்து தென்மாகாண ஆளுநர் பதவியை தனக்கஞ வழங்கியமைக்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது நன்றியையும் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தனது கடிதத்தில் மேலும தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கடந்த மே மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தென் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இதற்கு முன்னர் பல தடவை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் இராஜாங்க அமைச்சராகவும் பிரதியமைச்சராகவும் பல்வேறு பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநுரவுக்கு சுமந்திரன்...

கமைய, ஏனையவர்களை நிராகரித்து சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்து, தேர்தல் வரைபடத்தில் வித்தியாசத்தை காட்டிய வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நடைபெற்று முடிந்த 09ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க வெற்றியீட்டுள்ளார். அவருக்கெதிராக களத்தில் இறங்கியவர்களும் தமது தரப்பினரின் தோல்வியை ஏற்றுக்கொண்டு அநுரவுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

எம்.ஏ.சுமந்திரன், இன, மத பேரினவாதத்தில் தங்கியிருக்காமல் வெற்றியை அடைந்ததற்காக அநுரகுமார திசாநாயக்கவை பாராட்டினார். இது அவரது பிரசாரத்தை வேறுபடுத்திய ஒரு முக்கிய காரணியாகுமென வும் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இன, மத வெறிக்கு இடமளிக்காது அபார வெற்றி பெற்றதற்கு அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைந்ததை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் நல்லெண்ண உணர்வுடன், நான் எனது நண்பரை அழைத்து வாழ்த்துக்களை தெரிவித்தேன் என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

# ஈரான் நிலக்கரிச் சுரங்க விபத்தில் 50 பேர் பலி



ஈரானில் நிலக்கரிச் சுரங்கத்தில் மீத்தேன் கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் தொழிலாளர்கள் 50 பேர் உயிரிழந்தனர். 17 பேர் பலத்த காயமுற்றனர். 24 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி துரிதமாக நடந்து வருகிறது.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் இருந்து தென்கிழக்கே 540 கி.மீ தொலைவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இயங்கி வந்தது. இந்தச் சுரங்கத்தில் 70 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

சுரங்கத்தில் மீத்தேன் கசிவு காரணமாக திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இவ்விபத்தில் 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 17 பேர் பலத்த காயமுற்றனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், வெடி விபத்தின் போது வேலை செய்து கொண்டிருந்த 24 பேரை காணவில்லை.

# இன்றைய பலன்கள்

**(23.09.2024)**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**ரிஷபம் :**
எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைக்கும். இனிப்பான செய்தி கிடைத்து இல்லத்தில் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்.

**மிதுனம்:**
மகிழ்ச்சி கொள்ளும்படி பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உறவினர்களும் தகுந்த நேரத்தில் உதவி செய்வார்கள்.

**கடகம்:**
நண்பர்களின் உதவி மகிழ்ச்சி அளிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை அடைவீர்கள்.

**சிம்மம்:**
வரவேண்டிய பணம் தாமதம் இன்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனபுரியாத மகிழ்ச்சி குடியேறும்.

**கன்னி:**
சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பேச்சை குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

**துலாம்:**
பணம் கைக்கு வருவதில் சிறுசிறு தாமதங்கள் ஏற்படலாம். பெண்களின் மரியாதைக்கு பங்கம் வராமல் நடந்து கொள்வதன் மூலம் நன்மைகளை அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
பணப்பரிவர்த்தனையில் நிதானப் போக்கும் அவசியம். வரவேண்டிய பணம் தாமதமாக வந்து சேரலாம்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்துடன் இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

**மகரம்:**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். எதிர்பார்த்தவைகள் சற்று தள்ளி போகலாம். வட திசையில் இருந்து வரும் தகவல் மனதுக்கு நிம்மதியை தரலாம்.

**கும்பம்:**
மனதில் சலனமும் செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம். அவசியமான காரியங்களை கவனமுடன் செய்வது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**மீனம்:**
எதிர்பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் கேட்ட உதவி செய்ய முடியாமல் அவர்களின் அதிர்ச்சிக்கு ஆளாகலாம்.

# அமரர் பண்டாரநாயக்க பற்றிய வி. முத்தழகுவின் தமிழ் பாடல்களுக்கு 50 வருடங்கள் பூர்த்தி



அமரர் பண்டாரநாயக்க பற்றி, பாடகர் வி. முத்தழகு பாடிய தமிழ் பாடல்களுக்கு 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அமரர் பண்டாரநாயக்க பற்றி, பாடகர் வி. முத்தழகு பாடிய தமிழ் பாடல் கடந்த 1974ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி முதல் தடவையாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது.தேசிய கலை, கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க மீது பாடப்பட்ட பாடல்களை, நமது நேயர்கள் மீண்டும் இலங்கை வானொலி, தமிழ்ச் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பாடல்களை இலங்கையின் தேசிய பாடகரும், வானொலி, தொலைக்காட்சி, தமிழ் சிங்கள திரைப்பட பின்னணிப் பாடகருமான கலாபூஷணம் வி. முத்தழகு பாடியிருக்கிறார்.

தேசிய உணர்வூட்டும் இந்த இனிய பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின், தமிழ்ச்சேவை அலைவரிசையில் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வி. முத்தழகு கூட்டுத்தாபன தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஹட்சன் சமரசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இப்பாடல்களை பிரபல கவிஞர்களான காலஞ்சென்ற ஈழத்து ரத்தினம், மர்ஹூம் யு.எஸ்.ஹமீட், டொக்டர் எஸ். கணேசன் ஆகியோர் இயற்றியிருக்கிறார்கள்.

பாடல்களுக்கான இசையமைப்பை தமிழ், சிங்கள வானொலி, மெல்லிசை திரைப்படங்களுக்கான பிரபல இசையமைப்பாளர் காலஞ்சென்ற எம்.எஸ்.செல்வராஜா வழங்கியுள்ளார். இலக்கிய கர்த்தா மர்ஹூம் எச்.எம்.பி முஹைதீனின் ஒத்தாசையின் பலனாகவே இப்பாடல்கள் அப்போது உருவாகும் நிலை ஏற்பட்டது. இப்பாடல்கள் அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவை நினைவு கூரும் முகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் சிறப்பு நிகழ்ச்சிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றமை விசேட அம்சமாகும்.

***இது குறித்து 1994ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் வெளியான செய்தி வருமாறு... அமரர் பண்டாரநாயக்கா பற்றி முத்தழகு பாடிய தமிழ் பாடல்களை ஒலிபரப்ப மேலதிக பணிப்பாளர் ஏற்பாடு***

தேசிய கலை, கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி அமரர் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க மீது 1974ஆம் ஆண்டில் பாடப்பட்ட பாடல்களை மீண்டும் நமது நேயர்கள் இலங்கை வானொலி தமிழ் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாடல்களை இலங்கையின் பிரபல தேசியப் பாடகரும் வானொலி, ரி.வி, தமிழ், சிங்கள திரைப்படங்களின் பின்னணிப் பாடகருமான .வி.முத்தழகு பாடியிருக்கிறார்.

தேசிய உணர்வூட்டும் அந்த இனிய பாடல்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதில் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் சார்பில் வி. முத்தழகு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை மேலதிக பணிப்பாளர் வி.என். மதியழகனுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.இதையடுத்தே நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்ததினால் குறிப்பிட்ட ஒலித்தட்டுக்களுக்கு ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப ரீதியான பாதிப்புக்களை நீக்குவதற்கு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகதெரியவருகிறது.இப்பாடல்களை இலங்கையின் பிரபல கலைஞர்களான ஈ. இரத்தினம், யூ.எஸ்.ஹமீட், டாகடர் எஸ். கணேசன் போன்றோர் இயற்றியுள்ளனர்கள். பாடல்களுக்கான இசையை பிரபல வானொலி, சினிமா இசையமைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜா இசையமைத்திருக்கிறார்.

இலக்கிய கர்த்தா எச்.எம்;.பி. மொகிதீனின் ஒத்தாசையின் பயனாகவே இப்பாடல்கள் அப்போது உருவாகும் நிலை ஏற்பட்டது.இந்தப் பாடல்களை அமரர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கவை நினைவு கூருமுகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை தயாரித்தளிக்கவிருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

## மானுடவியல்



182

பாண்டியன் அவர்களுடைய மனத்துயரத்தைக் கண்டு, "நீங்கள் இங்ஙனந் திரண்டு வருவதற்குக் காரணம் யாது" என்று பரிந்து வினாவ; சமணர்கள் "மஹாராஜாவே, உம்முடைய மதுரையிலே சைவப் பிராமணர்கள் வருதலால்! இன்றைக்கு நாங்கள் கண்டுமுட்டு" என்றார்கள். உடனே அரசன் "நானும் கேட்டுமுட்டு" என்று சொல்லிக் கோபித்து, "அந்தச் சிவனடியார்கள் இன்றைக்கு இந்நகரத்திற்கு வருவதற்குக் காரணம் யாது? அவர்கள் யாவர்" என்றான். அதற்குச் சமணர்கள் "சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற ஓர் பிராமணப்பாலன் சிவனிடத்திலே ஞானம் பெற்றவனென்று முத்துச்சிவிகை மேற்கொண்டு, எங்களை வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்களோடு வந்திருக்கின்றான்" என்றார்கள். பாண்டியன் மிகக் கோபித்து, "இதற்கு நாம் யாது செய்வோம்" என்று சொல்ல; தீயவர்களாகிய சமணர்கள் "நாங்கள் அந்தப் பிராமணப் பிள்ளை இருக்கின்ற மடத்திலே மந்திரவித்தையினாலே அக்கினி பற்றச் செய்வோமாயின், அவன் இந்நகரத்திலே இராமல் போய் விடுவான்" என்றார்கள். பாண்டியன் அதைக் கேட்டு, "விரைந்து சென்று அங்ஙனஞ் செய்யுங்கள்" என்று சொல்லி, அவர்களைப் போக்கி, யாதொரு பேச்சுமின்றி, மனக்கவலையோடு சயனத்திற்புக்கான். பாண்டிமாதேவியாரும் புகுந்தார். பாண்டியன் ஒன்றும் பேசாதிருக்க: பாண்டிமாதேவியார் "என் பிராணநாயகரே! நீர் முன்னுள்ள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந்திருக்கின்றீர். உம்முடைய மனசிலே வந்த கவலை யாது? சொல்லியருளும்" என்றார். பாண்டியன் தேவியாரை நோக்கி, "என் அதிப்பிரியையாகிய பிராணநாயகியே! சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற ஒரு பிராமணப் பிள்ளை சிவனுடைய அருளைப் பெற்று நம்முடைய ஆசாரியர்களை வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்களோடும் இங்கே வந்திருக்கின்றான். ஆசிரியர்கள் அவர்களைக் கண்டுமுட்டு; நான் கேட்டு முட்டு. இதுவே என் கவலைக்குக் காரணம். என்றான் மங்கையர்க்கரசியார் "என் பிராணநாயகரே! நீர் கோபிக்க வேண்டுவதில்லை. இரு பக்ஷத்தாரும் வாதுசெய்தால், வென்றவர் பக்கஞ்சேர்ந்து அவர் அநுட்டிக்குஞ் சமயத்தையே அநுட்டித்தல் உறுதியாகும் என்று சொல்லிவிட்டு, பெருமகிழ்ச்சியோடு தம்முடைய மாடத்திற் சென்றிருந்தார்.

குலச்சிறைநாயனார் அங்கே எந்த; பாண்டிமாதேவியார் இந்தச் சமாசாரத்தை அவருக்குச் சொல்லினார். குலச்சிறைநாயனார் கைகுவித்து நின்று "இன்றைக்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இங்கே எழுந்தருளிவரப் பெற்றுக் கொண்டோம். இனிச் சமணர்கள் செய்யும் வஞ்சனையை அறியேன்" என்றார். பாண்டிமாதேவியாரும் அஞ்சி, "வஞ்சகப் புலையராகிய சமணர்கள் தீத்தொழில் செய்ய வல்லவர்கள் என் செய்வோம்" என்று நினைந்து "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு யாதாயினும் ஓரூறு வருமாயின், நாமும் உயிர்துறந்து விடுவோம்" என்றார். அது நிற்க.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாக ஒன்பது (9) மைல் தொலைவில் கொக்கட்டிச்சோலை என்னும் கிராமம் அமையப் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்தமையால் இக்கிராமத்திற்கு கொக்கட்டிச் சோலை எனும் இப்பெயர் வரக் காரணமாயிற்று. இயற்கை எழில்மிக்க இக் கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திரு வீதியிலேதான் தான்தோன்றீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலே உள்ள பழமையான சிவன் கோயில் என்ற பெருமையும் திருப்படைக் கோயில் அல்லது தேசத்துக்கோயில் என்ற பெருமையும் இக் கோயிலுக்கு உண்டு. இக் கோயிலில் இறைவன் சுயம்புலிங்கமாகத் தானே தோன்றி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

பண்டையக்கால அரசர்களது மதிப்பும் மானிய சீர்வரிசைகளும் பெற்றவையாக உள்ள கோயில்கள் சில மட்டக்களப்பில் உள்ளன. இவற்றுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒன்றாக விளங்குகின்றன கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் பற்றி மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் கூறப்படுகின்ற படி இவ்வாலயம் பற்றி அறியக் கூடியதாக உள்ளது. குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பை ஆளும் போது கலிங்க ஒரிசா தேசத்தை அரசுபுரியும் குகணேசனுடைய புத்திரியாகிய ' உலகநாச்சி' என்பவள்; கௌதம புத்தரின் தசனத்தை எடுத்துத் தனது நெடுங்கூந்தலில் மறைத்து வைத்தும் கைலங்கிரியிலிருந்து குருவம்ஷத்தார் மூலம் எடுத்துக்கொண்டு வந்து மணிபுரத்தில் இறுக்கி விசய துலீபத்தில் வந்து மேகவர்ணனைக் கண்டு கோத்திரம் எல்லாம் கூறி விளங்கப்படுத்தி புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள் அவனும் அளவில்லாத மகிழ்ச்சி கொண்டு அவளுக்கு வேண்டியசன்மானமெல்லாம் கொடுத்து மேலும் வேண்டுவது என்னவென்று கேட்டான். அவள் குடி வாழ்வில்லாத ஊர் ஒன்று தனக்கு வேண்டுமென்று கேட்டாள். அதைக் கேட்ட மேக வர்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது நண்பனாகையால் ஒரு திருமுகம் வரைந்து அவனுக்கு கொடுத்து அனுப்பினான்.

குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து சந்ததியுரிமை கொண்டாடி மட்டக்களப்பு வடப்பக்கமாக உள்ளன. அம்பிளாந்துறைக்கு அப்பால் மண்னேறுமுனை வளர்ந்து காடு செறிந்து குடி வாழ்வற்ற பகுதியை நிரந்தரமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித்தூர்த்து மாளிகை உண்டாக்கி உலகநாச்சிக்கு கையளித்தான்.

உலகநாச்சியும் குடி வாழ்ந்து சில காலம் சென்ற பின் தனது தம்பி உலக நாதனைத் தந்தையிடத்தில் அனுப்பிக் குகன் குடும்பம் நூறும் சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகக்குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தனர்.

பின்னர் இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குடும்பங்களை அழைத்து காப்பு முனைக் காட்டை அழித்துச் செப்பனிட்டு அப்பகுதிக்கு அரசியாகிய மண்முனை என நாமஞ்சூட்டி வாழும் காலம் களப்பு முனைக்குத் தென் பாகமாயுள்ள காட்டை அழிப்பிக்கும் போது திட கனென்பவன் கொக்கு நெட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது அதனைக் கண்ட திடகன் தனது உடைத் துணியால் மரத்து வெட்டு வாயைக் கட்டி வைத்து விட்டு உலகநாச்சியிடம் இந்த செய்தியினை அறிவித்தான் உலகநாச்சியும் அந்த இடத்தில் போய்ப் பார்க்கும் போது அந்த கொக்கு நெட்டி மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. மற்றையோர் கண்ணுக்குப் புலப்படாத காரணத்தால் உலகநாச்சியும் சிவலிங்கம் என திட்டம் பண்ணி அவ்வனத்தை அழித்து தூசிநீக்கி ஆலயம் அமைத்து வட நாட்டு கொல்லரிடமிருந்து பட்டர் மூவரை அழைத்து பூசை புரியும்படி திட்டம் செய்து அதிக களனிகள் திருத்தி குணசிங்கனுடன் பிறந்தவனாகிய கிரசரசன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங் காலம் தந்த புரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் குடிகள் பதின்மரை அழைத்து தனது குடிக்கருகாமையிருத்திப் பத்தனென்பவனை அவர்களுக்குத் தலைவனாய் வைத்து இரண்டு ஆலயத்திற்கும் அரங் கட்டும் குடிகளாக வகுத்தனள் . பின்பு கலிபிறந்து ஐநூற்று முப்பதாம் வருஷம் குணசிங்கனின் புத்திரன் அதிசுதன் என்பவனுக்கு மண்முனையையும் இரு தினங்களில் பட்டங்கட்டினாள் அதிசுதன் மனைவியின் நாமம் நாமவல்லி கனகசேனனுடைய மனைவி அருந்தாள் இவர்கள் இலங்கையிலுள்ளவர்கள் இவர்களின் சந்ததிகள் மட்டக்களப்பு மண்முனை பகுதிகளையும் இருநூறு வருஷங்களாக ஆண்டு வந்தனர் பின்பு கலிங்க குலத்து வங்காலாடன் என்பவன் அரசுக்கு வந்தான் என்பதனை மட்டக்களப்பு மான்மியம் எடுத்துக்கூறுகின்றது.

மேலும் இக் கோயிலின் ஆரம்ப வழிபாடு பற்றி செவிவழி கதையொன்று நிலவிவருகின்றது. இக் கதையின் படி வேடர்களே முதன்முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர். என்று சொல்லப்படுகின்றது. தேன் தேடிச் சென்ற வேடர் சிலர் அங்கிருந்த கொக்கட்டி மரமொன்றில் தேனிருக்கக் கண்டு மேலும் அவதானித்த போது அம்மரத்தின் அடியில் ஒரு லிங்கம் இருக்கக் கண்டனர் அன்று முதல் கொத்துப்பந்தலிட்டு தமது வழிபாட்டு முறைப்படி பூசை செய்து வரலாயினர் என்று ஒரு கருத்து சொல்லப்படுகின்றது. மேலும் கதிர்காமம் யாத்திரைக்கு வந்த கொக்கட்டியார் என்னும் இந்திய நாட்டைச் சேர்ந்த தபோதனர் இங்கு சமாதி இருத்தப் பெற்றதாயும் சிலர் கூறுவர். இந்த லிங்கத்தை முதல் முதலில் கண்ட வேட குலத் தலைவன் திடகன் என்றும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.

கட்டட அமைப்பை நோக்கின்ற போது இப்பகுதிகளில் கலிங்கரின் செல்வாக்கு அதிகரித்திருந்தது பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே தான்தோன்றீஸ்வரர் கோயில் கட்டப்பட்டுள்ளது. திருக்கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டு அது திட்டமாக பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது சாலச் சிறந்ததே

இங்கு குளக்கோட்டன் பற்றிய கதையும் முக்கியம் பெறுகின்றது. அதாவது திருமலை கோட்டையிலுள்ள வடமொழி கல்வெட்டிற் கூறப்படுகின்ற கி.பி 1223 இல் ஈழத்திற்கு வந்த சோழகங்கன் என்பவனே கோணேசர் கல்வெட்டுக் ;கூறும் குளக்கோட்டன் என்று ஐயப்பாடு ஒன்று உள்ளது. இவர் கலிங்கர் இலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவர் ஓர் நெருங்கிய தொடர்புடையவர் சோழ நாட்டிலும் இவருக்குத் தொடர்பிருந்தது. வீரசைவத்தின் ஈடுபாடு உடையவர் கிழக்கிலங்கையில் போதுமான அரசியல் அதிகாரம் இவரிடம் இருந்திருக்கிறது எனலாம்.

இவ்வாலயத்தில் குருக்கள் பரம்பரையினர் சைவத்தைச் சேர்ந்த 'சங்கமர்' ஆவர் சங்கமர் என்பது முழுமை பெற்ற அல்லது இலட்சியத்தை அடைந்து விட்ட ஆன்மா என பொருள் படுவது சீவன் முத்தர் நிலையிலுள்ளவர்களே 'சங்கமர்' இவர்கள் இலிங்கத்தை அணிந்திருப்பர் இவர்களை குளக்கோட்டன் நாகார்ச்சனபுரம் என்னும் இடத்திலிருந்து கொண்டு வந்து தன் திருப்பணிகளை பெற்ற கோயில்களில் பூசை செய்ய அமர்த்தியதாக கூறப்படுகின்றது.

இங்கு பதினென் சிறைகள் செய்ய வேண்டிய தொண்டூழியம் பற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றன. இச் சிறைகளுக்குத் தலைமை பூண்டொழுகி ஏனைய சிறைகளின் சேவைகளையும் பெற்றுக் கொடுப்பதோடு பொறுப்பும் தூய்மையுமுள்ள தொண்டூழியங்களையும் வேளாளர்களே செய்ய வேண்டுமென்பது நியதியே வேளாளர்களிலே பொன்னாச்சிகுடி, வைத்தியனார்குடி, அத்தியாகுடி என்ற மூன்று குடிகளும் இக் கோயிலுடன் தொடர்புடையோராக உள்ளனர். இக்குடிப் பிரிவினர்கள் தாங்கள் குளக்; கோட்டனால் ஆலய சேவைக்கென கொண்டு வரப்பட்ட பரம்பரையினர்

தொண்டூழியங்களுக்கு நெல் வயல்கள் மானியமாக கொடுக்கப்பட்டு வந்தமையும் நெல்படியாகக் கொடுக்கப்பட்டு வந்ததையும் அறியக் கூடியதாகவுள்ளது. இக்கோயிலின் பரிபாலனம் பழமை வாய்ந்ததாக மூன்று வண்ணக்குமாரை கொண்டதாக காணப்படுகின்றது.

முக்குகருள்ளே கலிங்கா குடி என்றும் உலகிப்பொடி படையாண்டகுடி என்றும் சொல்லப்படும் இம் மூன்று குடியினருக்குமே இக்கோயிலின் பரிபாலனம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது அதாவது இவ் வண்ணக்குமாரை தனியாக நோக்குகின்ற போது கலிங்காகுடி தலைமை பதவியும் உலகிப்போடி பொருளாளர் பதவியும் படையாண்ட குடி நிருவாக நடைமுறைக்கும் பொறுப்புடையார்களாவார்.

இவ்வாலயத்தின் தீர்த்தோற்சவமானது இன்று 23.09.2024 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாராயணபிள்ளை நாகேந்திரன்
ஓய்வுநிலை அதிபர்
களுவாஞ்சிகுடி





## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 104

வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.


நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று



சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும். அவனிடத்தில் நல்லெண்ணங்கள் வளர்க்கப்படுமாயின் அவனிடத்திலும் நம்பிக்கை. சுறுசுறுப்பு போன்ற நற்குணங்கள் மேம்படும். நல்லதொரு விருப்பம், அதை அடைவதற்கான ஈடுபாடு. அதற்கான சக்தி ஆகிய யாவும் ஒன்றிணைந்தால் எப்பேற்பட்ட லட்சியத்தையும் நாம் அடைந்து விடலாம். இதில் எவ்வித சந்தேகத்திற்கும் வாய்ப்பு இல்லை.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**சைவ சமயிகள் யார்?**

உமை, விநாயகர், முருகன் ஆகிய திருவுருவங்களைப் பொதுவாகவும் சிவபெருமானை முழுமுதற் பொருளாகவும் வழிபாடு செய்பவர்கள்.

**சைவ சமயம் என்றால் என்ன**?

சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு அவரை வழிபடும் நெறி.

**சமயம் என்றால் என்ன?**

வழி, நெறி என்று பொருள்.

**தீர்த்தம் எதனைக் குறிக்கும்**?

இறைவனுடைய திருவருளே தீர்த்தம். இது மும்மலம் நீக்கும். தீர்த்தத்தைப் பருகுவதன் வழி இறையாற்றல் நம் உடலினுள் சென்று கலக்கிறது.

திருநீறு எதனைக் குறிக்கும்?உலகத்தில் இறைவனுடையத் திருவருளே நிலையானது, மற்றது நிலை இல்லாதது எனும் தத்துவத்தை உணர்த்துவது. இறைவனுடையக் கருணைத் திறத்தைக் குறிப்பது. நம் மும்மல நோயை நீக்க வல்லது.

ஏன் கோயில் வாசலில் குனிந்து, படியைத் தொட்டு வணங்கி உள்ளே செல்கிறோம்?குனிந்து செல்வது பணிவைக் குறிக்கும். அப்போது நமது மனத்திலுள்ள அகங்காரமும், ஆணவமும் சற்று குறையத் தொடங்கும். எல்லாவற்றிற்கும் தலைவனான இறைவன் கோயிலினுள் இருப்பதால்,வாயிற் படியை வணங்குகின்றோம். இறைவன் முன்னால் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நுழையக் கூடாது.

**கொடிமரம் எதனைக் குறிக்கிறது?**

உயிர் பாசத்தை விட்டு இறைவனை அடைவதைக் குறிப்பது கொடிமரம்.

**கற்பூர தீபம் எதனைக் குறிக்கிறது? ஏன் கண்களில் தொட்டு ஒற்றிக் கொள்கிறோம்?**

இறைவனுடைய அருள் ஒளி வடிவமாக நம்மிடம் வருவதைக் கற்பூர தீபம் குறிக்கிறது. அதனைத் தொட்டு கண்களில் ஒற்றி கொள்ளும் பொழுது, இறையாற்றல் நம் கண்களின் வழியே நம் உடலுக்குள் செல்கிறது.

**இறைவன் திருமுன் இருக்கும் வாகனம் எதனைக் குறிக்கின்றது**?

வாகனம் பக்குவம் பெற்ற உயிரைக் குறிக்கும். அது என்றும், எப்பொழுதும் இறைவனையே நோக்கிக் கொண்டிருக்கும்.

**ஏன் தரையில் வீழ்ந்து வணங்க வேண்டும்?**

தரையில் வீழ்ந்து வணங்குவது பரிபூரண சரணாகதியைக் குறிக்கும். இறைவனின் திருமுன்னால் நம்முடைய ஆன்மாவைக் கிடத்தி, அவர் அருளை வேண்டுவதற்காகவே தரையில் வீழ்ந்து அவர் திருவடியைச் சரணாகதி அடைகிறோம்.

**பஞ்சாங்க வணக்கம் என்பது யாது?**

பஞ்சாங்கம் – ஐந்து உறுப்பு தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும் படி வணங்குதலே பஞ்சாங்க வணக்கம் எனப்படும்.

பெண்கள் இப்பஞ்சாங்க வணக்கத்தினைச் செய்வர்.

**அட்டாங்க வணக்கம் என்பது யாது?**

அட்டாங்கம் எட்டு உறுப்பு தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், தோள் பட்டைகள் என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும் படி வணங்குதலே அட்டாங்க வணக்கம் எனப்படும். ஆண்கள் இவ்வட்டாங்க வணக்கத்தினைச் செய்வர்.

இரு கைகளையும் குவித்து வணக்கம் செய்கிறோம். இதற்கு ஏதாவது தத்துவ பிண்ணனி உண்டா?

'வணக்கம்' கூறி ஒருவரை வணங்குதல் என்பது அவருடைய உயிரில் கலந்திருக்கின்ற இறைவனை வணங்குதல் ஆகும். வணக்கம் எத்தனை வகைப்படும்?

மூவகைப் படும்

**முதலாவது வகை வணக்கம் எது?**

தலைக்கு மேல் இரு கைகளையும் கூப்பி வணங்குதல்

**இது யாருக்கு செய்யக்கூடியது?**

இறைவனுக்கு மட்டுமே செய்யக் கூடிய வணக்கம் ஆகும்.

**இரண்டாவது வகை வணக்கம் எது?**

புருவ மத்தியில் இரு கைகளையும் கூப்பி வணங்குதல்

**இது யாருக்கு செய்யக்கூடியது?**

இது குருவிற்கு செய்யக் கூடிய வணக்கம் ஆகும்.

**மூன்றாவது வகை வணக்கம் எது?**

நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி வணங்குதல்

**இது யாருக்கு செய்யக்கூடியது?**

நம் வயதை ஒத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் செய்யக் கூடிய வணக்கம் ஆகும்.

# ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலய கடல்நீரில் விளக்கேற்றும் நிகழ்வு







புத்தளம் மாவட்டத்தில் வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கலை முன்னிட்டு கும்பம் பாலித்தல் மற்றும் கடல்நீரில் விளக்கேற்றல் போன்ற நிகழ்வுகள் புதன்கிழமை(18)இடம்பெற்றது. இதன் போது, பிரதான கரகம் சுமக்கும் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் மற்றும் காவல்காரர்கள் சகிதம் மூன்று ஊற்றுக்கள் தோண்டி அதில் நீர் எடுத்து ஆலயத்தில் விளக்கு ஏற்றுவது மரபாகும். அந்த நிகழ்வு மரபிசைக்காரர்கள் சகிதம் இடம்பெற்ற போது, பக்தர்கள் பலர் பக்தி பூர்வமாக கலந்து கொண்டனர்.

உடப்பு குறூப் நிருபர்

# கிழக்கின் குரல்



# வரலாற்றில் மிகவும் குறைந்த முறைப்பாடுகள்

## பவ்ரல் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சத்தியநாதன் தகவல்!

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

அம்பாறை மாவட்ட தேர்தல் வரலாற்றில் மிகவும் குறைந்த 12 முறைப்பாடுகள் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் கிடைக்கப்பெற்றுள்ளதாக பவ்ரல் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக தமிழர் பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு வீதம் காலையில் குறைவாக காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அதேவேளை ஏனைய முஸ்லிம், சிங்கள பகுதிகளில் காலையிலேயே கூடுதலான மக்கள் வாக்களித்ததை காண முடிந்தது என்றார்.

பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் காலையில் சேவைக்குடியிருப்பு பவ்ரல் சேவோ தலைமையகத்தில் போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு ஆரம்பமாகின.

அதேவேளை பெரிய நீலாவணையில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரின் பிரசுர விநியோகம் இடம்பெற்றதை நேரடியாக காணக்கூடியதாக இருந்தது. அதனை சென்று தடுத்திருந்தோம். அதேவேளை எமது குழுவினர் திருக்கோவில் பிரதேசத்திற்கு சென்ற பொழுது அங்கே தேர்தல் பிரசார சுவரொட்டிகள் அகற்றப்படாமல் இருந்ததை அவதானிக்க முடிந்தது.



## கார் விபத்தில்

# பிரதேச சபை உறுப்பினர் கே.எம். ரிஸ்வான் மரணம்

கந்தளாய் தினகரன் நிருபர்





அனுராதபுரம் ஹொரவ்பொத்தானை பிரதான வீதி அலபத்தாவ சந்தியில் நேற்று (22) அதிகாலை கார் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த பிரதேச சபை உறுப்பினரொருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு பிரதேச சபை உறுப்பினர் படுகாயம் அடைந்த நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை பத்தாவ பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கே.எம்.றிஸ்வான் (42 வயது) எனவும் தெரிய வருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் ஹொரவ்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படுகாயமடைந்தவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரவ்பொத்தானை அமைப்பாளரான நிக்கவெவ பகுதியைச் சேர்ந்த என்.எம்.பாசில் ஆசிரியர் எனவும் தெரியவருகிறது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசபந்து விருது பெற்றார் ஊடகவியலாளர் அ. அச்சுதன்

தம்பலகாமம் குறூப் நிருபர்

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, தேசிய கலை அரன் மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் என்பனவற்றின் ஏற்பாட்டில் கடந்த 16ஆம் திகதி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில், திருகோணமலை மூதூர் கிழக்கு சேனையூரைச் சேர்ந்த எழுத்தாளர் மற்றும் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனுக்கு மக்களின் முரசு லங்காபுத்ர தேசபந்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ரத்ணபிரிய பிரதம அதிதியாக கலந்துகொண்ட இம்மாபெரும் விருது வழங்கும் நிகழ்வில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல முன்னணி சிரேஷ்ட ஊடவியளர்கள் மற்றும் கலைஞர்கள் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரத்ததான நிகழ்வு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்ததான நிகழ்வொன்று வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்றது/

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன்ஸை '90 நண்பர்கள் வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி நிகழ்வில் அதிகளவிலான பழைய மாணவர்கள் குருதிக் கொடை வழங்கினார்கள்.

# ஊடகவியலாளரின் தாயார் காலமானார்

மட்டக்களப்பு விசேட நிருபர்



சுதந்திர ஊடகவியலாளர் ஏ.எச்.ஏ. ஹுஸைனின் தாயார் பக்கீர்த்தம்பி செய்னம்பு உம்மா கடந்த வியாழக்கிழமை (19) காலமானார். மட்டக்களப்பு ஏறாவூர் காயர் வசித்து வந்த உறுகாமத்தைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தாயான அன்னார் மரணிக்கும்போது அவருக்கு 82 வயதாகும். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் கடந்த வெள்ளிக்கிழமை ( 20) ஏறாவூர் காட்டுப்பள்ளிவாசலில் இடம்பெற்றது.

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் 'தொழில்நுட்ப வளாகம்'



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'தொழில்நுட்ப வளாகம்" மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இத் தொழில்நுட்ப வளாகமானது, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் முயற்சியில், த கேற் நிறுவன அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வளாக திறப்பு விழாவில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி.உடவத்த பிரதம விருந்தினராகவும், உபவேந்தர் மற்றும் பணிப்பாளர்களுக்கான குழுவின் தலைவரும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சஞ்ஜீவனி கினிகத்தர மற்றும் இலங்கை வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இத் தொழில்நுட்ப வளாகம் தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வருமானத்தை நிலைபேறானதாக மேம்படுத்தும் ஒரு காப்பகமாகவும் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

# சம்மாந்துறை பத்திரகாளி அம்பாளின் வருடாந்த தீமிதிப்பு உற்சவம்



(காரைதீவு குறூப் நிருபர் சகா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு வைபவம் நாளை 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று, அக்டோபர் மாதம் 03 ஆம் திகதி தீமிதிப்பு வைபவம் நிறைவுபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்கு இடம்பெற இருக்கின்றது. தினமும் பகல் பூசை 1.00 மணிக்கும், இரவு பூசை 7 மணிக்கும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

26ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெற இருக்கின்றது.

01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச் சப்பறத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருவார். 03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம்பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும்.

# பொத்துவில் பின்தங்கிய பிரதேசங்களில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பின் தங்கிய பிரதேசங்களில் தொடர்ச்சியாக குடி நீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதனால் பல்வேறு அசௌகரியகங்களை எதிர்நோக்கி வருவதாக அங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆத்திமுனை, சர்வோதயபுரம், குண்டுமடு, செங்காமம் 03 கட்டை ஆகிய கிராமங்களில் குடிநீருக்கான பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக மக்கள் தெரிவிக்கன்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியின் காரணமாக பிரதேசங்களில் குடிநீருக்கான பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் வயோதிபர்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வீதி, போக்குவரத்து, குடிநீர் என அடிப்படை வசதியற்று வாழும் இம் மக்களுக்கு பொத்துவில் பிரதேச சபையினால் வாரத்தில் ஒரு முறை பௌசர் மூலம் குடி நீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது அதிக வெப்ப நிலை காணப்படுவதால் குடிநீருக்காக தூரப் பிரதேசங்களில் உள்ள உவர் நீரைத் தேடிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக் கிராமத்தில் வாழ்வோர் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, நன்னீர் மீன்பிடி போன்ற தொழில்களையே தமது வாழ்வாதாரமாக கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக குடி நீர் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறப்பாக நடைபெற்ற பாலையடி வாலவிக்னேஸ்வரரின் தேரோட்டம்

(காரைதீவு குறூப் நிருபர்)



காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாகவரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றில் முதல் தடவையாக 39 லட்சரூபாவில் 21 அடி உயர பாரிய சித்திரத்தேர் ஒன்று ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலய வெளிவீதி பிரகாரத்தில் கன்னித் தேரோட்டம் இடம்பெற்றது.

பெருந்திரளான ஆண் பெண் பக்தர்கள் வடம் பிடிக்க அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க ஆலய பிரகாரத்தில் கன்னித் தேரோட்டம் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

முன்னதாக தேரை வழங்கிய அமரர் சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பத்தை நன்றி கூறும் கௌரவிக்கும் நிகழ்வை ஆலயத் தலைவர் இ. தவரா சா தலைமையில் ஆலய சந் தா னத்து பிரதிநிதி விபுல மாம ணி வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்து வழங்கினார்.

அதன் போது இத்தேரை குடும்பம் சார்பாக கையளித்த மஹோற்சவ குருவான சுவிட்சர்லாந்து தூண் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார் ."விநாயக பக்தி கிரியாசாகரர்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அக்கரை மித்திரன் யாத்த வாழ்த்துப் பாவை வி.ரி.சகாதேவராஜா வாசித்து கையளித்தார்.

# உயிருக்காக போராடும் யானையை காப்பாற்ற வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கை

கல்குடா தினகரன் நிருபர்



ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மஜ்மா நகரில் காட்டு யானை ஒன்று எழுந்து நடக்க முடியாமல் கடந்த ஒரு வாரமாக உயிருக்குப் போராடி வருகின்றது.

இதனை உயிருடன் மீட்க வனஜீவராசிகள் திணைக்கள வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருந்தினர்.

இருந்த போதும், யானையின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதுடன், தொடர்ச்சியாக நீர், உணவுகளை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கமைய பொலிஸ் பரிசோதகர் சம்பத் (ஐ.பி) மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களான தினேஷ், தாஜிதீன் ஆகியோர் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதனைப் பராமரிக்கும் முழு நேரப்பணியில் கல்குடா டைவர்ஸ், அகீல் எமேர்ஜென்ஸி யுனிட் செயற்பாட்டாளர் முஹம்மது ஹலீம் இரவு பகல் பாராது அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் சுகாதார கருத்தரங்கு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சம்மேளனம் ஒழுங்குசெய்திருந்த சுகாதார பாதுகாப்பு கருத்தரங்கு அண்மையில் அட்டாளைச்சேனை யாடோ ரெஸ்ட்ரோரெண்டில் நடைபெற்றது. சம்மேளத்தால் ஒவ்வொரு வருடமும் அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களிலும் இச் சுகாதார பாதுகாப்பு கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

# அம்பாறை மாவட்ட வெகுஜன மக்கள் சம்மேளன செயலமர்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

"நாம் இலங்கையர்" சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளில் வெகுஜன மக்கள் சம்மேளனத்தின் அம்பாறை மாவட்ட இரண்டாவது செயலமர்வு அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் வெகுஜன மக்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹாசிம் ஸாலிஹ் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில், வெகுஜன மக்கள் அமைப்பின் ஸ்தாபகர் சமன் ஹேமன்கொட விசேட வளவாளராகவும், ராகுல் தமிழ் மொழி இணைப்பாளராகவும் கலந்து கொண்டார். இதில் முப்பதுக்கும் மேற்பட்ட மூவின ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

## நீர்வேலியில் தீ – மூதாட்டி உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர் )

யாழ்ப்பாணம் நீர்வேலி பகுதியில் வீடொன்று சனிக்கிழமை தீ பற்றியதில், வீட்டில் தனிமையில் இருந்த 65 வயதான மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

வீடு தீப்பற்றி எரிவதனை கண்ணுற்ற அயலவர்கள் தீயினை அணைக்க முற்பட்டதுடன், யாழ். மாநகர சபை தீயணைப்பு படையினருக்கும் அறிவித்ததை அடுத்து தீயணைப்பு படையினர் விரைந்து வந்து, தீயினை அணைத்தனர்.வீட்டில் இருந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் தீ பற்றிய நிலையில் வீட்டின் வெளியே காணப்பட்டுள்ளது.

சிலிண்டர் வெடித்து தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது நாசகார செயலா என தெரியாத நிலையில் யாழ்ப்பாண தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

## யாழில். வழிப்பறியில் ஈடுபட்ட தம்பதியினர் விளக்கமறியலில்

யாழ் . விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர். சங்கானை மருத்துவமனை வீதியில், துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதியினர் அறுத்துக்கொண்டு தப்பி ஓட முயன்ற வேளை ஊரவர்கள் மடக்கி பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை கணவன் மனைவி இருவரும் சுன்னாகம் பகுதியிலும் கடந்த வாரம் நபர் ஒருவருடைய சங்கிலியை அறுத்ததாகவும், அதனை யாழ் . நகர் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அடகு வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்னர். விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

## ஒரு வருடத்தின் பின்னர் பயணத்தை ஆரம்பித்த நெடுந்தாரகை

(யாழ் . விசேட நிருபர் )



சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு வியாழக்கிழமை தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸினால் , வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்குத்துறைக்கு சென்ற ஆளுநர், படகை பார்வையிட்டார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது தமது தீவில் நீண்டகாலமாக காணப்பட்ட போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தமை தொடர்பில், ஆளுநருக்கு நெடுந்தீவு மக்கள் நன்றியை தெரிவித்தனர். பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு தினமும் சேவையில் ஈடுபடவுள்ளது.

நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் உதயம்

## யானையின் தாக்குதலிற்குள்ளான ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதி

(ஓமந்தை விஷேட நிருபர் )

காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகிய ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவவளை பகுதியில் இருந்து கேப்பாபிலவு வீதியால் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது புதுக்குடியிருப்பு கள்ளியடி பாலத்தடியில் இரண்டு யானை வீதியை வழிமறித்து ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை தூக்கி எறிந்ததோடு குறித்த ஆசிரியரினை தாக்கிவிட்டு சென்றுள்ளது. அதனையடுத்து தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் காயங்களோடு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் நடனசபாபதி சிவசோதி கணுக்கேணி முள்ளியவளையைச் சேர்ந்த 28 வயதுடைய உடையார்கட்டு குரவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பதும் குறிப்பிடதக்கது.

## வட மாகாண பத்து வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவிற்கு அதிநவீன படுக்கை

வடக்கு மாகாணத்திலுள்ள பத்து வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவிற்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட நன்கொடைகள் ஜேர்மன் நன்கொடையாளர் ஒருவரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிகழ்வு வவுனியா பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களிடம் இந்த நன்கொடை பொருட்கள் கையளிக்கப்பட்டன.

ஸ்ரீ சக்தி ஆன்மீக இந்து அமைப்பின் ஊடாக சர்வதேச இந்து கலாசார ஆலோசகரான கலாநிதி இரத்னசாமி ராமேஸ்வரன் என்பவரால் ஜேர்மன் நாட்டிலிருந்து பெறப்பட்ட இந்த நன்கொடைகள் இலங்கையின் பல பாகங்களில் பகிர்ந்தளிக்கப்படுகிறன. அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவிற்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

## கற்பகா அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கௌரவம்







கற்பகா அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களான திருமதி ல. பவானி, திருமதி ப.கிருத்திகா, திருமதி சாமினி ஆகியோர் வெள்ளைப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் அண்மையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## மலையக மக்களது காணியுரிமை தொடர்பான நூல் வெளியீட்டு வைபவம்

(கினிகத்தேனை தினகரன் , மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்)




பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் மலையக மக்களது அடிப்படை பிரச்சினைகளில் ஒன்றான காணியுரிமையை மையமாக் கொண்டு சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமாரினால் எழுதப்பட்ட மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைப் பிரச்சினைகள் ஒரு சட்ட அடிப்படையிலான விளக்கம் என்ற நூல் நிறுவனத்தின் தலைவர் எஸ். டி.கணேசலிங்கம் தலைமையில் ஹட்டன் சிவாலய மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் நூல் தொடர்பான விமர்சன உரையை சமூக செயற்பாட்டாளர் ஜோன் சட்டதரணி நேருகருணாகரன் விரிவுரையாளர் சண்முகம் வடிவு ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து நூல் தொடர்பான விளக்கவுரையை நிறுவனத்தின் தலைவர் எஸ்.டி. கணேசலிங்கம் குறிப்பிடும் போது மலையக மக்கள் இந்நாட்டில் வாழ்ந்தாலும் கூட அவர்களுக்கான வீட்டுவரிமை தொடர்பான சட்ட ஏற்பாடுகள் இதுவரை கொண்டுவரப்படவில்லை தவிரவும் இந்நூலை எழுதியவர் கூட ஒரு நீண்ட நாள் உள்ள தரவுகளை அடிப்படையாக்கொண்டே எழுதப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது ஜனாதிபதி தேர்தல் காலமாக காணப்படுகின்றது இருப்பினும் ஒவ்வொருவரும் வெளியீட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்கள் காணியுரித்து தொடர்பான விளக்கம் இல்லை அது அவர்களின் கடிதமாகவே யுள்ளது.



அத்துடன் மலையக மக்கள் காணியுரிமை தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அதனப்படையில் இது ஒரு முன்மொழிவு யார் ஜனாதிபதியாக வந்தாலும் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.தொடர்ந்து நூலாசிரியர் சட்டதரணி சுகுமாரன் உரையாற்றும் போது இந்நூலை எமது அரசியல்வாதிகள் வாசித்து நேர்மையாக அணுகுவார்கள் என எனக்கு நம்பிக்கையில்லை இருப்பினும் இளைஞர் மற்றும் யுவதிகள் வாசித்து அவர்களினால் ஏதோ ஒருவகையில் அழுத்தத்தை கொடுப்பார்கள் என்பது மாத்திரம்தான் நிச்சயம் என தெரிவித்தார். இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒவ்வொரு பிரதேசத்தின் கழகங்களின் பிரதநிதிகள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

மலைச்சாரல்

## இறந்தும் பலருக்கு வாழ்வு கொடுத்த 21 வயது யுவதி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மூளைச்சாவால் இறந்த 21 வயதான யுவதி ஒருவர் தனது உறுப்புக்களை உயிர் வாழ்கின்றவர்களுக்கு வழங்கிய நெகழ்ச்சியான சம்பவம் கலிகமுவ மகபாகே பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த 9 ஆம் திகதி மேற்படி யுவதி தலைவலி காரணமாக கேகாலை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் வைத்தியர்களின் சிகிச்சை பயனளிக்காத நிலையில் 13 ஆம் திகதி அவர் மரணமடைந்துள்ளார். எனினும் இச்சிறுமியின் இரண்டு கண்கள் இரண்டு சிறுநீரகங்கள் கல்லீரல் ஆகியவற்றை குறைபாடு உள்ளவர்களுக்கு தானம் செய்ய அ வரது பெற்றோர்கள் விரும்பியதால் அவரது கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம் ஆகியன இரண்டு நோயாளர்களுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டதாக இந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்தன வீரகோன் (18) தெரிவித்தார்.

சுகன்யா வீரகோன் எனும் பெயருடைய இவரது உறுப்புகள் பொருத்தப்பட்டவர்கள் மிக ஆரோக்கியமாக இருப்பதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். தமது மகள் மரணித்தாலும் பல உயிர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது ஆறுதலைத் தருவதாக யுவதியின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

## எல்ல சின்ன ஸ்ரீபாதா மலை வனப் பகுதில் காட்டுத் தீ

(ஊவா சுழற்சி நிருபர் )

எல்ல சின்ன ஸ்ரீபாதா மலை வனப்பகுதில் காட்டுத் தீ பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இலங்கையில் பிரபலமான எல்லை பிரதேசத்தின் எல்ல சின்ன ஸ்ரீபாதமலை வனப் பகுதிக்கு வேட்டையாடும் இனந் தெரியாதோரால் இரவு தீ வைத்ததில் இப் பகுதி எங்கும் தீ பற்றி எரிவதாக தெரிவித்த பொலிஸார் வன இலாகா அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இம் மலைத் தொடரில் வாழும் வனவிலங்குகள் மற்றும் ஹம்மிங் பறவைகள் உள்ளிட்ட பெறுமதி மிக்க மூலிகை மரங்களும் இந்த தீயினால் கருகியுள்ளதாகவும் மலைத் தொடரை அன்டியுள்ளவர்களை மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் எச்சரித்த எல்ல பொலிஸார் இவ்வாறான முட்டாள்தனமான வேலை செய்யும் வேட்டையாடுவோர் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தனர்.




# 94ஆவது தேசிய தினத்தை கொண்டாடும் சவுதி அரேபியா




## மனிதநேய இராச்சியம் சவுதி அரேபியா

இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலுள்ள இராஜதந்திர உறவுகள் மிகப் பழமையானவை, இன்னும் மிக வலுவானவையும் கூட. வரலாறு நெடுகிலும், இலங்கை சவுதி அரேபியா ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்புகளை பார்க்கின்றபோது இவ்விடயம் மிகத் தெளிவாகின்றது. சவுதி அரேபியா இலங்கையின் பல்வேறுபட்ட முன்னேற்றங்களில் பங்கு கொண்டுள்ளது, அதிலும் மிக விசேஷமாக கல்வி, சுகாதாரம், நீர், மின், போக்குவரத்து, பொருளாதாரம் ஆகிய விடயங்களை ஈண்டு கூறலாம்.1984 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை சவுதி அரேபியாவின் பலதரப்பட்ட அரச நிறுவனங்களினூடாக இலங்கைக்கு 458,353,631 அமெரிக்க டொலர்கள் உதவியாக வழங்கப்பட்டுள்ளன, அவை 55 பாரிய திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் திகதி, இலங்கையிலுள்ள சவுதி அரேபிய தூதரகம் வெளியிட்ட ஓர் அறிக்கையில், இலங்கையின் பல்வேறுபட்ட துறைகளின் முன்னேற்றத்திற்கு சவுதி அரேபியா ஆற்றிய பங்களிப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**அவை பின்வருமாறு:**

*1 நீர் விநியோக வடிகாலமைப்பு அபிவிருத்தித் திட்டம்: (26.64 மில்லியன் அ. டொ).*

*2 மின்சார அபிவிருத்தி திட்டம்: (12.83 மில்லியன் அ. டொ)*

*3 வயம்ப பல்கலைக்கழக அபிவிருத்தி திட்டம்: (28 மில்லியன் அ. டொ)*

*4 சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்மாணமத் திட்டம்: (50 மில்லியன் அ. டொ)*

*5 கொழும்பு பெரிய வைத்தியசாலையில், நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, பெட் ஸ்கேனர் போன்றவற்றிற்கென வாட்டுக்கள் கொண்ட ஒரு விஷேட கட்டிடம்: (32 மில்லியன் அ. டொ)*

*6 கொழும்பில் வைத்திய சேவைகளை மேம்படுத்தல் திட்டம்: (14.93 மில்லியன் அ. டொ)*

*7 மகாவலி கங்கை (B வலையம்) அபிவிருத்தி திட்டம்: (22.66 மில்லியன் அ. டொ)*

*8 களுகங்கை அபிவிருத்தி திட்டம்: (46 மில்லியன் அ. டொ)*

*9 களுகங்கையுடன் தொடர்பட்ட இன்னொரு அபிவிருத்தி திட்டம்: (45 மில்லியன் அ டொ)*

*10 திருமலை மட்டக்களப்பு அதிவேக வீதி அபிவிருத்தி திட்டம்: (10.66 மில்லியன் அ. டொ)*

*11. பேராதெனிய பதுளை செங்கலடி அதிவேக வீதி அபிவிருத்தி திட்டம்: (60 மில்லியன் அ. டொ)*

*12. இன்னொரு வீதி அபிவிருத்தி திட்டம்: (60 மில்லியன் அ. டொ)*

என மொத்தமாக 408.72 மில்லியன் அ. டொலரைக் கொண்ட பங்களிப்பு சவுதி அரேபியாவினால் இலங்கைக்கு ஒரு குறுகிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கும் அதிகமாக இன மத மொழி வேறுபாடுகள் இன்றி இலட்சக்கணக்கான இலங்கையர்கள் அங்கு பணி புரிகின்றனர். அது எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது.

அத்துடன் இலங்கையிலுள்ள அதிகமான தொண்டர் நிறுவனங்கள் சவுதி அரேபியாவின் தொண்டர் நிறுவனங்களுடனும் அரசாங்கத்துடனும் தனிநபர்களுடனும் தொடர்புபட்டு இலங்கையர்களுக்கு பல உதவிகளையும் வழங்கி வருகின்றன. அந்நிறுவனங்களிலிருந்து இலங்கைக்கு வரும் பணம் இலங்கையின் பொருளாதாரத்தில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவது போன்றே இலங்கையர்களின் தேவைகளை கணிசமாக நிறைவேற்றுகின்றது, அதன் மூலமாக இலங்கை அரசின் சுமையின் ஒரு பகுதியை அவை தாங்கிக் கொள்கின்றன, விதவைகள் அனாதைகளை பராமரித்தல், தனிப்பட்ட குடும்பங்கள், வீடுகள், கிராமங்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், மின்சார வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக உதவுதல், அனர்த்தங்களின் போது நிவாரணங்களை வழங்குதல் போன்றன அடிக்கோடிட்டு கூற முடியுமான சில பணிகளாகும்.

நேர்மையாக சிந்திக்கும் எவரும் இவற்றை பார்க்கும் போது அந்நாட்டிற்கு நன்றிக்கடன் பட்டவராகவே உணர்வர்.

சவுதி அரேபியாவிலுள்ள அதிகமான பல்கலைக்கழகங்கள், இலங்கை மாணவ மாணவிகளுக்கும் முழுமையான புலமைப் பரிசில்களை வழங்கி, இலவசப் பல்கலைக்கழகக் கல்வியையும் வழங்குகின்றன. இப்பல்கலைக்கழகங்களில் எமது நாட்டு மாணவ மாணவிகள் தற்பொழுதும் கல்வி பயின்று வருகின்றனர்.

மாதாந்தக் கொடுப்பனவையும், இலவச மருத்துவ வசதி, இலவச விடுதி வசதி, விலை குறைக்கப்பட்ட மூன்று நேர உணவு, மற்றும் ஒவ்வொரு வருடமும் கோடைகால விடுமுறையில் நாடு சென்று திரும்ப இலவச விமான டிக்கெட் என்பனவற்றையும் வழங்குவதோடு மாதாந்தப் பரீட்சைகளின் போது ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகிறது. இது கலைமாணி (BA) பட்டப்படிப்பில் கற்கும் மாணவர்களுக்கான சலுகைகள், அதற்கு மேற்தரத்தில் கற்கும் மாணவர்களுக்கான சலுகைகள் இதைவிட உயர்ந்ததாக இருக்கும்.

நானும் இவ்வனைத்து சலுகைகளுடனும், ஐந்து வருடங்கள் அங்கு கற்றிருக்கின்றேன். அந்தப் பாக்கியத்தை தந்த அல்லாஹ்வுக்கு நன்றி கூறுவதுடன். அந்த சந்தர்ப்பத்தை தந்த சவூதி அரேபியாவின் அரசாங்கத்துக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், இவ்வாறு உலக நாடுகள் அனைத்துக்கும் சேவைகளை அள்ளி வழங்குகின்ற சவுதி அரேபியா, இன்று (23/09/2024) தனது 94ஆவது தேசிய தினத்தை கொண்டாடுகிறது.

இச்சந்தர்ப்பத்தில், அல்லாஹ் அந்நாட்டிற்கும், அந்நாட்டில் ஆட்சியாளர்களுக்கும் குடிமக்களுக்கும் செல்வ செழிப்பையும், நிம்மதியான வாழ்க்கையும் பாதுகாப்பையும் சொரிய வேண்டும் என மனமார பிரார்த்திக்கின்றேன்.



**கலாநிதி எம்.எச்.எம். அஸ்ஹர் (PhD)**
**பணிப்பாளர்.**
**அல் இமாம் அப்துல் அஸீஸ் பின் பாஸ் பெண்கள் கல்லூரி**
**மல்வானை**

## இரண்டு புனித ஸ்தலங்களுக்கும் சேவை செய்வதை தங்கள் ஆட்சியின் தலையாய கடமையாகக் கொண்ட ஆலு ஸூஊத் ஆட்சியாளர்கள்

மத்திய கிழக்கில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட நாடாக காணப்படும் சவுதி அரேபியா ஒரு காலத்தில் எவராலும் கவனிக்கப்படாத வெறும் பாலைவனப் பிரதேசமாகவே காணப்பட்டது. பயனற்ற இடங்களாக அவை இருந்ததனால் மக்கா மதீனா தவிர உஸ்மானியப் பேரரசும் கூட தனது ஆளுகையின் கீழ் அந்நிலங்களைக் கொண்டுவருவதற்கு ஆர்வம் காட்டவில்லை. அதனால் சிறு சிறு இராச்சியங்களாகப் பிரிந்து குழுச்சண்டைகளும் கோத்திர மோதல்களும் நிறைந்த இடங்களாக காணப்பட்டன. இந்நிலையை மாற்றி சிறந்த நாகரிகத்தைக் கொண்ட ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டும், இப்பிரதேசங்கள் அனைத்தையும் ஒற்றுமைப்படுத்தி பலமான ஓர் ஆட்சியை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் 26 வயது மதிக்கத்தக்க இளைஞனாக இருந்த வீரத்திற்கும் அறிவிற்கும் பேர்போன சமயோசித சிந்தனைமிக்க இளவரசர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களை அவரது தந்தை மன்னராக ஆக்கினார். ரியாத்தை தலைமையகமாக கொண்டு இயங்கிய அரசை பொறுப்பேற்று சொற்ப காலத்தில் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய ஒரு பெரும் அரசை உருவாக்கினார். அப்பிரதேசங்கள் அனைத்தையும் ஒற்றுமைப்படுத்தும் வகையில் சவுதி அரேபிய இராட்சியம் என்ற பெயரிலேயே இது இனிவரும் நாட்களில் அழைக்கப்படவேண்டும் என்று ஹி.17 ஜுமாதா அல் ஊலா 1351 (1932.09.23) ஆம் ஆண்டு கட்டளையிட்டார். அன்றிலிருந்து சவுதி அரேபியா இராச்சியம் என்ற பெயரில் அழைக்கப்படுவதுடன் அந்நாளை தேசிய தினமாகவும் சவுதி அரேபியா கொண்டாடி வருகின்றது.

தற்போதய சவுதி அரேபியாவின் நிறுவனரான மன்னர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலம் தொடக்கம் மன்னர் ஸல்மானுடைய தற்காலம் வரை பொதுவாக சவுதியின் மன்னர்கள் பள்ளி வாயில்களை நிறுவுவதிலும் அவற்றைப் பராமரிப்பரிப்பதிலும் இஸ்லாமியத் தளங்களை உருவாக்குவதிலும் அதற்காக சேவை செய்வதில் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர்களுக்கு அவர்களே நிகர் எனும் அளவுக்கு போட்டி போட்டு செயற்படுபவர்கள் என்பதை நடுநிலையாக சிந்திக்கும் எவரும் மறுக்கமாட்டார்கள். அதிலும் இரண்டு புனிதஸ்தலங்களையும் இஸ்லாத்தின் ஐந்தாம் கடமையான ஹஜ்ஜுடன் தொடர்புபடும் பிற இடங்களையும் அபிவிருத்தி செய்வதை தங்களின் தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் மக்கா மதீனாவின் பராமரிப்பு தனது ஆட்சிக்குக் கீழ் வந்தபோது ஹஜ் கடமையை நிறைவேற்று பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாடுபட்டார். குழப்பத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தியதுடன் மிகவும் அமைதியான ஒரு சூழலை உருவாக்கினார். பல மில்லியன் மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடினாலும் அவ்விடத்தில் பேணப்படும் அமைதியும் பாதுகாப்பும் வணக்கம் செய்பவர்களுக்கு உருவாக்கப்பட்டிருக்கும் ஆண்மீகச் சூழலும் பார்ப்பவர் எவரையும் கவராமல் இருக்க முடியாது.

அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மக்கா மஸ்ஜிதுல் ஹராமின் எல்லாவற்றையும் புனர்நிர்மாணம் செய்யுமாறு கட்டளையிட்டார். விரிப்பு நிறப்பூச்சு தொடக்கம் கஃபாவின் போர்வை வரை அனைத்தும் மாற்றப்பட்டன, பள்ளியின் அனைத்து இடங்களிலும் மின்சார விளக்குகளும் மின் விசிறிகளும் பொருத்தப்பட்டன. பழுதடைந்த அனைத்தும் மாற்றப்பட்டன. ஹி. 1348ல் மதீனா மஸ்ஜிதுன் நபவியை முழுமையாக புனர்நிர்மாணம் செய்யுமாறு பணித்ததோடு 1368இல் பள்ளியை விஸ்தரிக்கும் பணியிலும் ஈடுபட்டார்.

அதன் பின்னர் வந்த அவரது மகன் ஸுஊத் பின் அப்துல் அஸீஸ் மஸ்ஜிதுல் ஹராமின் அருகாமையிலிருந்த நிலங்களை வாங்கி பள்ளிக்கு வக்பு செய்ததோடு மஸ்ஜிதுன் நபவியை விஸ்தரிக்கவும் 25மில்லியன் ரியால்களை செலவிட்டு அருகாமையிலிருந்த நிலங்களை வாங்கினார். விஸ்தரிப்புப் பணிகள் மிக நேர்த்தியாக நடைபெறுவதை உறுதிசெய்ய தானே களத்திற்கு அதிகமாக விஜயம் செய்ததோடு பணிகள் நிறைவுற்ற நாளை 1375ஆம் ஆண்டு ஒரு பெருவிழாவாக ஏற்பாடு செய்தார். அவரின் பின்பு ஆட்சியை பொறுப்பேற்ற முஸ்லிம் உலகின் முன்மாதிரி மிக்க தலைவர்களில் ஒருவராக அனைவராலும் பார்க்கப்படும் மன்னர் பைஸல் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) தனது பங்கிற்கு தவாப், ஸஈ செய்யும் இடங்களை விஸ்தரித்ததோடு கஃபாவிற்கான போர்வை தயாரிக்கும் தொழிற்சாலையை புதிய இடத்திற்கு மாற்றினார். ஹரத்தின் நூலகத்திற்காக தனியான கட்டடத்தை அமைத்தார். மேலும் மஸ்ஜிதுன் நபவியை 40,000சதுர மீட்டர் அளவு விஸ்தரிப்புச் செய்ததோடு நிழல் குடைகளையும் தொழுகைக்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களின் அடுத்த மகன் காலித் (ரஹ்) அவர்களின் ஆட்சியிலும் புனிதஸ்தலங்களுக்கான சேவைகள் தொடர்ந்தன குறிப்பாக அவரது காலத்தில் தூய தங்கத்தில் கஃபாவின் வாயிலும் கஃபாவின் கூரைக்கு ஏறுவதற்கான வாயிலும் செய்யப்பட்டதோடு மஸ்ஜிதுல் ஹராமை தூய்மைப்படுத்துவதற்கான புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. மஸ்ஜிதுன் நபவியின் விஸ்தரிப்புக்காக 43000சதுர மீட்டர் நிலப்பரப்பை வாங்கி வக்பு செய்ததோடு அதன் விஸ்தரிப்புப் பணிகளையும் முறையாக நிறைவேற்றினார்.

அதன் பின்பு வந்த மன்னர் பஹ்த் (ரஹ்) அவர்களின் காலத்தில் முன்சென்ற 14 நூற்றாண்டுகளிலும் இல்லாத அளவு புனிதஸ்தலங்களுடன் தொடர்புடைய அனைத்தும் பாரிய அளவு முன்னேற்றப்பட்டன.

தற்போதிருக்கும் மன்னர் ஸல்மான், பட்டத்து இளவரசர் முஹம்மது பின் ஸல்மான் அவர்களின் காலம் புனிதஸ்தலங்களின் பொற்காலம் என்று சொல்லுமளவுக்கு மிகவும் கவர்ச்சியான முழுமையாக உயர்ரக தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி விஸ்தரிப்புப் பணிகளும் புனர்நிர்மாணப்பணிகளும் இரண்டு பிரதான பள்ளிகளிலும் வணக்கத்தில் ஈடுபடுபவர்களுக்கு எந்த அசௌகரியத்தையும் ஏற்படுத்தாத வகையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதுவரை காலமும் செய்யப்பட்ட விஸ்தரிப்புகளில் மூன்றில் இரண்டு மடங்கு அளவான விஸ்தரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அத்தோடு புனிதஸ்தலங்களுக்கான தனியான ஒரு சபையும் உருவாக்கப்பட்டுள்ளது.



**அஷ்ஷைக் எம் ஏ எம் ளபர்**
**விரிவுரையாளர் இப்னு அப்பாஸ் அரபிக் கல்லூரி காலி**

## இஸ்லாமிய சேவைகளுக்காக அதிக நிதி ஒதுக்கும் நாடு

சர்வதேசம் உற்றுநோக்கும் சவூதி அரேபிய தேசத்தின் உருவாக்கம் 3 காலகட்டங்களைக் கொண்டது. 1727 பிப்ரவரி 22 இல் முதலாம் சவுதி இராச்சியத்தின் மன்னரான இமாம் முஹம்மது பின் சஊத் அவர்கள் தன் தந்தை சுஊத் அவர்களுக்குப்பின் ரியாத் மாகாணத்தின் "திர்இய்யா" என்னும் பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முதலாம் சவூதி ராஜ்யத்தை உருவாக்கிய தினமே சவுதியின் ஸ்தாபக தினம் என அழைக்கப்படுகிறது.

பின் மூன்றாம் கட்டமாக தேசத்தின் தந்தை என அழைக்கப்படும் மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் 1932 இல் மிகப் பெரிய நிலப்பரப்பாகக் காட்சியளித்த தமது நாட்டுக்கு அவர்களே " அல் மம்லகதுல் அறபிய்யதுஸ் ஸுஊதிய்யா" (KINGDOM OF SAUDI AREBIYA) KSA சவூதி அரேபிய ராஜ்ஜியம் என்று அத் தேசத்தின் முதல் மன்னரான தனது பாட்டனின் பெயரை தேசத்திற்கு பெயர் சூட்டினார். இத்தினமே செப்டம்பர் 22இ ல் தேசிய தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகளாவிய முஸ்லிம்களுக்கு சவூதி அரேபியா ஒரு தாயைப் போன்றது ஏனெனில் முஸ்லிம்களின் இரு புனித ஸ்தலங்களான மக்கா, மதினா மற்றும் முஸ்லிம்கள் தொழுகையில் முன்னோக்கும் கஃபத்துல்லாஹ் இங்குதான் அமைந்துள்ளது .

மேலும் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் உம்மத்தினர் ஹஜ் கடமையை நிறைவேற்ற வருடா வருடம் ஒன்று கூடும் நாடாக சவுதி திகழ்கின்றது. இறுதித்தூதர் முஹம்மது நபியின் அடக்கஸ்தலமும் மற்றும் இஸ்லாத்துக்கு தோள் கொடுத்த ஆயிரக்கணக்கான நபித் தோழர்களும் அடக்கப்பட்டு இருக்கும் புனித மண்ணாகும்.

இது தவிர இஸ்லாமிய சேவைகளுக்காக அதிக நிதியை ஒதுக்கும் முஸ்லிம் நாடுகளில் முதல் இடத்தை பிடிக்கும் நாடாக சவுதி அரேபியா காணப்படுகின்றது. இதற்கு அப்பால் இன மத பேதமின்றி தன் சேவைகளை சர்வதேசம் எங்கும் வழங்கும் முன்னணி நாடுகளில் சவூதி அரேபியாவும் ஒன்றாகும்.

இத்தகு சிறப்புமிகு இந்நாடு காலமெல்லாம் மார்க்கத்திற்கும் உலக மக்களுக்கும் நிலைத்து நின்று சேவையாற்ற வேண்டுமென அதன் 94வது தேசிய தினத்தை முன்னிட்டு இறைவனை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் ஆல் சஊத் அவர்களுக்கும், பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல்அசீஸ் ஆல் சஊத் அவர்களுக்கும், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் ஹமூத் அல் கஹ்தானி அவர்களுக்கும்சவூதி அரேபியா மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்..



**ஆக்கம் : எம்.எம். மன்சூர் மதனீ.**
**பிரதிப் பணிப்பாளர்,**
**மஃஹதுஸ் ஸுன்னா அறபுக் கல்லூரி**
**காத்தான்குடி.**

## மனிதாபிமான உதவிகளை செய்வதில் முன்னணி வகிப்பு

ஒவ்வொரு வருடமும் சவூதி அரேபியா செப்டம்பர் 23ஆம் திகதி அதன் தேசிய தினத்தைக் கொண்டாடுகின்றது. அதனடிப்படையில் இம்முறை அதன் 94 ஆவது தேசிய தினத்தை ஆடம்பரத்துடன் கொண்டாடுகின்றது. மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் சவூதி அரேபியாவின் அனைத்துப் பிரதேசங்களையும் ஒரே குடையின் கீழ் ஒன்று சேர்த்து " சவூதி அரேபிய இராச்சியம்" (kingdom of Saudi Arabia) என்ற பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தமை இது போன்ற ஒரு தினத்திலாகும்.

இன்று சவூதி அரேபியா அதன் "விஷன் 2030" என்ற இலக்கினூடாக அனைத்துத் துறைகளிலும் மிகப் பிரமாண்ட முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் கச்சா எண்ணை வளத்தின் மீது மாத்திரம் சார்ந்திருக்காமல் பிற வழிகளிலும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே "விஷன் 2030" இன் பிரதான இலக்காகும். அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் சவூதி அரேபியா வெற்றிகண்டுவருவதை உலக நாடுகள் பெருமளவில் பாராட்டிவருகின்றன. நவீன தொழில் நுட்பத்துடன் ஒன்றிணைந்து போட்டி நிறைந்த உலகப் பொருளாதாரத்தின் புதிய இலக்குகளை நோக்கி துரிதமாக அது நகர்ந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக 10/09/2024 ரியாத் நகரில் நடைபெற்ற உலக செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டைக்(Global AI Summit )குறிப்பிடலாம். அதிலும் குறிப்பாக Google,Amazon.Microsoft போன்ற பாரிய நிறுவனங்களின் பிரதானிகளும் அதில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

இன்னொரு புறத்தில் சவூதி அரேபியா மனிதாபிமான உதவிகள் செய்து வருவதிலும் முன்னணி வகிக்கும் நாடு என்பதையும் யாரும் மறுக்க மாட்டார்கள்.உலக நாடுகள் பல்வேறுபட்ட சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது அவற்றுக்கு ஆதரவாக நட்புக்கரம் நீட்டுவதில் சவூதி அரேபியா முதல் நிலை வகிப்பது நாம் கண்கூடாகப் பார்க்ககூடிய ஒரு விடயமாகும்.அதிலும் குறிப்பாக அண்மையில் யுத்ததினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீன், சூடான், யெமன் போன்ற நாடுகளுக்கு கோடிக்கணக்கில் உதவிகளை அள்ளிக் கொடுப்பதை நாம் மீடியா க்கள் மூலமாக அறிகின்றோம்.

அதே போன்று நமது இலங்கை நாட்டின் சமூக,பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காகவும் அன்று தொட்டு இன்றுவரை அந்த நாடு பெரும் பங்காற்றி வருகின்றது. சவூதி அரேபியாவின் நிதி ஒதுக்கீட்டில் கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீதியின் பாலமும் மிக விரைவில் நிர்மாணிக்கப்படவிருப்பது ஓர் மகிழ்ச்சியான விடயமாகும்.

இத்தருணத்தில் 94 ஆவது தேசிய தினத்தை கொண்டாடும் சவூதி அரேபிய மக்களுக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் அந்த நாடு சகல விதமான ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமெனவும், மக்களுக்கு சுபீட்சமான, ஐக்கியமான வாழ்வு கிடைக்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.



**அல்தாப் அப்துல் வாஹித்**

# சவூதி அரேபிய இராச்சியத்தின்

## 94ஆவது தேசிய தினம்

# சவூதி அரேபியாவின் 94ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் ஹமூத் அல்கஹ்தானி அவர்களின் செய்தி



சவூதி அரேபியாவின் 94ஆவது தேசிய தினத்தை நாம் கொண்டாடும் இவ்வேளையில், எமது கடந்த காலத்தை கொண்டாடுவது மட்டுமல்லாமல், ஒளிமயமான எதிர்காலத்தையும், அனைத்தையும் உள்ளடக்கிய, நிலையான, புதுமைமிகு மற்றும் வளமான எதிர்காலத்தை சவூதி அரேபிய இராச்சியத்தின் தீர்க்கதரிசனம்மிக்க தலைமைத்துவத்தின் கீழ் கற்பனை செய்கிறோம்.

இன்று, சவூதி அரேபியா அதன் 94 ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. மன்னர் அப்துல் அசீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் ஸுஊத் தொண்ணூற்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற ஒருநாளில்தான் சவூதி அரேபியாவை நிறுவினார். இந்நாளில் ஒவ்வொரு ஆண்டும், நிறுவனர் எடுத்த வீர நிலைப்பாடுகளை நாம் நினைவு கூறுகிறோம். அவர் இராச்சியத்தை ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து, அதனைக் கட்டியெழுப்பினார். பின்னர் அவர் ஆரம்பித்து வைத்த பயணத்தை, தொடர்ந்து வந்த அனைத்து மன்னர்களும் தொடர்ந்தது மட்டுமல்லாது சவூதி அரேபிய இராச்சியத்தை, பிராந்திய மற்றும் உலக அளவில் உயர் பொருளாதார மற்றும் வளர்ச்சி அடைந்த ஒரு நாடக மாற்றுவதில் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், இரண்டு புனித தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் அவர்களுக்கும், பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல்அசீஸ் அவர்களுக்கும், சவூதி அரேபிய மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதய உயர் தலைமைகளின் கீழ் இராச்சியம் மேலும் முன்னேற்றமும் மற்றும் அபிவிருத்தியும் அடைய வாழ்த்துகின்றேன்.

சவூதி அரேபிய இராச்சியம், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் அல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரி ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மற்றும் திட்டங்களின் கீழ், சவூதி அரேபிய இராச்சியத்தின் மூலோபாயத் திட்டமான "விஷன் 2030" ஊடாக பல்வேறு துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும், பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. சவூதி அரேபிய இராச்சியத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நம்பிக்கையளிக்கும் எதிர்கால திட்டங்கள் மற்றும் அதன் குடிமக்களை கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் கலாச்சார ரீதியில் வலுவூட்டல் பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டல் ஊடக மனிதவள அபிவிருத்தியில் முதலீடு செய்வது என அனைத்து மட்டங்களிலும் மேம்படுத்துதல் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்கள் என மிக முக்கிய திட்டங்களை இம்மூலோபாயத் திட்டம் உள்ளடக்கியுள்ளது, உதாரணமாக: மன்னர் சல்மான் பூங்கா, நியோம், தி லைன், தி நியூ ஸ்கொயர் திட்டம், சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்திய கிழக்கு பசுமை முன்னெடுப்பு, திரியா கேட் திட்டம், கிடியா திட்டம், அல்-உலா மேம்பாட்டு திட்டம், ரா:.பிக் உவர் நீர் சுத்திகரிப்புத் திட்டம், அமலா திட்டம், சகாகா சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டம், செங்கடல் திட்டம் மற்றும் மன்னர் சல்மான் சக்திவள நகரத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

சவூதி அரேபிய இராச்சியமானது உலக பாதுகாப்பையும் அமைதியையும் பேணுவதில் ஒரு இன்றியமையாத பங்காளியாக விளங்குகின்றது. சமீப காலங்களில், உலகளாவிய பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்காக பல உச்சிமாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புக்களை சவூதி அரேபியா நடத்தி வந்துள்ளது. அத்துடன், காசா தொடர்பான கலந்துரையாடல்கள், உலக பொருளாதார மாநாடு, உலக செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு (Global AI Summit) மற்றும் இ-ஸ்போர்ட்ஸ் உலகக் கோப்பை" போன்ற பொருளாதார, தொழில்நுட்ப, விளையாட்டு, மருத்துவ உச்சிமாநாடுகளை நடத்தி வந்துள்ளது. மேலும், பல்வேறு சர்வதேச துறைகளில், குறிப்பாக 2030 இல் தலைநகர் ரியாதில் எக்ஸ்போ 2030 என்ற நிகழ்வை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பதானது, சவூதி அரேபியா சர்வதேச அரங்கில் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை அனைத்து நிலைகளிலும் உறுதிப்படுத்துகின்றது.

அவ்வாறே சவூதி அரேபியா இராச்சியமானது, உலகெங்கிலும் வாழும் மக்களின் துயரங்களை நீக்கும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 171க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 131 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது. அந்தவகையில், 7,090க்கும் அதிகமான மனிதாபிமான, நிவாரணம் மற்றும் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. உலகளவில் மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகவும் சவூதி அரேபியா இருந்து வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கையில் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 18 திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.


மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பூமியைப் பாதுகாப்பதற்கும், காலநிலை அபாயங்களைக் குறைப்பதற்கும் சவூதி அரேபிய இராச்சியம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு , மத்திய கிழக்குபசுமை முன்னெடுப்பு, ரியாத்தை தளமாகக் கொண்ட உலகளாவிய நீர் அமைப்பை நிறுவுவதற்கான பட்டத்து இளவரசர் மற்றும் பிரதம மந்திரி அவர்களின் அறிவிப்பு மற்றும் சுத்தமான சக்தி வளத்தில் தங்கியிருத்தல் உட்பட பல முன்னெடுப்புகள் மூலம் இம்முயற்சியானது மேலும் மெருகூட்டப்பட்டது.

சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது நீண்ட காலமாக மிக உன்னதமான இருதரப்பு உறவுகளை பேணி வருகிறது. இரு நாடுகளுக்கிடையிலான இவ்வுறவுகள் பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு நாடுகளுக்கிடையில் பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சமீபத்தில், நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே, இரு நாடுகளின் உயர் அதிகாரிகளின் இரு நாடுகளுக்குமான பரஸ்பர விஜயங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வளர்ப்பதில் மேலும் பங்களிப்புச் செய்துள்ளன.

பொருளாதார ரீதியாக, சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என்பனவற்றுக்கு இடையிலான வர்த்தக பரிமாற்றம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. 2023ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப்பரிமாற்றமானது 400 மில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகரித்துள்ளது. சவூதி அரேபியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருட்களில் உலோகம், பிளாஸ்டிக், தோல் பதனிடும் பொருட்கள், நிறப்பூச்சுகள், காகிதம் மற்றும் அலுமினியம் ஆகியவை உள்ளடங்கும். அதேவேளை, இலங்கை சவூதி அரேபியாவுக்கு கோப்பி, தேயிலை, வாசனைத் திரவியங்கள், ஆடைகள், பழங்கள் மற்றும் மீன் போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. 2023 ஆம் ஆண்டு மே மாதம் சவூதி அரேபியாவின் ரியாதில் நடைபெற்ற சவூதி- இலங்கை கூட்டுக் குழுவின் முதல் கூட்டத்தில், பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கலாச்சாரம், சமூக மற்றும் சுற்றுலா துறைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன் பயனாக, இலங்கை வர்த்தகர்கள் மற்றும் ரியாத் சவூதி அரேபிய வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகளுக்கிடையேயான சந்திப்புகள் நடைபெற்றுள்ளன, மேலும் பிற சந்திப்புக்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சவூதி அரேபிய இராச்சியமானது, இலங்கை குடியரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கிய பங்காளியாகக் கருதப்படுகிறது. இந்த வகையில் இத்திட்டங்களை முன்னெடுக்க சவூதி அரேபியா வழங்கிய மொத்த நிதியுதவி 455 மில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகமாகும். இந்த நிதியானது, சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம், சாலை வலையமைப்பு ஆகிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள், தற்போது செயல்படுத்தப்படுகின்ற சபரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடம் அமைக்கும் திட்டம், வயம்ப பல்கலைக்கழகப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் மற்றும் "குறிஞ்சாகேணி" பாலம் அமைக்கும் திட்டம் ஆகியவையும் உள்ளடங்கும். மேலும், சவூதி அரேபியாவில் சுமார் இரண்டுலட்சம் இலங்கைப் பிரஜைகள் வேலை செய்து வருகின்றனர். இத்துடன், ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் உம்ரா, ஹஜ் மற்றும் சுற்றுலாவிற்காக சவூதிக்கு விஜயம் செய்கின்றனர. இலங்கை மாணவர்கள் சவூதி பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் சவூதி அரசனால் வழங்கப்படுகிறது. இதுவரை 500க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் சவூதிப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். இதேவேளை, இலங்கை பல சவூதி பிரஜைகளுக்கு முக்கிய சுற்றுலா மற்றும் முதலீட்டு தலமாகவும் கருதப்படுகிறது. இறுதியாக, எமது இரு நட்பு நாடுகளுக்கும் மற்றும் அதன் மக்களுக்கும் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியை நல்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.





# சவுதி அரேபிய தேசிய தினம்...! ஐக்கியத்திற்கும் ஒற்றுமைக்குமான அடையாளம்

செப்டம்பர் 23, சவூதி அரேபியா தனது தேசிய தினத்தை அனுஷ்டிக்கிறது, இது 1932ஆம் ஆண்டில் மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் அல் சவுத் (ரஹ்) அவர்களால் அரேபியத் தீபகற்பத்தின் மக்களை ஒன்றிணைத்ததை குறிக்கிறது. இந்த குறிப்பிடத்தக்க சந்தர்ப்பம் சவூதி அரேபிய மக்களின் ஐக்கியத்தினையும் ஒற்றுமையையும் வலுவூட்டி எதிர்காலத்தில் வளமான ஓர் நாட்டினைக் கட்டியெழுப்பும் கனவிற்கு உரமூட்டுகின்றது. நெடுங்கால வரலாற்றையுடைய இஸ்லாமிய விழுமியங்கள் நிறைந்த ஒரு பலம்பொருந்திய தேசமாக சவூதி அரேபியா தொடர்ந்தும் திகழ வேண்டுமென்பதே எம் அவாவாகும்.

"லா இலாஹா இல்லல்லாஹ்" என்ற இஸ்லாத்தின் அடிப்படையில் பல்வேறு கோத்திரங்கள் மற்றும் பிராந்தியங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து சாதனை படைத்தவரே ஸ்தாபக மன்னர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களாவர். இந்த ஒருங்கிணைப்பு ஒரு குறுகிய காலத்தில் பலமான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வித்தாக மாறியது எனில் அது மிகையாகாது.



இத்தினம் சவூதி குடிமக்களின் ஒற்றுமையின் உணர்வையும், அபிலாஷைகளையும், சாதனைகளையும் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டும் ஒரு விஷேட சந்தர்ப்பமாகும். அதேவேளை சவூதி அரேபியாவின் உலகளாவிய மனித நேய உதவிகளை நினைவுபடுத்தி நன்றி கூறுவதற்கான சந்தர்ப்பமாகவும் இதனை நன்றியுடையோர் பயன்படுத்திக் கொள்வர். ஆகவே சவூதி அரேபியர் இலங்கை மக்களாகிய எமக்கு பல மனிதாபிமான உதவிகளை செய்துள்ளதை இங்கே நாம் நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.



**என்.பி.எம். சித்தீக் அல் மதனி**
**ஜே.ஏ.எஸ்.எம், பரகஹதெனிய**

குறிப்பாக இரண்டு புனித மசூதிகளின் சேவகர், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ், இளவரசர் முஹம்மது பின் சல்மான், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் அல்-கஹ்தானி, சவூதி அரேபியக் குடிமக்கள் அனைவருக்கும் சவூதி அரேபியாவின் 94அவது தேசிய தினத்தை முன்னிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**என்.பி.எம். சித்தீக் அல் மதனி**
**ஜே.ஏ.எஸ்.எம், பரகஹதெனிய**







# 94ஆவது தேசிய தினத்தை நினைவு கூரும் சவூதி அரேபியா



1932 செப்டம்பர் 23, அன்று, சவூதி அரேபிய மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் ஆலு சவுத், சவூதி அரேபியா இராச்சியத்தை ஒன்றிணைத்தார் அத்தினம் ஒவ்வொரு ஆண்டும் சவுதியின் தேசிய தினமாக நினைவு படுத்தப்படுகிறது.

இது அந்நாட்டின் தேசிய அடையாளத்தையும், கடந்த தசாப்தங்களில் இராச்சியம் அடைந்த சாதனைகளையும் நினைவுபடுத்துவதற்கான சிறந்ததோர் சந்தர்ப்பமாகும் இந்த ஆண்டு, 94 வது சவூதி தேசிய தினத்தில், இந்த மகத்தான தேசத்தின் விசுவாசம் மற்றும் நம்பிக்கை புதுப்பிக்கப்படுகிறது, மேலும் புகழ்பெற்ற வரலாறு அதன் பண்டைய விடயங்களில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது, மேலும் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானால் தொடங்கப்பட்ட 2030 விஷன் இலட்சிய எதிர்காலப் பார்வைக்கு கூடுதலாக வலு சேர்க்கப்படுகிறது.

அரேபிய தீபகற்பத்தை ஒரே பதாதையின் கீழ் ஒன்றிணைக்கும் முயற்சி பல வருட போராட்டத்திற்குப் பிறகு 1932ஆம் ஆண்டில், மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் சாத்தியப்படுத்தப்பட்டது, சவூதி அரேபியா இன்று பிராந்திய மற்றும் உலகளாவிய சக்தியாக மாறியதற்கு அடித்தளம் அமைத்ததால், இந்த நடவடிக்கை இராச்சியத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக இருந்தது.

இராச்சியம் நிறுவப்பட்டதிலிருந்து, பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் சவுதி அரேபியா பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, எண்ணெய் மற்றும் எரிசக்தித் திட்டங்கள் கணிசமாக விரிவடைந்துள்ளன.

சீர்திருத்தங்கள் கல்வியில் பெரும் முன்னேற்றங்களை அது அடைந்துள்ளது அங்கு பல பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் நிறுவப்பட்டன மேலும் நவீன மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களை உருவாக்குவதன் மூலம் சுகாதார அமைப்பு பலப்படுத்தப்பட்டது.

கடந்த இரண்டு தசாப்தங்களில், அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களின் அடிப்படையில் இராச்சியம் ஏனைய நாடுகளை விட முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்களில் மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப சட்டங்களை உருவாக்குதல் என்பன பிரதானமானவை.

**எதிர்கால 2030 விஷன்**

2016 ஆம் ஆண்டில், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் 2030 விஷன் ஐ அறிமுகப்படுத்தினார், இது சவூதியின் பொருளாதாரத்தை மாற்றியமைத்து, அதை மேலும் பலதரப்பட்ட மற்றும் நிலையானதாக மாற்றுவதையும், முக்கிய வருமான ஆதாரமாக எண்ணெயைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

2030 விஷன் இன் மிக முக்கியமான இலக்குகளில் ஒன்று சவுதியின் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துவதாகும். சுற்றுலா, விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் பொழுதுபோக்கு போன்ற எண்ணெய் அல்லாத துறைகளில் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், பொருளாதாரத்தை மேலும் நிலையானதாக மேம்படுத்தவும் இராச்சியம் முயல்கிறது. இந்த போக்குக்கு பங்களிக்கும் மிக முக்கியமான திட்டங்களில் ஒன்று "NEOM" திட்டமாகும், இது மேம்பட்ட தொழில்நுட்பத்தைச் சார்ந்த புதுமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஸ்மார்ட் சிட்டி ஆகும்.

விஷன் 2030 இன் முக்கிய துறைகளில் சுற்றுலாவும் ஒன்றாகும். உலகம் முழுவதிலிருந்தும் மில்லியன் கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கும் நோக்கில் சுற்றுலா விசாக்களை அறிமுகப்படுத்தி, உலகிற்கு அதன் கதவுகளைத் திறந்துள்ளது.

**புதுமை மற்றும் தொழில்நுட்பம்**


தொலைநோக்கு 2030 இல் தொழில்நுட்பம் ஒரு முக்கிய பகுதியாகும், ஏனெனில் இராச்சியம் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் முன்னோடி நாடுகளின் வரிசையில் இணைந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலமும், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் ஆகிய துறைகளில் சவுதி அரேபியா முன்னணி நாடுகளில் ஒன்றாக இருக்கவும் முயல்கிறது.

94 வது சவூதி தேசிய தினம் நிகழ்வுகள் மட்டுப்படவில்லை மாறாக தேசப்பற்று மற்றும் தாய்நாட்டிற்கு சொந்தமான உணர்வை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை அவை பிரதிபலிக்கின்றன இராச்சியத்தை கட்டியெழுப்புவதற்கும், அதை ஒரு முன்னணி பொருளாதார மற்றும் அரசியல் சக்தியாக மாற்றுவதற்கும் பங்களித்த வீரர்கள், தொழிலாளர்கள் மற்றும் அறிஞர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

2030ஆம் ஆண்டு நெருங்கி வருவதால், இராச்சியம் பல்வேறு நிலைகளில் தொடர்ந்தும் பெரிய சாதனைகளை அடைந்து வருகிறது. விஷன் 2030, உலகின் மிகவும் வளர்ந்த மற்றும் புதுமையான நாடுகளில் ஒன்றாக சவுதி அரேபியாவின் பெரும் லட்சியங்களை வெளிப்படுத்துகிறது.

சவூதியின் 94 வது தேசிய தினம் என்பது ராஜ்ஜியத்தை ஒன்றிணைத்த நினைவுதினமாக மட்டுமின்றி விசுவாசத்தையும் தேசப்பற்றையும் புதுப்பிப்பதற்கும், கடந்தகால சாதனைகளை மறுபரிசீலனை செய்வதற்கும் மற்றும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்ப்பதற்குமுமான நாளாகும். விஷன் 2030 என்பது ராஜ்ஜியத்திற்கான பிரகாசமான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடத்தை பிரதிபலிக்கிறது,

**எம் எப் எம் ஹஸன் பாரிஸ்**
**விரிவுரையாளர்**
**ஷரபிய்யா அரபுக் கல்லூரியில்**
**மாவனல்ல**





## ஆழப் பதிந்து ஆல விருட்சமாய் வேரூன்றிய அல் ஸஊத்



ஸஊதி அரேபியாவின் சுபீட்சம், பாதுகாப்பு, மனிதாபிமானம், ஆன்மிகத்துக்கு வித்திட்டு சர்வதேச அரங்கில் கம்பீரமாக இமயமாக உயர்ந்து நிற்கும் ஒரு நாடாக ஸவூதி அரேபியாவை மாற்றிய ஆல் ஸஊத் அரச பரம்பரையின் ஆணிவேர் காணும் ஒரு சிறு முயற்சியே இக் கட்டுரை

ஆல் ஸஊத் பரம்பரை பனூ ஹனீபா அல் பக்ரிய்யா அல் வாஇலிய்யா என்ற கோத்திரத்தை சார்ந்தவர்கள், பனூ ஹனீபா கோத்திரம் ரஸுலுல்ளாஹ்வின் 19 வது தந்தை வழிப் பாட்டனான நிஸார் என்பவருடன் இனைகிறது. பின்னர் மஅத் , அத்னான் என இஸ்மாஈல் இப்ராஹீம் அலைஹிமஸ் ஸலாம் அவர்களின் பரம்பரையுடன் சேர்கிறது.

ஸவூதி அரேபியாவின் மிகப் பிரபல்யமான தனித்துவமான பல அபிவிருத்திகளுக்கும் பூங்காக்களுக்கும் வழியமைத்த ஒரு பள்ளத்தாக்குதான் “வாதீ ஹனீபா” பள்ளத்தாக்கு இது தலைநகர் ரியாதில் இருக்கிறது இது ஊடருத்துச் செல்லும் நகரங்களுல் முக்கியமான ஒரு நகராக ”ஆரில்”என்ற நகர் இருந்ததால் இதற்கு ஆரில் பள்ளத்தாக்கு என்ற பெயரும் உண்டு. இதன் கரையோர நகரங்களுல் ஒன்றான ”திர்இய்யா” வில்தான் பனூ ஹனீபா கோத்திரம் ஜாஹிலிய்யாக் காலம் முதல் குடியிருந்தது அவர்கள் விவசாயம், வியாபாரம் என பல துறைகளில் கால்பதித்து அன்றய காலகட்டத்தில் பேரும் புகழுமாய் வாழ்ந்தார்கள்.அந்தப் பேருக்கும் புகழுக்கும் அணி சேர்த்து அரவனைப்புக்கும் ஆளுமைக்கும் இன்று வரை இலக்கணமாய் திகலும் ஒரு உன்னத குடும்பம்தான் ஸவூதி அரேபியாவை ஆளும் ஆல் ஸஊத் குடும்பத்தினர்கள்.

ஆல் ஸஊத் குடும்பத்தின் ஆட்சிக் கட்டங்கள்

முதல் கட்டம் 1727 - 1818 வரை (4 ஆட்சியாளர்கள் )

இரண்டாம் கட்டம்˙ 1824 -1891 வரை (8 ஆட்சியாளர்கள் )

மூன்றாம் கட்டம் 1903 முதல் (7வது ஆட்சியாளர் .... மறுமை வரை இறையருளும் இறை திருப்தியும் நிறைந்ததாக இவ்வாட்சி தொடர வேண்டும்)

இதன் மூலம் ஆல் ஸஊத் குடும்பம் வரலாற்று ரீதியாகவும் பரம்பரைப் பாரம்பரியத்திலும் ஸவூதி அரேபியாவின் பூர்வீக ஆட்சியுரிமைக்கு மிகப் பொருத்தமானவர்கள் என்பதும் ஆல் ஸஊத் குடும்பம் இன்று வரை தமது நாட்டை மிகச் சரியான பாதையில் நடத்திச் சென்றுள்ளது என்பதுவும் தெளிவாகிறது. அன்று முதல் இன்று வரை அல் குர்ஆனும் ஸுன்னாவும்தான் எமது சட்ட யாப்பு என உரக்கச் சொல்ல முடிந்தது ஆல் ஸஊத் அரச குடும்பத்தால் மட்டும்தான். 1903ம் வருடத்துக்குப் பின்னரான (3ம் கட்ட ஆட்சியின் ஆரம்பம ) காலப் பகுதி ஸவூதி அரேபியாவின் ஸதிரம், ஒற்றையாட்சி. பாதுகாப்பு, அபிவிருத்தி, சர்வதேச உறவுகள், சன்மார்க்கப் பணிகள் என எல்லாத் துறைகளிலும் ஒரு திருப்புமுனைக்கு வித்திட்ட காலப்பகுதியாக கருத முடியும்.

**M. M. A. இம்தியாஸ் மதனீ**

## சவூதி அரேபியாவின் வளர்ச்சி பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்



ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23ஆம் திகதி ”கனவு காண்போம் சாதிப்போம்” எனும் தொனிப்பொருளில் சவூதி அரேபியாவின் தேசிய தினம் (National Day) கொண்டாடப்படுகின்றது. இவ்வருடம் (2024) 94 ஆவது தேசிய தினம் அனுஷ்டிக்கப்படயிருப்பது குறிப்பிடத்தக்கது. 1932ஆம் ஆண்டில் மன்னர் அப்துல் அஸீஸ் ஆலு சஊத் அவர்கள் சவூதி அரேபிய பிராந்தியங்களை எல்லாம் ஒன்றிணைத்து, அதனை சுயாட்சி மன்னராட்சி நாடாக அறிவித்ததை நினைவு கூரும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

தேசிய தினம், சவூதி அரேபியாவை ஒன்றிணைத்த நினைவாக மட்டுமின்றி, ஒவ்வொரு குடிமகனும் தனது தேசப்பற்றை மீள்பரிசீலனை செய்து வலுப்படுத்த வேண்டிய நாளாகவும், கடந்த கால சாதனைகளை நினைவுகூர்ந்து எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டிய தினமாகவும் நோக்கப்படுகிறது.

ஒன்றிணைந்த சவூதி நிறுவப்பட்டதிலிருந்து, பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் அரசியல் போன்ற துறைகளில் பெரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. உதாரணமாக, எண்ணெய் மற்றும் எரிசக்தி திட்டங்கள் பெரிய அளவில் விரிவடைந்து, உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்களிலும் ஏற்றுமதியாளர்களிலும் ஒன்றாக சவூதி மாறியிருக்கிறது.

அவ்வாறே கல்வி துறையில் பல பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளை நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் வெற்றிகண்டுள்ளது. சுகாதாரத் துறையும் விரிவடைந்து, புதிய பல மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. உட்கட்டமைப்பு துறையிலும் பெரும் வளர்ச்சி கொண்டுள்ளது, சாலைகள், விமான நிலையங்கள் மற்றும் பெரும் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சவூதி அரேபியா பல வரலாற்றுச் சாதனைகளை படைத்திருந்தாலும், 2030 விஷன் சஊதி அரேபியாவுக்கான பிரகாசமான எதிர்காலத்தை அடையும் பாதைச் சித்திரமாகவும், சவூதியர்கள் தங்கள் நாட்டை புதிய படைப்பாற்றலுடனும் நல்ல எண்ணத்துடனும் கட்டியெழுப்பிச் செல்வதற்கான வழிகாட்டுதலாகவும் திகழ்கிறது.

சஊதி அரேபியா 2030 ஆம் ஆண்டை நெருங்குவதால், பல துறைகளிலும் பாரிய சாதனைகளை தொடர்ந்தும் நிகழ்த்தி வருகிறது. சவூதி அரேபியாவின் 2030 விஷன், உலகில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் இடம்பிடிக்க வேண்டும் என்ற பெரிய அபிலாஷைகளோடு முன்னோக்கிப் பயணிக்கிறது.

குறித்த தொனிப்பொருளானது சவூதி அரேபியாவின் 2030 விஷனை தெளிவுபடுத்துவதாகவும் மற்றும் அனைத்துத் துறைகளிலும் திட்டமிடப்பட்டுள்ள மெகா திட்டங்களை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது என பொதுப் பொழுதுபோக்கு ஆணையத்தின் இயக்குநர்கள் குழுவின் தலைவர் துர்கி அலு-ஷேஹ் அவர்கள் குறிப்பிட்டார்.

94ஆவது தேசிய தினத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் பொது பொழுதுபோக்கு ஆணையகம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த விழாவில் பொதுவாக நாட்டின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் பரம்பரைப் பெருமைகள், 2024 ஆம் ஆண்டில் சவூதி அரேபியாவின் மாபெரும் பங்களிப்புகள், புதிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் அதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் பிரஸ்தாபிக்கப்படும். இதே சமயம், அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறும்.

2024ஆம் ஆண்டு தேசிய தினம், சவூஊதி அரேபியாவின் வளர்ச்சி பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக நோக்கப்படுகிறது.

**முஜாஹித் சுபைர்**
**நத்வதுல் உலமா அரபுக்கல்லூரி - மூதூர்**

## சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பேணப்படும் மிக நீண்ட கால உறவு

சவூதி அரேபியாவின் தேசிய தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

சவூதி அரேபியா இராச்சியம் அரேபியாக் குடா நாட்டின் மிகப்பெரிய நாடாகும். வடமேற்கு எல்லையில் ஜோர்தானும் வட கிழக்கு எல்லைகளில் ஈராக்கும் கிழக்கு எல்லையில் குவைத், கட்டார், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் என்பனவும், தென்கிழக்கு எல்லையில் ஓமானும் தெற்கு எல்லையில் யெமனும் அமைந்துள்ளது. மீதமுள்ள எல்லைகளாக பாரசீகக் குடா, வடகிழக்கிலும் செங்கடல் மேற்கிலும் அமைந்துள்ளது.

1932 ஆம் ஆண்டு மன்னர் அப்துல்லாஹ் அவர்கள் தனது மூதாதையின் நகரமான ரியாத்தை கைப்பற்றிய பின்னர் சவூதி அரேபிய இராஜ்ஜியத்தை பிரகடனப்படுத்தி அங்கீகாரத்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

சவூதி அரேபியாவின் தேசிய தினம் என்பது உலக நாடுகளுக்கு முன் உதாரணமாக மனிதநேய உதவிக் கரங்களை வழங்குவதில் முன் நிற்கிறது.

சவூதி அரேபியாவின் அனைத்து பிரதேசங்களையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக சவூதி அரேபியா ராஜ்ஜியம் என்ற பெயரில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளே சவூதி அரேபியாவின் தேசிய தினமாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ளது.

முன் சென்ற மன்னர்களின் சேவைகளை நினைவு கூறும் முகமாகவும் பண்டைய ஆட்சியாளர்களின் சேவைகளை தற்கால நவீன சந்ததியினருக்கு நினைவுபடுத்தும் முகமாகவும் இத்தேசிய தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த தேசிய தினம் சவூதி அரேபியாவின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் செழிப்பு, கல்வி கலாச்சாரம் பண்பாடு, அபிவிருத்தி ஆகியவற்றை நினைவு கூறும் நாளாகவும் கணிக்கப்படுகிறது.

சவுதி அரேபியா நாடு சமூக விவகாரங்கள் மற்றும் சுற்றுலா, சுற்றுச்சூழலை பாதுகாத்தல், கால நிலையின் சமன்பாட்டை உறுதிப்படுத்துதல், ஆகியவற்றில் மிகவும் செல்வாக்கு மிக்க நாடாகவும் விஷன் 2030ஆம் ஆண்டு சவூதி அரேபியா மிகச்சிறந்த ஒரு முன்மாதிரியான நாடாக பிரகடனப்படுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னேற்பாடுகளையும் அதன் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் பணிப்புரையின் பேரில் இளவரசர் முஹம்மது பின் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

சவூதி அரேபியாவின் பசுமை புரட்சி மிக முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது.

சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையில் மிக நீண்ட கால உறவு பேணப்பட்டு வருகின்றன. மிக முக்கியமாக இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மிக முக்கியமான அபிவிருத்தி பணிகளான நெடுஞ்சாலைகள் வைத்தியசாலைகள் அதேபோன்று முரகொள்ள நீர் தேக்கம் போன்ற பாரிய அபிவிருத்தி திட்டங்களுக்கு சவூதி அரேபியா அரசாங்கம் உதவி வருகின்றது.

சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தற்போதைய தூதுவர் காலித் பின் ஹாமுத் அல் கஹ்தானி அவர்களின் சேவைக்காலமான தற்போதைய காலகட்டத்தில் அபிவிருத்தியின் செயற்பாடுகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சவூதி அரேபியா இராச்சியம் இலங்கை வாழ் மக்களுக்கு மாத்திரம் இன்றி உலகளாவிய மக்களுக்கும் மனிதநேய உதவிக் கரங்களை நீட்டுகிறது.

பாலஸ்தீன மக்களுக்கு அதன் உருவாக்கம் முதல் இன்று வரை சகல விதத்திலும் உதவி வருகின்றது. காசாவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான மருந்து வகைகள் கூடாரங்கள் உணவுப் பொருட்கள் போன்ற மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் நிவாரண மையத்தினால் இவ்வாறான உதவிகள் அவ்வப்போது பாஷாவின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதோடு உலகளாவிய ரீதியில் இயற்கை அனர்த்தங்களின் போது முன்னிலையில் நின்று உதவக்கூடிய மனித நேயம் உள்ள நாடாகவும் சவூதி அரேபியா இராட்சியத்தைபா பார்க்க முடிகிறது.

சவூதி அரேபியாவின் துரித வளர்ச்சி மற்றும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பசுமை புரட்சி போன்றவைகள் மற்றும் மிக அண்மையில் நடந்து முடிந்த இயற்கை நுண்ணறிவு மாநாடு, சர்வதேச அல் குர்ஆன் மனனப் போட்டிகள், போன்றவைகள் அதன் முன்னேற்றத்தின் மிக முக்கியமான அம்சங்களாக அறிமுகப்படுத்தலாம்.

தற்போதைய இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி அவர்களின் முயற்சியினால் இலங்கையிலும் சென்ற வருடம் அல்குர்ஆன் மனனப் போட்டிகள் முதல் தடவையாக மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது

94 ஆவது தேசிய தினத்தை கொண்டாடும் சவுதி அரேபியா நாடு வாழ்க வளம் பெருக என வாழ்த்துகிறேன்.



**அஷ்ஷெய்க்**
**மு.ஆ. முஜீபுர் ரஹ்மான் (பலாஹி மதனி)**
**அதிபர்**
**இஸ்லாமிய கற்கைகள் பிரிவு**
**அல்ஹுதா கல்லூரி**
**திஹாரிய**




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## பிழை திருத்தம்

### படல்கும்புர பிரதேச சபை

மேற்படி தலைப்பில் கடந்த 2024.09.18ம் திகதி தினகரன் நாளிதழில் பிரசுரமான விளம்பரத்தில் பின்வரும் விடயங்கள் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

- ஹிங்குருகடுவ வாரச் சந்தை
- படல்கும்புர வாரச் சந்தை உணவகம்

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை

**சபை செயலாளர்,**
**பிரதேச சபை,**
**படல்கும்புர**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் உள்ள 1.5km உள்ளக வீதிகள் மற்றும் 100m Turning Circle என்பவற்றின் முன்மொழியப்பட்ட மேம்படுத்தல்கள்**

**B/58/2024**

1. "சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் உள்ள 1.5km உள்ளக வீதிகள் மற்றும் 100m Turning Circle என்பவற்றின் முன்மொழியப்பட்ட மேம்படுத்தல்கள்" எனும் ஒப்பந்த வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
   இந்த வேலையின் நிர்மாணக்காலம் இரண்டு மாதங்களாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் **CIDA** நிறுவனத்தின் C5 மற்றும் C4 (பெருந்தெருக்களில் விசேடத்துவம்) அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதால், 04/2016(ii)ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
4. விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா கட்டணத்தை (ஒரு தொகுதிக்கு ரூபா 12,401.82 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தி எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-10-11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் htpp://ceypetco.gov.lk/public-tenders/. வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2024-10-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 011-2106762 நீடிப்பு 336.**
**மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **08/10/2024**

இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **09/10/2024**

இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.502/2, குமாரகே கட்டிடம், அவிசாவளைவீதி, கடுவெல.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **10/10/2024**

இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.235, புதிய காலி வீதி, அம்பலாங்கொட.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.110, 112, பிரதான வீதி, கல்முனை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்

**SINGER FINANCE**

இல. 498, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| RDA /NP/CE(MUL)/W&I/2024/01 | கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் (A009) 252+000 km இடத்தில் டிப்போ சந்தியை மேம்படுத்துவதற்காக Dens Graded Aggregate Base Course வழங்குதல் |
| RDA /NP/CE(MUL)/W&I/2024/02 | கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் (A009) 252+000 km இடத்தில் டிப்போ சந்தியை மேம்படுத்துவதற்காக Asphalt Concrete Wearing Course (50mm) வழங்குதல் மற்றும் பரப்புதல் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 23ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk எனும் இணையதள பக்கத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**முல்லைத்தீவு.**

## 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53(4) அத்தியாயத்தின் பிரகாரம் விடுக்கப்படும் பத்திரிகை அறிவித்தல்

**வழக்கு இலக்கம்: HC/SPL/B/20/2024**

பின்வரும் கூட்டாதனம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஏழு (07) நாட்களுக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமான தடை உத்தரவு 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மேற்கூறிய வழக்கிலக்கத்தின் கீழ் 2024-09-19ஆம் திகதி முதல் எதிர்வரும் 03 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய ஆதனத்தின் பெயர்,

01. பிரசித்த நொத்தாரிசு திருமதி ரலனி டீ.கே. எதிரிசிங்க அவர்களால் 2023-03-20ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 18ஆம் இலக்க உறுதிக்கு இயைபான கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் CON A 161/258, CON E 37/20 எனும் இலக்கத்தைக் கொண்ட காணிப் பதிவேட்டின் முன் பதிவு சகிதமான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் பள்ளேபற்றுவில் சல்பிட்டி கோரளையில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் கொள்ளுப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் 65ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள "Capital Residencies Apartment" பெயரைக் கொண்ட கூட்டாதனத்தில் 11ஆம் தளத்தில் அமைந்துள்ள A1-65-11/3 எனும் வரிப்பண இலக்கத்தைக் கொண்ட 1A/F11/U1 எனும் கூட்டாதன வீட்டு அலகு.

02. பிரசித்த நொத்தாரிசு திருமதி ரலனி டீ.கே. எதிரிசிங்க அவர்களால் 2023-12-19ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 28ஆம் இலக்க உறுதிக்கு இயைபான கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் CON A 161/252, CON E 28/64 எனும் இலக்கத்தைக் கொண்ட காணிப் பதிவேட்டின் முன் பதிவு சகிதமான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் பள்ளேபற்றுவில் சல்பிட்டி கோரளையில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் கொள்ளுப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் 65ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள "Capital Residencies Apartment" பெயரைக் கொண்ட கூட்டாதனத்தில் 11ஆம் தளத்தில் அமைந்துள்ள A1-65-10/3 எனும் வரிப்பண இலக்கத்தைக் கொண்ட (பழைய இலக்கம் A1-65-10/4) மற்றும் 1A/F10/U1 எனும் கூட்டாதன வீட்டு அலகு.

03. 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53(4) அத்தியாயத்தின் பிரகாரம் உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு தடை உத்தரவின் விடய சொத்தான கூட்டாதனம் தொடர்பில் தமது உரிமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தடை உத்தரவு தொடர்பான அறிவித்தல் இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.

கௌரவ நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம்,

**பதிவாளர்,**
**மேல் மாகாண மேல் நீதிமன்றம்,**
**கொழும்பு.**
**2024-09-18.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2024 செப்தெம்பர் 25ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக ரூ. 120,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124L277 | LKA18225C288 | LKA36425I263 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 40,000 | 10,000 | 120,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2024 செப்தெம்பர் 25 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2024 செப்தெம்பர் 27 |
| வழங்கப்படும் திகதி | : 2024 செப்தெம்பர் 27 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024 செப்தெம்பர் 25 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## மனுவின் விளம்பரம்

### மேற்கு மாகாணத்தின் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற COLOMBO சிவில் அதிகார வரம்பை பயன்படுத்துகிறது.

2007 ஆம் ஆண்டின் எண் 7, 1939 ஆம் ஆண்டின் கம்பனிகளை வைண்டிங்-அப் விதிகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 272 இன் கீழ் மற்றும் விதிமுறைகளின் கீழ் வைண்டிங்-அப் விண்ணப்பத்தின் விஷயத்தில்.

வழக்கு எண் - HC/CIVIL/53/2024/CO
இயற்கை - வைண்டிங்-அப்
நடைமுறை - சுருக்கம்

மதிப்பு - ரூ.208,611,687.66

FIBC LANKA (PVT) LTD இல. 13, வைத்தியசாலை சந்தி,பொலன்னறுவை

மற்றும்

2007 ஆம் ஆண்டின் எண் 7, 1939 ஆம் ஆண்டின் கம்பனிகளை வைண்டிங்-அப் விதிகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 272 இன் கீழ் மற்றும் விதிமுறைகளின் கீழ் வைண்டிங்-அப் விண்ணப்பத்தின் விஷயத்தில்.

**சிபிசி பினேன்ஸ் லிமிடட்**
**இலக்கம் 187, கட்டுகஸ்தொட் வீதி,கண்டி.**

**மனுதாரர்**

மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தை முடக்குவதற்கான மனுவை 2024 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி கொழும்பில் உள்ள மேல்மாகாண ஹோல்டன் உயர் நீதிமன்ற சிவில் அதிகார வரம்பில், CBC Finance Limited இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி,கண்டி.

மேலும் அந்தமனுவை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. டிசம்பர் 4, 2024 மற்றும் அந்த நிறுவனத்தின் எந்தக்கடனாளி அல்லது பங்களிப்பாளரும்,மேற்படி மனு மீதான உத்தரவை ஆதரிப்பதற்கோ அல்லது எதிர்க்க விரும்புவோர், விசாரணையின் போது நேரில் அல்லது அந்த நோக்கத்திற்காக அவரது வழக்கறிஞர் அல்லது ஆலோசகர் மூலம் ஆஜராகலாம். மேலும் மனுவின் நகல் கடனாளி அல்லது அந்த நிறுவனத்தின் பங்களிப்பாளருக்கு அளிக்கப்படும், அதற்கு பரிந்துரைக்கப்பட்ட பணத்தைச் செலுத்தும் போது கீழே கையொப்பமிட்டவராக இருங்கள்.

ஷிரந்தி குணவர்தன எசோசியேட்
shiranthinmg@gmail.com
இல.22/1, எலியட் பிளேஸ்,
கொழும்பு 08.
(மனுதாரருக்காக பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர்)

குறிப்பு-

மேற்படி மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எவரும் பணியாற்ற வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிபிசி பைனேன்ஸ் லிமிடெட்டிற்கு தபால் மூலம் அனுப்பவும் அறிவிப்பில் நபரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும், அல்லது நிறுவனம், நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் நபர் அல்லது அவருடைய கையொப்பமிட வேண்டும் அல்லது அவர்களின் ப்ரோக்டர் (ஏதேனும் இருந்தால்) மற்றும் வழங்கப்பட வேண்டும், அல்லது இடுகையிடப்பட்டால், அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டவர்களை அனுக மாலை ஆறு மணிக்கு பிறகு தவிர்த்து, டிசம்பர் 3ஆம் திகதி 2024

**පොළොන්නරුව මහා නගර සභාව**

**பொலன்னறுவை மாநகர சபை**

**MUNICIPAL COUNCIL POLONNARUWA**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

01. பொலன்னறுவை மாநகர சபையின், மாநகர சபை ஆணையாளர், பொலன்னறுவை மாநகர சபையின் சார்பில் பின்வரும் செயற்றிட்டங்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

| தொ. இல. | ஒப்பந்தத்தின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணம் | மதிப்பீட்டுச் செலவு | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | கல்லேல்ல குப்பைகள் சேகரிக்கும் நிலையம் மற்றும் களஞ்சிய அறையை நிர்மாணித்தல் | 01 | ரூபா 5000.00 | 19.2 மில்லியன் ரூபா | ரூபா 250,000.00 |

02. இந்த விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024-09-20ஆம் திகதி முதல் 2024-10-08ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் பொலன்னறுவை புதிய நகரத்தில் அமைந்துள்ள பொலன்னறுவை மாநகர சபை பொறியியலாளர் திணைக்களத்திற்கு வருகை தந்து எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

04. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பணத் தொகையின் பிரகாரம் 2025-01-15ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மீளளிக்கப்படும் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியின் ஊடாக விலைக்கோரல் பிணை முறியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இரு நகல்களிலான விலைமனுக்களை 2024-10-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர சபை, பொலன்னறுவை எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியிலுள்ள கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். (பொலன்னறுவை மாநகர சபை கேட்போர்கூடத்தில்)

06. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-12-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பொலன்னறுவை மாநகர சபையின் மாநகர கணக்காளர் திணைக்களத்திலிருந்து (தொலைபேசி இலக்கம் 0272222275/0272057052) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விசாரணைகள்: 027-2222275/0272057052

**மாநகர ஆணையாளர்,**
**பொலன்னறுவை மாநகர சபை**

mcpolonnaruwa@gmail.com | Polonnaruwa Municipal Council | www.mcpolonnaruwa.lk

Daily News Classifieds, the Housewives' companion

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# பொது அறிவிப்பு

என்சீஜீ எர்த் (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை ஹெரகல் எர்த் (பிரைவட்) லிமிட்டட் என 2007 ஆம் ஆண்டின் கம்பனி சட்டம் எண் 7 இன் பிரிவு 9 (2) இன் படி செப்டெம்பர் 4, 2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 8 இன் விதியின்படி.

**நிறுவனத்தின் முன்னாள் பெயர்:**
என்சீஜீ எர்த் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** PV00260363

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
எண்: 10, ரேமண்ட் சாலை, நுகேகொட

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
ஹெரகல் எர்த் (பிரைவட்) லிமிட்டட்

**வாரியத்தின் உத்தரவின்படி**
**தாஸநாயககே சசினி காந்தி சங்கல்பனா**
**செயலாளர்**
**ஹெரகல் எர்த் (பிரைவட்) லிமிட்டட்**

# பொது அறிவிப்பு

ஹெரகல் க.்.பே (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை ஹெரகல் ஸ்போர்ட்ஸ் கெ.்.பே (பிரைவட்) லிமிட்டட் என 2007 ஆம் ஆண்டின் கம்பனி சட்டம் எண் 7 இன் பிரிவு 9 (2) இன் படி செப்டெம்பர் 4, 2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 8 இன் விதியின்படி,

**நிறுவனத்தின் முன்னாள் பெயர்:**
ஹெரகல் கெ.்.பே (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** PV00280401

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:** எண்: 157Y, கெபெல்லோவிட்ட, வெனிவெல்கொல, பொல்கசோவிட்ட.

**நிறுவனத்தின் புதிய பெயர்:** ஹெரகல் ஸ்போர்ட்ஸ் கெ.்.பே (பிரைவட்) லிமிட்டட்

**வாரியத்தின் உத்தரவின்படி**
**தாஸநாயககே சசினி காந்தி சங்கல்பனா**
**செயலாளர்**
**ஹெரகல் ஸ்போர்ட்ஸ் கெ.்.பே (பிரைவட்) லிமிட்டட்**

# பொது அறிவிப்பு

நெக்ஸ்ட்ஜென் கெயார் (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை ஹெரகல் கெயார் (பிரைவட்) லிமிட்டட் என 2007 ஆம் ஆண்டின் கம்பனி சட்டம் எண் 7 இன் பிரிவு 9 (2) இன் படி செப்டெம்பர் 4, 2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 8 இன் விதியின்படி.

**நிறுவனத்தின் முன்னாள் பெயர்:**
நெக்ஸ்ட்ஜென் கெயார் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம்:** PV00258370

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
**எண்:** 10, ரேமண்ட் சாலை, நுகேகொட.

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
ஹெரகல் கெயார் (பிரைவட்) லிமிட்டட்

**வாரியத்தின் உத்தரவின்படி**
**தாஸநாயககே சசினி காந்தி சங்கல்பனா**
**செயலாளர்**
**ஹெரகல் கெயார் (பிரைவட்) லிமிட்டட்**

## வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை, வடமத்திய மாகாணம்

# கேள்வி அறிவித்தல்

வடமத்திய மாகாண வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவர் மற்றும் வடமத்திய மாகாண வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவராகிய என்னால் இந்த அதிகார சபையின் கீழ் 2024/2025ஆம் வருடத்திற்கு இயைபாக பழைய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூட முறைமையில் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை நடாத்திக்கொண்டு செல்வதற்காக வடமத்திய மாகாணத்தினுள் வசிப்பவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | மீளளிக்கப்படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | ஆகக்குறைந்த விலைத்தொகை | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|
| பழைய பஸ் நிலையத்தின் மலசலகூட முறைமை | 5,000.00 | 120,000.00 | 800,000.00 | 2024-10-18ஆம் திகதி முதல் 2025-10-17ஆம் திகதி வரை |

1. கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் அறிவுரைப் படிவங்களை 2024-09-23ஆம் திகதி முதல் 2024-10-11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அநுராதபுரம் வித்யால மாவத்தையில் அமைந்துள்ள வீதிப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் தலைமைச் செயலகத்திற்கு வருகை தந்து 125,000.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகள் என்பன கேள்விப் படிவங்களுடன் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-10-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. கேள்விகள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
5. மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையினால் தகுதிநீக்கப் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்ட குத்தகைதாரர்கள் அல்லது அவ்வானவர்களின் உறவினர்களுக்கு இந்தப் பெறுகையில் பங்குபற்ற முடியாது.
6. கேள்வியைக் கோருதல் மற்றும் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
7. இந்த பெறுகை தொடர்பான மேலதிக விபரங்களை 025-2237941 - பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதிப் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபை,**
**வடமத்திய மாகாணம்.**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 015 -0XXX | TOYOTA | CARINA | 1984 |
| 300 -4XXX | NISSAN | LAUREL HC-34 | 1994 |
| GB -7XXX | NISSAN | PULSAR | 1997 |
| CAG -9XXX | SUZUKI | WAGON R MH44S | 2014 |
| **வேன்** | | | |
| 059 -9XXX | NISSAN | S-VVJC23 CLOSED | 1992 |
| 251 -9XXX | ISUZU | FARGO | 1992 |
| 058 -8XXX | MITSUBISHI | L-300 | 1996 |
| HG -0XXX | MITSUBISHI | V-U43V | 1998 |
| **கெப்** | | | |
| LC -2XXX | MAHINDRA | BOLERO LOAD CARRIER | 2006 |
| PQ -1XXX | MAHINDRA | BOLERO MAXI TRUCK | 2011 |
| DAB -0XXX | TATA | XENON LIGHT TRUCK | 2015 |
| DAB -0XXX | MAHINDRA | BMT PLUS MDI | 2015 |
| **ஜீப்** | | | |
| KV -2XXX | ZOTYE | EXTREME | 2012 |
| **லொறி** | | | |
| 042 -8XXX | TOYOTA | BU82 OPEN | 1987 |
| LF -5XXX | TATA | ACE | 2008 |
| LH -3XXX | TATA | LPT709 | 2010 |
| PP -1XXX | TATA | ACE | 2010 |
| PQ -2XXX | TATA | ACE | 2011 |
| PR -4XXX | TATA | ACE | 2011 |
| PS -8XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PS -9XXX | TATA | ACE-EX | 2012 |
| PT -1XXX | TATA | ACE EX | 2012 |
| PU -6XXX | TATA | ACE EX | 2012 |
| PV -3XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| PW -1XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| PY -4XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2014 |
| DAB -5XXX | MAHINDRA | MAXXIMO PLUS-VX | 2015 |
| DAF -3XXX | SUZUKI | SUPER CARRY | 2016 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HV -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JF -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QA -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QF -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QF -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QL -6XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QO -6XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YI -7XXX | PIAGGIOAPE | | 2010 |
| YU -1XXX | BAJAJ | RE205 | 2011 |
| AAG -7XXX | BAJAJ | RE205 | 2013 |
| AAJ -0XXX | BAJAJ | RE 205 | 2013 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BFC -2XXX | HONDA | DIO SCV110 | 2017 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 செப்டம்பர் 23ஆம், 24ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 செப்டம்பர் 26ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: **2343720 - 7** நீட்சி: **210**

www.skillsads.com

தொடர்பு: **தினேஷ் - 0718 751 995**
**திசர - 0711 624 559**

# கேள்வி அழைப்பு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை – கொழும்பு

## சமைத்த உணவு வழங்குதல் - 2025

2025ஆம் ஆண்டிற்காக மேல் மாகாணத்தின் கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் கீழ்க்காணும் வைத்தியசாலைகளில் சமைத்த உணவு வழங்குவதற்காக மேல் மாகாணத்திற்குள் பதிவு செய்த நபர்களிடமிருந்து மற்றும் பதிவு செய்துள்ள வர்த்தக நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி பிணைமுறித் தொகைப் பெறுமதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வைத்தியசாலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி பிணைமுறித் தொகை ரூ. | சொத்துச் சான்றிதழின் பெறுமதி ரூ. |
|---|---|---|
| மாளிகாவத்த மாவட்ட வைத்தியசாலை | 43,572.00 | 25,000.00 |
| மொறட்டுவை மாவட்ட வைத்தியசாலை | 80,868.00 | 75,000.00 |
| வேதர மாவட்ட வைத்தியசாலை | 123,264.00 | 100,000.00 |
| தலங்கம பிரதேச வைத்தியசாலை | 54,108.00 | 25,000.00 |
| கொஸ்கம பிரதேச வைத்தியசாலை | 50,412.00 | 25,000.00 |
| பிலியந்தலை பிரதேச வைத்தியசாலை | 48,972.00 | 25,000.00 |
| அத்துருகிரிய பிரதேச வைத்தியசாலை | 38,628.00 | 25,000.00 |
| நவகமுவ பிரதேச வைத்தியசாலை | 52,980.00 | 25,000.00 |
| பாதுக்க பிரதேச வைத்தியசாலை | 65,088.00 | 25,000.00 |

03. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கீழ்க்கானும் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - ✓ தேசிய அடையாள அட்டையின் உறுதி செய்த போட்டோப் பிரதி
    - ✓ பதிவு பற்றிய கிராம சேவைச் சான்றிதழ் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழ்
    - ✓ ஒப்பந்தத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் மூன்று வருட அனுபவம் பற்றிய பிரதேச கிராம அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேல் ஒப்பந்தத்துடன்)
    - ✓ குறித்த வைத்தியசாலைக்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பொறுமதிக்கு சமமான பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பொது 170 சொத்துச் சான்றிதழ்

04. மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 2000.00 ஐ கொழும்பு மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணங்களை 2024.09.24 முதல் 2024.10.14 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். இக் கால எல்லையில் கொடுப்பனவின்றி கேள்வி ஆவணங்களை பரீட்சிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

05. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு இடது பக்க மேல் மூலையில் 'சமைத்த உணவு வழங்குதல் 2025 .................... வைத்தியசாலை' என்று குறிப்பிட்டு 2024.10.15 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு 'தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, கொழும்பு-10' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தின் நிர்வாக அதிகாரியின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**மாளிகாவத்த, கொழும்பு-10.**
**தொ.பே. 0112326248/ 011 2326643**
**2024.09.23**

# கேள்வி அறிவித்தல்

## மேல் மாகாண சுகாதாரத் திணைக்களம்

### அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலை

## உள்ளக மின்சார பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குதல் 2024/2025

2024/2025ஆம் வருடங்களில் எமது வைத்தியசாலையின் உள்ளக மின்சார முறைமைகளை பராமரிப்பதற்காக அத்துறையில் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. ICTAD பதிவு குறைந்தபட்சம் EM5 நிலையில் இருத்தல் வேண்டும்.

03. அரச வைத்தியசாலையொன்றில் வெற்றிகரமாக மின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமை தொடர்பில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. ஒரு படிவத்திற்கு ரூ. 2000.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்தி 2024-09-23ஆம் திகதி முதல் 2024-10-14ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்விப் பத்திரத்துடன் ரூ. 40000.00 பெறுமதியான மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை, கேள்விப் பிணை முறியொன்றை அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலை, பணிப்பாளரின் பெயரில் பணிப்பாளரின் கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட மே.மா. 1 பற்றுச்சீட்டுடன் முத்திரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளுடன் 2024-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இவ் அலுவலகத்திற்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

06. கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் மேற் பகுதியில் மின்சார பராமரிப்பு சேவைகள் வழங்குதல் 2024/2025 எனக் குறிப்பிடுதல் வேண்டும். 2024-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. இக்கேள்வி தொடர்பில் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு.**
**மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை.**
**தொ. பே. 0362222278 / 0362222261**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### நீர்ப்பாசன அமைச்சு

## மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)

## திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU)

### நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) - Tranche 2

## முடிவுறுத்தல் திகதியை நீடித்தல்

### (தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

## அரலகன்வில விதை பண்ணையில் மீன் இனப்பெருக்க நிலையத்தை நிர்மாணித்தல் – மஹாவலி வலயம்

**MI/MWSIP/ADB/WKS/Fish Breeding Centre - System B/ NCB/2024/075**

2024-09-04ஆம் திகதி பிரசுரமான மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான விலைக்கோரலுக்கான அழைப்பில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடந்த அண்மித்த ஐந்து (05) வருடங்களில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை (01) விலைமனுதாரர் ஒப்பந்தக்காரராக அல்லது கூட்டு வியாபார பங்குதாரர் அல்லது உப ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த ஒப்பந்தம் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும். இதில் விலைமனுதாரரின் பங்குபற்றுதலானது இதனையொத்த முன்மொழியப்பட்ட வேலையில் 245 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் நேரம் 2024-09-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை (உள்ளூர் நேரம்) நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் மற்றும் அதன்பின் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தொலைபேசி இல. : +94 11 2675810**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

## அக்குரணை பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

அக்குரணை பிரதேச சபைக்குச் சொந்தமான அக்குரணை மற்றும் அலவத்துகொட நகரம் மற்றும் எல்லேகட உப நகரில் இருக்கும் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற தகுதியை பூர்த்தி செய்த நபர்களிடம் இருந்து விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| | நகரம்/ உப நகரம் | கடை இலக்கம் | குறைந்த பட்ச மாத வாடகை | குறைந்த பட்ச விலை மனு ரூபா | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | அலவத்து கொட | அலவத்துகொட பஸ் தரிப்பிட இலக்கம் - 01 | 4000.00 | 4000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 02 | அலவத்து கொட | அலவத்துகொட பஸ் தரிப்பிட இலக்கம் - 02 | 4000.00 | 4000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 03 | அலவத்து கொட | அலவத்துகொட பஸ் தரிப்பிட இலக்கம் - 03 | 4000.00 | 4000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 04 | அலவத்து கொட | அலவத்துகொட பஸ் தரிப்பிட இலக்கம் - 04 | 4000.00 | 4000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 05 | அலவத்து கொட | எல்லேகடே கீழ் மாடி கடை | 4500.00 | 4500.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 06 | அக்குரணை | அக்குரணை மினி மார்க்கட் இலக்கம் - 03 | 5000.00 | 5000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 07 | அக்குரணை | அக்குரணை பொதுச் சந்தைத் தொகுதி 190/1/5 | 8000.00 | 8000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 08 | அக்குரணை | அக்குரணை பொதுச் சந்தைத் தொகுதி 190/2/4 | 8000.00 | 8000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 09 | அக்குரணை | அக்குரணை பொதுச் சந்தைத் தொகுதி 190/2/5 | 8000.00 | 8000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 10 | அக்குரணை | அக்குரணை பொதுச் சந்தைத் தொகுதி 190/2/10 | 8000.00 | 8000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |
| 11 | அக்குரணை | அக்குரணை பொதுச் சந்தைத் தொகுதி 190/2/14 | 8000.00 | 8000.00 x 12 | 10000.00 | 2000.00 | 03 ஆண்டுகளுக்கு |

01. அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வைப்புக் கட்டணத்தை அக்குரணை பிரதேச சபையின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து நிபந்தனையுடனான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
02. விண்ணப்பிக்கும் கடை இலக்கம் மற்றும் நகரத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. விண்ணப்பங்களை 2024.09.23 ஆம் திகதி தொடக்கம் 2024.10.14 ஆம் திகதி வரை பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
04. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "செயலாளர், அக்குரணை பிரதேச சபை, அலவத்துகொட" என்ற முகவரிக்கு 2024.10.15 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்கு இட முடியும்.
05. குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது குறைபாடுகள் உள்ள விண்ணப்ப விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு அதற்காக விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்படுவதன் அடிப்படையில் பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
06. விலைமனுக்களை ஏற்பது, பகுதியை ஏற்பது, நிராகரிக்கும் இறுதி முடிவு அக்குரணை பிரதேச சபை கேள்விமனுக் குழு வசமானது.
07. இது தொடர்பில் மேலதிக விபரங்களை 066-2244387 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

**2024.09.19**
**டி.ஜி.எம்.பி. ரணசிங்க**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அக்குரணை பிரதேச சபை,**
**அலவத்துகொட.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக சுகாதார அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | ICU Ventilator | 20 | 160 | 20,000.00 |
| 02 | Endoscopy System | 05 | 225 | 35,000.00 |
| 03 | Defibrillator | 40 | 72 | 12,500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-09-23ஆம் திகதி முதல் 2024-10-28ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-10-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2025-01-28ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதமாக 2025-02-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் / பெறுகைக் குழு,**
**உயிரியல் பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**

# திருத்தம்

## பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகலை

2024.09.17ம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி அறிவித்தலின் கைத்தொழில்களை வழங்குவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகளின் அட்டவணை கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதுடன் அறிவித்தலில் உள்ள விடயங்களுக்கு மேலதிகமாக கீழ்க்காணும் விடயங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலை பெறுமதி (ரூ.மி) (வெட் இன்றி) | கட்டிட நிர்மாணத் துறையில் தேவைப்படும் CIDA தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை (ரூபா) காசாக அல்லது வர்த்தக வங்கிப் பிணையின் மூலம் | நிர்மாண கால எல்லை (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| DGH/MO/14 நிர்மாணம்/01/22 | ஆண் உறுப்பு அலகின் மேல் மாடியை நிர்மாணித்தல் | 6.85 | C7,C6 | 95000.00 | 45 | 2000.00 |

1.1 தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் மூலம் கேள்விகள் கோரப்படுவதுடன், நிதி அமைச்சு சுற்றுநிருப இல.4/2016(iii) இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களின் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள தரத்தில் முன்னுரிமை கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

1.2 பொது ஒப்பந்த உடன்பாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டியதுடன், ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை - மொனராகலை**
**திகதி : 2024.09.19**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

## கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள்

**(ஒப்பந்த இலக்கம்: SLPA/CD/JCT V/YARD/01)**

1. கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள் (ஒப்பந்த இலக்கம்: **SLPA/CD/JCT V/YARD/01**) எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் முக்கியமான வேலையாக முற்றவெளி மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. மொத்த முற்றவெளிப் பரப்பளவு 26,000$m^2$ ஆகும் என்பதுடன் மொத்த வீதியின் பரப்பளவு ஏறத்தாழ 5,250$m^2$ ஆகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - விலைமனுதாரர் CIDA நிறுவனத்தின் (முன்னர் ICTAD என அறியப்படுவது) C1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் வீதி நிர்மாணத்தில் விசேடத்துவ ஒப்பந்தக்காரராக பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ். இதை இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
   - விலைமனுதாரர் பின்வருமாறாக அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
     1. கடந்த 10 வருடங்களில் ஒவ்வொன்றும் 600 மில்லியன் ரூபாவிற்குக் குறையாத இரண்டு வீதிகள் / முற்றவெளி நடைபாதை திட்டங்களை பிரதான ஒப்பந்தக்காரராக குறித்த நேரத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
     2. வீதி நிர்மாணத்தில் அனுபவம்
3. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
4. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 100,000.00 ரூபா (வரிகள் உட்பட) செலுத்துவதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) 2024-09-25ஆம் திகதி முதல் 2024-10-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 175 நாட்கள் வரையில் செல்லுபடியாகும்.
6. விலைமனுக்களை பாதுகாப்பு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ''கொழும்புத் துறைமுகத்தில் உள்ள JCT-V முற்றவெளி பிரதேசத்தின் நடைபாதை வேலைகள் (ஒப்பந்த இலக்கம்: **SLPA/CD/JCT V/YARD/01**)'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு, அபிவிருத்திப் பிரிவு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் உள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் 11,500,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் உத்தரவாதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் உத்தரவாதம் 2025-05-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. இந்த வேலைகளை நிறைவு செய்வதற்கான சட்டகக் காலம் 365 நாட்களாகும்.
9. 2024-10-23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
10. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2380517)
11. மேற்காணும் அனைத்தும் eroc.drc.gov.lk எனும் நிகழ்நிலை இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு 01.**

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் பதவிகளாகும் என்பதுடன் தேசிய ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையானது கொழும்பில் மட்டுமே அமைந்துள்ளது மேலும் வேறு கிளைகள் கிடையாததால் இப்பதவிகள் இடமாற்றங்கள் பெறமுடியாதவையாகும்.

**01. சட்ட அதிகாரி பதவி (வெற்றிட எண்ணிக்கை 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல் அத்துடன் மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

மற்றும்

மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின் குறித்த துறையில் குறைந்தபட்சம் 01 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**02. உள்ளகக் கணக்காய்வாளர் (வெற்றிட எண்ணிக்கை 01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம் (நிதி) அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறையில் ஏனைய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
2. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான சம்பள நிலை:** 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**ஆட்சேர்க்கப்படும் முறை:** திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய விடயங்கள்:**

சகல விண்ணப்பதாரர்களும்:

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-10-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் cv@nmra.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் இடுவதன் மூலம் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், 02ஆம் மாடி, இல. 130, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை.**

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை**
**.......................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. பிரத்தியேக தகவல்கள்:
   - 1.1 முழுப் பெயர்:
   - 1.2. முதலெழுத்துகளுடன் பெயர்:
   - 1.3. பால்:
   - 1.4 பிறந்த திகதி:
   - 1.5. வயது வருடம்:.................. மாதம்:.................... திகதி:....................
   - 1.6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
   - 1.7. தொலைபேசி இலக்கம்: நிலையானது............................ கையடக்க தொலைபேசி:...................
   - 1.8. மின்னஞ்சல் முகவரி:
   - 1.9 முகவரி:
   - 1.10 வசிக்கும் மாவட்டம்:
2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
3. கல்வித் தகைமைகள்: (கூடிய தகைமையில் இருந்து வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ.இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | நிறைவு செய்த திகதி/செல்லுபடியாகும் திகதி | பாடம்/சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

4. தொழில்சார் தகைமைகள்:

| தொ.இல. | தகைமைகள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | நிறைவு செய்த திகதி/செல்லுபடியாகும் திகதி | பாடம்/சித்தி |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |

5. அனுபவம்: (தற்போது வகிக்கும் பதவி முதல் வரிசைக் கிரமமாக குறிப்பிடவும்)

| தொ.இல. | பதவி | நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01. | | | |
| 02. | | | |

6. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களை விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி:
7. **விண்ணப்பதாரரின் சான்று:**
   இங்கு மேலே தரப்பட்டுள்ள என் தொடர்பான விபரங்கள் எனது அறிவு, விசுவாசத்தின் பிரகாரம் சரியானவை மற்றும் உண்மையானவை என பிரகடனப்படுத்துகின்றேன்.

   **திகதி:.**

   ..........................................................................
   **(விண்ணப்பதாரியின் கையொப்பம்)**
8. **அரச, அரச சார்புடைய நிறுவனங்களில் பணியில் உள்ள விண்ணப்பதாரர்களானால் நிறுவனத் தலைவரின் சான்று:**
   இந்த விண்ணப்பதாரராகிய திரு/ திருமதி/ செல்வி ......................................................................... தற்போது இந்த நிறுவனத்தில் ..... .............................................. பதவியில் நிரந்தர/ தற்காலிக/ சமயாசமய பணியாளராக சேவையாற்றுகின்றார் என்பதுடன், அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என அறியத்தருகிறேன்.

   ..........................................................................
   **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**
   **(உத்தியோகபூர்வ முத்திரை)**

**கவனிக்க வேண்டியது:**

இயைபுடைய மாதிரியின் பிரகாரம் மட்டுமே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இந்த மாதிரியின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106**

**கார்கள் விற்பனைக்கு**

300-2129 OPEL ASTRA 1996, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0714542958/ 0711210810. 064558

**110**

**மாருதி கார்கள் விற்பனைக்கு**

JL-7740 MARUTI 2004, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810. 064563

**119**

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

PT-7824 TATA ACE 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே 0714542958/ 0711210810. 064567

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

JJ-6069 BAJAJ 2004, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810/ 0705999163. 064569






# கேள்விகோரல் அறிவித்தல்

**விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | ஆய்வுகூட வசதிகளை விஸ்தரித்தல் மற்றும் திருத்த வேலைகள் மத்திய கால்நடை புலனாய்வு நிலையம் - VRI | 57,000.00 | 2,500.00 | 2024.09.23 முதல் 2024.10.14 வரை | 2024.10.15 மு.ப. 11.00 |
| 1.2 | பயிற்சி அலகிற்கு உரிய மகளிர் விடுதி (SQA-2) திருத்தம் செய்தல். - AIC பொலன்னறுவை | 53,000.00 | 2,500.00 | | |
| 1.3 | SQB -1 சுற்றுலா விடுதியை திருத்தம் செய்தல் - AIC பொலன்னறுவை | 128,200.00 | 3,500.00 | | |
| 1.4 | கருக்கள் (Embryos) இறக்குமதி கொள்வனவு 2024 (AIC குண்டசாலை) | 200,000.00 | 4,000.00 | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுல் இடலாம். விலை மனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரையும் மற்றும் விடயத்தின் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணையதளத்தை பார்வையிடவும் (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020,**
**த.பெ.இலக்கம் - 13**
**கெட்டம்பே,**
**பேராதனை**

**தொலைபேசி இல 081-2388197/081-2385227**
**081-2388120/081-2388189**
**081-2385701**
**நீடிப்பு - 290/291**

# கேள்விக்கான அழைப்பு

**நிதி பொருளாதார நிலைப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**இலங்கைச் சுங்கம்**

## இலங்கைச் சுங்கத்தில் தன்னியக்க அனர்த்த முகாமைத்துவ அமைப்பை ஸ்தாபித்தல் (கட்டம் 1) இற்கான தகைமையான நிறுவனமொன்றை தேர்ந்தெடுத்தல்

சுங்கப் பணிப்பாளர் நாயகம் சார்பாக திணைக்கள பாரிய பெறுகைக் குழுவின் தலைவரால் இலங்கைச் சுங்கத்திற்கு தன்னியக்க அனர்த்த முகாமைத்துவ அமைப்பை (Automated Risk Management System) ஸ்தாபித்தல் - (கட்டம் 1) இற்கான தகைமையான நிறுவனமொன்றை தேர்ந்தெடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பெறுகைக்கான தகைமை கொண்ட தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | பெறுகையின் பெயர் மற்றும் விபரம் | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) | கேள்வி முடிவுறுத்தல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| CUS/LOG/S/11/ Risk Mgt/2024 | இலங்கைச் சுங்கத்திற்கு தன்னியக்க அனர்த்த முகாமைத்துவ அமைப்பை (Automated Risk Management System) ஸ்தாபித்தல் (கட்டம் 1) இற்கான தகைமையான நிறுவனமொன்றை தேர்ந்தெடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் பெறுகை | 750,000.00 | 2024.11.04 | பி.ப. 3.00 |

2. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB - ஒரு கட்டம் இரு உறைகள் கேள்வி முறை) இன் கீழ் தேசிய பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடைபெறும்.
3. ஆர்வமுள்ள தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியிலான கேள்விகோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை 2024.09.24 முதல் 2024.11.04 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து மற்றும் இலங்கைச் சுங்கத்தின் 2ம் மாடியில் பிரதம காசாளரிடம் ரூ.10,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் 6ம் மாடியில், சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்குதல்) இடம் பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவுகள் காசாக மட்டுமே.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.11.04 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கொழும்பு - 11, பிரதான வீதி இல. 40, சுங்க இல்லம், 06ம் மாடியில் சேவை வழங்கல் பிரிவில் சுங்கப் பணிப்பாளரிடம் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
5. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.09.30 மு.ப. 11.00 இற்கு கொழும்பு - 11, பிரதான வீதி, இல.40 இல் அமைந்துள்ள இலங்கைச் சுங்கத்தின், 9ம் மாடியில் மனித வள அபிவிருத்தி பிரிவின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தொடர்பாடல் : 0773812815 - பிரதி சுங்க அதிகாரி

**தலைவர்,**
**திணைக்கள (பாரிய) பெறுகைக் குழு,**
**இலங்கைச் சுங்கம், சுங்க இல்லம்.**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு - 11**






**இலங்கை துறைமுக அதிகார சபை**

# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

## அழிந்துபோகக்கூடிய சரக்குகளின் விற்பனை

**ஏலவிற்பனைத் திகதி: 2024-09-24**

**எனது இல. LD/S/CICT/2024/08/PC-05, LD/S/CICT/2024/09/PC-01**

CICT முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள அழிந்துபோகக்கூடிய பொருட்களுடன் கூடிய (குளிரூட்டப்பட்ட உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம்) கொள்கலன்களைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்துவதற்காக 2024-09-24ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் BQ நலன்புரிக் கட்டிடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏல ஆவணங்கள் மற்றும் நுழைவு அனுமதி அட்டைகளை (Gate Pass) பெற்றுக்கொள்ளல் மற்றும் கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (பெறுமதி சேர் வரி மற்றும் ஏனைய வரிகள்) மற்றும் மீளளிக்கப்படும் 200,000.00 ரூபாவைச் செலுத்தி கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2024-09-23ஆம் திகதி 08.30 மணித்தியாலம் முதல் 16.00 மணித்தியாலம் வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஒரு விலைமனுதாரர் இரண்டு (02) பொருட்களுக்காக மொத்த மீளளிக்கப்படும் வைப்பாக 400,000.00 ரூபாவை மேற்கூறப்பட்ட வகையில் செலுத்துதல் வேண்டும்)

2024-09-24ஆம் திகதி 10.30 மணித்தியாலம் முதல் 12.00 மணித்தியாலம் வரையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பொருட்களை இயைபுடைய முற்றவெளியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து (www.slpa.lk) இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்),**
**2024-09-23**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**லொஜிஸ்டிக் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

**பாதுகாப்பு சேவைகள் வழங்கல் - 2025**

# ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - பதுளை

ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் சுகாதார நிறுவனங்களுக்கு 2025-01-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| பொதி இல. | வைத்தியசாலை / நிறுவனம் | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரொக்கப் பணமாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பிணை முறி பணமாக |
|---|---|---|---|
| **A தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | |
| 01 | ஆதார வைத்தியசாலை - தியத்தலாவ | 5,000.00 | 120,000.00 |
| 02 | ஆதார வைத்தியசாலை - மஹியங்கனை | 6,000.00 | 165,000.00 |
| **B தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | |
| 03 | ஆதார வைத்தியசாலை - பிபிலை | 5,000.00 | 120,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை - வெலிமட | 3,000.00 | 47,000.00 |
| 05 | ஆதார வைத்தியசாலை - சியம்பலாண்டுவ | 2,500.00 | 39,000.00 |
| 06 | ஆதார வைத்தியசாலை - வெல்லவாய | 3,500.00 | 64,000.00 |
| **A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | |
| 07 | பண்டாரவளை, புத்தள பிரதேச வைத்தியசாலைகள் | 3,000.00 | 53,000.00 |
| **B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | |
| 08 | மீகஹகிவுல, ஹிராந்துருகோட்டே, தனமல்வில, மெதகம பிரதேச வைத்தியசாலைகள் | 3,000.00 | 54,000.00 |
| **C தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | |
| 09 | இங்கினியாகல, கதிர்காமம் பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகம் மற்றும் புனருத்தாபன அலகு - மீதும்பிட்டிய மற்றும் 10 பிரதேச வைத்தியசாலைகளுக்கு | 4,000.00 | 88,000.00 |
| **சுகாதார நிறுவனங்கள்** | | | |
| 10 | சுகாதார பயிற்சி நிலையம், பண்டாரவளை, மாகாண சபை புதிய கட்டிடத் தொகுதி – பதுளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - பதுளை மற்றும் மொனராகலை, பிராந்திய மலேரியா அலுவலகம், பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு, ஹுலந்தாவ தெற்கு கிருமிநாசினி களஞ்சியம் (மொனராகலை), கதிர்காமம் புனித நகர பல்காரிய சிகிச்சை நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் | 6,000.00 | 138,000.00 |

01. கேள்விதாரர் இலங்கை வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அல்லது நபராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத வழங்குநராகவிருத்தல் வேண்டும்.

02. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மாதிரிப் படிவத்தை ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் கேள்வி மாதிரிப் படிவங்கள் 2024-09-23ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி வரை 12.30 வரை வழங்கப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை 055 - 2231981 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

03. கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம்/கேள்விப் பிணைக் கட்டணத்தை அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் அதற்கு இயைபான தொகையை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் மக்கள் வங்கி 269 - 100188440649 நடைமுறைக் கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து அதற்கு இயைபான பற்றுச்சீட்டை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு ஒப்படைத்து அதற்கான பற்றுச்சீட்டை அந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை கேள்வி மாதிரிப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

04. அதேபோல் மீளளிக்கப்படும் பிணை முறிக் கட்டணத்திற்கான வங்கிப் பிணையொன்றைச் சமர்ப்பிப்பதானால் அதன்பொருட்டு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியின் இரண்டு மடங்குத் தொகையை 2025-02-15ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் கேள்வி மதிப்பீடுகளை கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அந்த ஆவணங்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. C தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள் / சுகாதார நிறுவனங்களுக்கு ஒரு வருட காலம் பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கும், B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒரு வருட காலம் பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்காகவும், A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு ஒரு வருட காலம் பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கும் B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கு ஒரு வருட காலம் பாதுகாப்பு சேவைகளை வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்காகவும் விண்ணப்பிக்கலாம். இயைபுடைய துறையில் ஒரு வருட காலம் அனுபவம் உள்ள நிறுவனங்கள் C தரமுடைய வைத்தியசாலைகள் / சுகாதார நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

06. சகல பொதிகளுக்கும் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பெற்றுக்கொண்ட பொது ஒப்பந்த உடன்படிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் கேள்விதாரர்கள் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை.**

**தொலைபேசி இலக்கம்: 055-2231981**
**தொலைநகல் இலக்கம்: 055-2223098**




# ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

## திருகோணமலை மாவட்டம்

### திருகோணமலை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 31,371 | 42.44% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 15,403 | 20.84% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 12,976 | 17.55% |
| பா. அரியநேத்திரன் (த.பொ,வே) | 11,300 | 15.29% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 466 | 0.63% |
| செல்லுபடியான வாக்குகள் | 73,919 | 96.72% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,508 | 3.28% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 76,427 | 75.31% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **101,401** | |

### சேருவில தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 26,527 | 41.28% |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 22,724 | 35.36% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 8,603 | 13.39% |
| பா.அரியநேத்திரன் (த.பொ.வே) | 2,412 | 3.75% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 1,283 | 2% |
| செல்லுபடியான வாக்குகள் | 64,259 | 97.99% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,317 | 2.01% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 65,576 | 81.7% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **80,269** | |

## பொலன்னறுவை மாவட்டம்

### மின்னேரிய தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 34,088 | 48.31% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 22,991 | 32.58% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 9,177 | 13% |
| நாமல் ராஜபக்ஷ (ஸ்ரீல.பொ.பெ) | 1,635 | 2.32% |
| செல்லுபடியான வாக்குகள் | 70,566 | 98.15% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,328 | 1.85% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 71,894 | 80.73% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **89,051** | |

### பொலன்னறுவை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 56,432 | 44.06% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 47,953 | 37.44% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 17,072 | 13.33% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,147 | 1.68% |
| செல்லுபடியான வாக்குகள் | 128,093 | 98.35 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,149 | 1.65% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 130,242 | 81.6% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **159,613** | |

## இரத்தினபுரி மாவட்டம்

### இரத்தினபுரி தேர்தல் தொகுதி

| | | |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 41,075 | 39.04% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 32,133 | 30.54% |
| ரணில் விக்கிரமசிங்க (சுயேட்சை) | 26.589 | 24.32% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 2,678 | 2.55% |
| செல்லுபடியான வாக்குகள் | 105,212 | 98.16% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,972 | 1.84% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 107,184 | 81.5% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **131,522** | |

## பதுளை மாவட்டம்

### பதுளை தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 17, 983 | 39.59% |
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 14,309 | 31.5% |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 10,729 | 23.62% |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 806 1.77% | |
| செல்லுபடியான வாக்குகள் | 45,424 | 97.2% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,307 | 2.8% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 46,731 | 81.15% |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **57,589** | |

## வன்னி மாவட்டம்

### முல்லைத்தீவு தேர்தல் தொகுதி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சஜித் பிரேமதாச (ஐ.ம.ச) | 28,301 | 51.19 |
| பா. அரியநேத்திரன் (த.பொ.வே) | 12,810 | 23.17 |
| அநுரகுமார திசாநாயக்க (தே.ம.ச) | 3,453 | 6.25 |
| ரணில் விக்கிரமசிங்க ( சுயேட்சை) | 7,117 | 12.87 |
| நாமல் ராஜபக்ஷ ( ஸ்ரீல.பொ.பெ) | 215 | 0.39 |
| செல்லுபடியான வாக்குகள் | 55,285 | 93.95 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,560 | 6.05 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 68,845 | 70.62 |
| **பதிவு செய்யப்பட்ட வாக்குகள்** | **83,323** | |

# சமூகத்துக்கு திருப்பித் தரும் பழக்கம்தான் நம்மை சிறந்த மனிதர்களாக்கும்

**தமிழச்சி தங்கப்பாண்டியன்**




சமூகத்துக்கு திருப்பித் தரும் பழக்கம்தான் நம்மை சிறந்த மனிதர்களாக்கும் என தந்தை பெரியார் கல்லூரியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி தெரிவித்தார்.

திருச்சி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பில், ஐம்பெரும் விழா கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் கா.வாசுதேவன் தலைமை வகித்தார். முன்னாள் மாணவர்கள் சங்க பொதுச்செயலாளர் க.ராஜலிங்கம் வரவேற்றார். பேராசிரியர்கள் எல்.செல்லப்பா, மு.அ.முஸ்தபா கமால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் முன்னாள் மாணவர்கள் பலரும் பங்கேற்று தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற எஸ்பி பன்னீர்செல்வம் பேசுகையில், "கடந்த 1972 73ம் ஆண்டு காலத்தில் மணவர் சமுதாயம் பல போராட்டங்களை கண்டது. பல கல்லூரிகள் அப்போது என்னை சேர்க்க மறுத்தன. நீ வா உன்னை தேத்தி விடுகிறேன் என்று எனக்கு படிக்க வாய்ப்பளித்து இந்தளவுக்கு உயர்வான இடத்துக்கு கொண்டு வந்து அழகு பார்த்தது தந்தை பெரியார் கல்லூரி" என்றார்.

ஓய்வு பெற்ற நீதிபதி பாலகிருஷ்ணன் பேசுகையில், "கல்வித்துறையில் ஆதிக்க சக்திகள் நிறைந்த அந்த காலத்தில் என்னைப் போன்ற எளிய குடும்பத்திலிருந்து வந்தவர்களுக்கு வாழ்வளித்த கல்லூரி தந்தை பெரியார் கல்லூரி" என்றார். பத்மஸ்ரீ விருது பெற்ற சுப்புரராமன் பேசுகையில், "பிஎஸ்சி வேதியியல் துறைக்கு பல கல்லூரிகளில் விண்ணப்பித்து புறக்கணிக்கப்பட்ட எனக்கு இந்தக் கல்லூரி வாய்ப்பு வழங்கியது. மிகவும் கஷ்டப்பட்டு படித்து, இன்று பத்மஸ்ரீ விருது பெற காரணமான இக்கல்லூரியை என்றும் மறவேன்" என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய எம்பி தமிழச்சி தங்கப்பாண்டியன், "நாம் அடுத்தவர்களுக்காக தரும் பரிசுகளில் மிகச்சிறந்தது, அவர்களுக்காக நாம் செலவிடக்கூடிய நேரம் தான். திருச்சியில் மேல்தட்டு வர்க்கத்தினர், சிறுபான்மையினருக்கு என கல்லூரிகள் இருந்த நிலையில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்லூரியை பெரியார் தொடங்கி உள்ளார்.

பெரியாரின் மாணவராக திகழக்கூடிய எம்.பி சிவா, திருநங்கைகளுக்காக தனிநபர் மசோதா கொண்டு வந்தார். நாங்கள் அனைவரும் பிறந்ததிலிருந்தே திமுகவினர் தான். எல்லோருடைய உடலிலும் சிவப்பணுக்கள் என்றால், எங்களுடைய உடலுக்குள் ஓடுவது கறுப்பு, சிவப்பு அணுக்கள் என்ற பெருமிதம் எங்களுக்கு உண்டு. கல்லூரிக் காலத்தில் நாம் கொள்ளும் நட்பு என்பது காலத்துக்கும் வரக்கூடியது. வேறு வேறு கருத்தாக்கங்கள் கொண்ட ராஜாஜி, திரு.வி.க, குன்றக்குடி அடிகளாரோடும் பெரியார் நட்பு பாராட்டினார். நட்புக்கு, நாகரீக அரசியலுக்கு இலக்கணமாக திழந்தவர் பெரியார். உங்கள் கடவுள் ஏன் சாதியை உருவாக்கினார் என்று பெரியார் கேட்டபோது, 'சாதியை மனிதன் உருவாக்கினான்' என்று குன்றக்குடி அடிகளார் சொல்வதும், அப்படியானால் சாதியை நாம் இருவரும் ஒழிப்போம் என்று கைகோர்த்து பணியாற்றினார். 'எனக்கும் கடவுளுக்கும் என்னப்பா தகராறு. நான் அவரை முன்னப்பின்ன பார்த்தது கூட இல்லை' என்று நகைச்சுவையாக பெரியார் கூறினார்.

இவையெல்லம் பெரியாரின் நட்புக்கு, நாகரீக அரசியலுக்கு இலக்கணமாக திகழ்பவை. அவருடைய பெயரைத் தாங்கிய இக்கல்லூரி பலரது வாழ்வுக்கு ஒளிவிளக்காக உள்ளது. ஒரு மனிதன் பெறும் பட்டங்கள், அடையக்கூடிய உயரங்கள் அவரை சமூகநீதியின் பால் சிறப்பாக செயல்படுபவராக ஆக்கிவிட முடியாது. படிப்பு, அனுபவம், தகுதி என்பது சமூகத்துக்கு நீங்கள் எத்தனை விஷயங்களை நீங்கள் திருப்பித் தருகிறீர்கள் என்பதில்தான் இருக்கிறது. அவை தான் உங்களை சிறந்த மனிதர்களாக ஆக்கும்" என்றார்.

சங்க புரவலரும், எம்பியுமான திருச்சி சிவா பேசுகையில், "இந்தக் கல்லூரி இல்லையென்றால் நான் இங்கு இல்லை. நட்புகள், நினைவுகள் ஏராளம் உள்ளன. இக்கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்கள் பலர் இன்று இல்லை. இந்த விழாவுக்கு வந்த மகிழ்வைக் காட்டிலும், நம்மை விட்டு பிரிந்த, வர இயலாத நிலையில் உள்ள நண்பர்களை எண்ணி மனவேதனை தான் அதிகரிக்கிறது. இருக்கும் வரை நட்புகளை கொண்டாட இதுபோன்ற சங்கம விழாக்கள் அவசியம். இந்த விழாவில் முன்னாள் மாணவர்களுக்கு நினைவுப் பரிசு வாங்குவதற்காக பழைய டெல்லிக்கு சென்றேன். நீங்கள் நினைப்பது போல் பழைய டெல்லி வெளிநாடுபோல இருக்காது. குதும்பினார் தூணை விட உயரமான குப்பை மேடுகள் நிறைந்த மோசமான நகரம் அது. அங்கு நினைவுப்பரிசுகளை வாங்கிக் கொண்டு, ரயிலில் அனுப்பி வைத்தேன். அதற்கு ஜிஎஸ்டி கட்ட வேண்டும் என்றார்கள். அதுதான் ரொம்ப வேடிக்கை. சுண்டைக்காய் கால் பணம், சுமைக் கூலி முக்கால் பணம் என்பதுபோல அப்பொருள்களுக்கான ஜிஎஸ்டி வரி மட்டும் ரூ.40 ஆயிரம்" என்றார்.

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் மீலாத் தின நிகழ்வு








கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட தொளஸ் மகேபான வேலைத்திட்டத்தின் கீழ் மீலாதுந் நபி பிறந்த தினம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. உதவி பிரதேச செயலாளர் எம்.ஜ. முஆபிகாவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். றின்ஸான், உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா, நிர்வாகப் பிரிவு பிரதம முகாமையாளர் ஏ.சீ. முஹம்மட், சாய்ந்தமருது (கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் அஸீம் (நளீமி), கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம். தௌபீக் (நளீமி), கலாசார பிரிவைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட தஃவா இஸ்லாமிய கலாபீட மாணவர்களும் கலந்துகொண்டனர். ஒருங்கிணைப்பாளர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இந்நிகழ்வு நடைபெற்றது.

# சிறைக்கைதிகள் மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்சி ஆரம்பம்




சிறைச்சாலையில் குற்றங்களுக்கான தண்டனைகளை அனுபவித்துவரும் கைதிகளுக்கு அவர்களுடைய எதிர்கால வாழ்கைக்கான வழிகாட்டலுக்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண சிறைச்சாலை கைதிகளுக்கான திறன் விருத்தி பயிற்சிக்கான வாய்ப்பு சிறைச்சாலை அத்தியட்சகரின் ஆதரவுடன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் Ratnam FoundationUK ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதரவுடன் தேசிய தொழிற்பயிற்சி நிறுவன வளவாளர்களின் பங்களிப்போடு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வை Ratnam Foundation ஸ்தாபகர் Dr நித்தியானந்தனும் அவரது பாரியாரான திருமதி சரோஜினி நித்தியானந்தமும் மற்றும் IMHO நிறுவன இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணனும் ஆரம்பித்து வைத்தனர். முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமாரும் திட்ட இணைப்பாளர் துஷாந்தனும் பங்குபற்றி சிறப்பித்தனர், செயற்றிட்ட தொகுதியை, பெயர்பலகையை திரைநீக்கி ஆரம்பித்து வைத்த Dr நித்தியானந்தன் இது கைதிகளும் மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம் எனவும் இதற்கு முழுமையாக உதவியாக செயற்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமாரும் அவரது சக உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள் எனக்குறிப்பிட்டார்.

# ரொறன்ரோ தமிழ்த் திரைப்பட விழா –2024










கனடாவின் மார்க்கம் நகரில் அமைந்திருக்கும் யோர்க் சினிமா வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சிறப்பாக நடைபெற்று வரும் 'ரொறன்ரோ தமிழ்த் திரைப்பட விழா2024 இனது இறுதி திரையிடல் நாள் இன்றாகும்.பகல் 12.00 தொடக்கம் பல தமிழ்த் திரைப் படங்கள் மற்றும் குறும்படங்கள் ஆகியன திரையிடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இந்த வருடத்தில் பல தமிழ் மொழி அல்லாத மொழிகளில் தயாரிக்கப்பெற்ற திரைப்படங்களும் போட்டிக்கு வந்துள்ளமை நண்பர் செந்தூரன் நடராஜா அவர்கள், மற்றும் அவரது திரைப்பட விழாக் குழுவினருக்கு கிட்டிய வெற்றி என்றே நாம் கருத வேண்டும். இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டுமல்ல ஏனைய சில மாநிலங்களிலும் நன்கு பேசப்படும் ஒரு திரைப்பட விழாவாக 'ரொறன்ரோ தமிழ்த் திரைப்பட விழா' திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது நேற்று ஞாயிற்றுக்கிழமை 22ம் திகதி, நண்பகல் 12.00 மணி தொடக்கம் திரைப் படங்களின் திரையிடல் இடம்பெறுகின்றது. தொடர்ந்து இரவு வெற்றி பெற்ற, அதாவது தெரிவிக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெற்ற திரைப் படங்களுக்கான விருதுகள் வழங்கும் விழா இடம்பெறும்.இதேவேளை. கடந்த 20ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யோர்க் சினிமாவில் இடம் பெற்ற 'ரொறன்ரோ தமிழ்த் திரைப் பட விழா2024 இன் ஆரம்ப வைபவத்தில் பல சிறப்பு விருந்தினர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு திரைப் பட விழாவின் ஆரம்ப வைபவத்தை சிறப்பித்தார்கள்.

அங்கு அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டு அரசு சார்பான வாழ்த்துப் பத்திரங்களையும் வழங்கிச் சென்றார்கள். நிகழ்ச்சியை நடிகையும் வானொலி அறிவிப் பாளருமாகிய சுதர்சி இக்னாசியஸ் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டதாகும்.

**சத்தியன் கனடா**

# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவம்











நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் சமுத்திர தீர்த்த உற்சவம் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமானது. திருவிழாவின் பத்தாம் திருவிழாவான நேற்று ஞாயிறு அன்று நாகர்கோவில் கடற்கரையில் சமுத்திர தீர்த்தம் இடம் பெற்றுள்ளது. **கரவெட்டி தினகரன் நிருபர்**

# தும்பு தொழிலாளர்களின் இன்றைய நிலை....

பாரம்பரிய கைத்தொழில் வரிசையில் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் பொருட்களின் உற்பத்திக்கு நல்லதொரு வரவேற்பு உண்டு என்பது யாவரும் அறிந்ததே. தென்னை மரத்தின் அனைத்துப் பகுதிகளும் ஒவ்வொர் உற்பத்திக்கு பயன்பட்ட போதிலும் தும்புக் கைத்தொழிலுக்கே தென்னை மிகக்கூடுதலாகப் பயன்படுகின்றது. இதன்மூலம் பாரம்பரிய முறையிலான சிறு கைத்தொழிலாளர்கள் கூடுதலான வருமானத்தை பெற்று வருகின்றனர்.

பண்டைய காலத்தில் தும்புக் கைத்தொழிலே இக்கிராமத்தின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாக இருந்திருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆரம்பகாலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினால் அனைத்து பொருட்களையும் செய்து வந்தார்கள். ஆனால் தற்போதைய சூழலில் இயந்திரங்களின் வருகையினால் வேலைப்பழு குறைவடைந்து வருகின்றது. குறிப்பாக கயிறு, நிலத்தை சுத்தப்படுத்தும் தும்புத்தடி என்று இதன் தயாரிப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

புத்தளம் மாவட்டத்தின் கொட்டகை பிரதேசத்தில் தும்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. கொரோனாதொற்றின் காரணமாக இக்காலப்பகுதியில் இக்கைத்தொழில் வீழ்ச்சி கண்டு வந்தது. தும்பிற்கான சந்தைவிலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறைவடைந்திருந்தது. கொரோனாவிற்கு முன் ஒரு கிலோகிராம் தும்பின் விலை ரூபாய் 45 ஆக காணப்பட்டது.

இருப்பினும் தும்பு சார்ந்த கைத்தொழிலுக்கு கூடுதலான சந்தைவாய்ப்பு இருந்த போதிலும் தென்னை சார்ந்த பொருட்களைக் கொண்டு உற்பத்தி தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை, தற்போது இங்கு குறைந்து வருகின்றது. அவர்களது வருமானமும் விருத்தியடைந்ததாக தெரியவில்லை. உள்ளூர் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை நடத்துவதற்காக ஒரு தொழில் அவசியம் என்பதற்காகவே இதனை மேற்கொள்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் சுமார் 120 தும்பு ஆலைகள் இருக்கின்றன. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தும்புத் தொழிலாளர்கள் இந்தத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். சீனக் கம்பனி ஒன்று இந்தப் பிரதேசத்தில் காலூன்றி பெருமெடுப்பில் இந்தத் தொழிலை மேற்கொண்டு வருவதால், நாங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளோம். அரசாங்கம் இதற்குரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். எனவும் 2016ஆம் ஆண்டு முறையிட்டுள்ளனர். இருப்பினும் இங்கு பணிபுரியும் மக்கள் பல இன்னல்களை சந்தித்தே வருகின்றனர்.

தேங்காய்களில் இருந்து அதன் மட்டைகள் அகற்றப்படுதல், மட்டைகளில் தும்பை வேறுபடுத்தி அவற்றை பதப்படுத்தி அத்தும்பை பயன்படுத்தி, தும்புத்தடி, கயிறு மற்றும் கால்மிதி ஆகிய பொருட்களின் உற்பத்திகளை செய்து அதனை விற்பனை செய்யும் செயற்பாடுகள் போன்றன தும்பு தொழிலின் செயற்பாடுகளாய் அமைகின்றன. தேங்காய் விற்பனை செய்யப்படும் நோக்கோடு தென்னம் தோட்டங்களில் தேங்காய்கள் பெறப்பட்டு சந்தைக்கு கொண்டு செல்லப்படும். சந்தையில் தேங்காய்களில் உள்ள மட்டைகள், அலவாங்கு போன்ற ஆயுதத்தைக் கொண்டு தேங்காயில் இருந்து அகற்றப்படும். இச்செயற்பாடு “தேங்காய் உரித்தல்” என கூறப்படும். பின்னர் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். தேங்காயில் இருந்து அகற்றப்படும் உரிமட்டைகள் பிறிதாக சேகரிக்கப்படும். உரிமட்டைகள் சேகரிக்கப்பட்ட பின்னர் அதனை தும்புத் தொழில் மேற்கொள்பவர்களின் பிரயோகத்திற்காக தொழில்முனைவோரால் கொள்வனவு செய்யப்பட்டு அவை உவர்ப்புத் தன்மை கொண்ட நீர் நிலைகளுக்கு அருகாமையில் சேகரிக்கப்படும். மட்டைகளை வாங்கிய தொழில் முனைவோர் நீர் நிலைகளின் கரைகளில் தேங்காய் மட்டைகளை புதைத்து விடுவார்கள். புதைக்கப்பட்ட மட்டைகள் நீர் நிலைகளின் கரைகளில் 6 மாதம் முதல் 1 வருடம் வரை ஈரப்பதன் உள்ள நிலத்தின் அடியில் ஊறவிடப்படும். குறித்த மட்டைகள் 6 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை குறிப்பிட்ட பதத்தை அடைந்ததன் பின்னர். உரிமட்டைகளை மீண்டும் தோண்டி எடுத்து அவற்றை ஒவ்வொரு மட்டைகளாக பிரித்தெப்பார்கள்.



இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தும்பானது தடித்த, நீளமான, தூய்மையான இழைகளைக் கொண்டிருப்பதாக உலகசந்தையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று கயிற்றுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. தெங்கு உற்பத்திப் பொருட்களில் முதன்மையானது தும்பிலிருந்து திரிக்கப்படும் கயிறுகளாகும்.

இது தொடர்பாக தொழிலாளி சுமதியிடம் வினவிய போது,

தும்புக் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு அதற்கான முதலீடு தேவை. அவற்றை பெறுவது சவாலாகவே உள்ளது. இதனால் தொழிலை விருத்தி செய்து கொள்ள முடியாத நிலை உள்ளது. தும்புக் கைத்தொழிலுக்கென்று தனியாயாக கற்றுக் கொண்டதன் வழியாகவே தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால் இயந்திரத்தின் உதவியில் தும்புப் பிரித்தெடுப்பு இலகுவான போதும் அதற்காக பயிற்சிகள், வழிகாட்டல்கள் இதுவரை திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறைகள் ஊடாக வழங்கப்படாமலேயே உள்ளது.

எனவே உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வங்கிகள் இலகு கடன் வழங்களை அறிமுகம் செய்ய வேண்டும். மற்றும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தொழில் வழிகாட்டல் அலகுகள் என்பன தும்புக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமும், பயிற்சியும் அளிக்க வேண்டும். தும்புக் கைத்தொழிலுக்கு உரிய தொழிற்பயிற்சிகளை பயிற்சி நெறியிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



மழைக்காலங்களிலும் தும்புச்சோற்றை உலர வைக்க முடியாததால் தொழிலாளர்கள் வேறு வேலைகளுக்குச் செல்வதால் நிரந்தரமான வேலை பயின்ற தொழிலாளர்களை தக்கவைத்துக் கொள்வது கடினமாகவும் உள்ளது. ஒருபுறம் இக்காலத்தில் சீவியத்திற்கு வேறு தொழில்களையும் பெறுவதும் பாரிய சவாலாகவே உள்ளது.

தொழிலாளியான ராஜேந்திரன் கூறுகையில், இயந்திரங்களில் தும்பைப் பிரித்தெடுக்கும் போது, உடல் ரீதியான அபாயங்களையும் சந்திக்க நேரிடுகின்றது. அதாவது நீர்நிலைகளில் தேங்காய் மட்டைகள் நன்கு ஊறிய பின்னர், அந்நீரானது அழுகல் நிலையை அடைந்து விடும். அந்நீர் நிலைகளில் இறங்குபவர்களது கால்கள் அவிந்து, நகங்கள் கழன்றும் காணப்படுகின்றது. தும்பு, தூசுகளால் சிலர் சுவாச நோய்களுக்கும் ஆளாகியுள்ளர். இயந்திரத்திற்குள் கைகளும் சிக்குண்டதாகக'' கூறுகின்றனர்.

இதிலிருந்து தெளிவாவது யாதெனில் முறையான பாதுகாப்பு கவசங்கள், உடைகள் கூட இல்லாத நிலையில் செய்யும் தொழிலே தெய்வம் என அவர்கள் வாழ்கின்றனர்.

இலங்கையில் முல்லைத்தீவு, பருத்தித்துறை, மருதமுனை, குருநாகல், புத்தளம் போன்ற இடங்களில் தும்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தும்புக்கான கேள்வி இன்னும் குறையவில்லை. இருப்பினும் சந்தையில் நிலவும் கேள்விக்கேற்ப அபிவிருத்தியில் பல படிகளை தாண்ட வேண்டியுள்ளது. தும்புக் கைத்தொழிலைப் பொறுத்தவரையில் பணியாளர்கள் குறைந்த கூலியில் வேலை செய்வதா? என சிலர் விலகியும் செல்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் வெளிநாட்டு வெற்றியாளர்களையும் முயற்சியாளர்களையும் ஆச்சரியத்தோடு பார்க்கின்றோம். ஆனால், கடுமையான அனுபவங்களை வெற்றிக்குரிய படியாகக் கொண்டு முன்னேறும் எத்தனையோ முயற்சியாளர்கள், எம் பிரதேசத்தில் உள்ளனர் என்பதை நாம் அறிய வேண்டும். அந்த வகையில் தும்புக் கைத்தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும். அத்தோடு அரசாங்கம் அறிமுகம் செய்த திவிநெகும வாழ்வின் எழுச்சித்திட்டம் ஊடாகவும் இவ்வாறான பாரம்பரிய சிறு கைத்தொழில்களுக்கு அபிவிருத்திகள் உதவிகள் வழங்கப்பட்டால் சந்தைப்படுத்தலில் உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரிக்கப்படுவதோடு தொழில் வாய்ப்புகளையும் எட்டிக்கொள்ளவும் முடியும். மேலும் இவ்வாறான தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்பு திட்டங்களும் கடனுதவி திட்டங்களும் கொண்டுவரப்பட வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் தனிமனித வருமானம் குடும்ப வாழ்வாதாரம் போன்றன மாதாந்த பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்துவது மட்டுமல்லாமல் ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வகையில் நடுத்தர மற்றும் சுய தொழில் முயற்சிகள் இலங்கை பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த கொள்கை நோக்கங்களில் ஒரு முக்கியமான தந்திரோபாய அம்சமாக அடையாளங் காணப்பட்டிருக்கின்ற அதே வேளை இது பொருளாதார வளர்ச்சி, பிராந்திய அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமைக்கான வலுவூட்டல் தொடர்பிலான மாற்றத்துக்கான ஒரு உந்து சக்தியாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சுய தொழில் முயற்சிகள் துறையானது பின்தங்கிய கிராமங்களை விருத்தி செய்யக்கூடியளவிலான பங்களிப்பினை வழங்கக்கூடிய ஒரு முயற்சியாகவே கருதப்படுகின்றது. இச்சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் முதலீடு செய்வதற்கும், பின்தங்கிய மற்றும் விருத்தி அடைந்த பிரதேசங்களுக்கு இடையிலான இடைவெளியினைக் குறைப்பதற்கான தூண்டுதலாகவும் விளங்குகின்றமையால் இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு நல்ல அடித்தளமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் உள்ளூர் வளங்களை பயன்படுத்துவதன் மூலம் மனிதனுடைய தேவையைகளை பூர்த்தி செய்வதற்கு மனித முயற்சியில் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சி கைத்தொழில் என்று கூறலாம். முன்னைய காலத்தில் விவசாயத்தை மையமாக கொண்டு விளங்கிய பொருளாதாரம் இன்று சுய கைத்தொழில் முயற்சிகளுக்கு கூடிய முக்கியத்துவதினை கொடுக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற உள்ளூர் கைத்தொழில்களாக தும்புக் கைத்தொழில், சீமெந்துக் கைத்தொழில், சீனிக் கைத்தொழில், ஆடைக் கைத்தொழில், இறப்பர் பிளாஸ்டிக் சார் கைத்தொழில், பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் என்பவற்றைக் குறிப்பிட முடியும். அதிலும் முக்கியமாக தும்புக் கைத்தொழில் முக்கியமான ஒரு கைத்தொழிலாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினாலேயே தும்புசார் அனைத்து உற்பத்திகளையும் செய்து சந்தைப்படுத்தி வந்துள்ளனர். இப்போதும் இவ்வாறான பாரம்பரிய முறை நடைமுறையில் இருந்து வருகின்ற போதிலும் பெருமளவில் உபகரணங்களின் உதவியின் மூலம் தும்புக் கைத்தொழிலை மேற்கொள்ளுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

தும்புக் கைத்தொழில் முயற்சிகளுக்கான முறையான பயிற்சி நிலையங்கள் மற்றும் முறையான பயிற்சி முறைகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக தொழில்சார் அனுபவங்களையும் யுக்திகளையும் தலைமுறைகளிற்கிடையில் கடத்துவதாகவே பரவலாக காணப்படுகிறது. எனினும் இன்றளவில் தும்பு கைத்தொழிலிற்கான கேள்வி அதிகரித்து வருகின்ற வகையில் பலர் இதில் நாட்டம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில் தும்புத் தொழில் என்பது தென்னந் தும்பை பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தி பல்வேறு யுக்திகளின் மூலம் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ளப்படும் கைத்தொழில் ஆகும். தேங்காய் மட்டை அல்லது உரிமட்டைகளை பதப்படுத்துவதன் மூலம் தென்னந் தும்பைப் பெற்று அதில் இருந்து தும்பைப் பயன்படுத்தி பல பயன்பாடு மிக்க முடிவுப்பொருட்களை உற்பத்தி செய்தல் வரையிலான செயற்பாடுகளை தும்புத் தொழில் என்பதற்குள் குறிப்பிட முடியும்.

நாம் தினமும் எத்தனையோ விதமான பொருட்களை நுகர்கின்றோம். அதில் பல வெளிநாடுகளில் இருந்து எமது பிரதேசத்திற்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் அப்பொருட்களை விட மிகவும் சிறந்த பொருட்கள் எம் தேசத்து முயற்சியாளர்களால் உருவாக்கப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் முண்ணனி வகிக்கும் வெளிநாட்டு வெற்றியாளர்களையும், முயற்சியாளர்களையும் ஆச்சரியத்தோடு பாராட்டுகின்றோம். ஆனால் கடுமையான அனுபவங்களை வெற்றிக்குரிய படியாகக் கொண்டு முன்னேறிய எத்தனையோ முயற்சியாளர்கள் எம் பிரதேசத்தில் உள்ளனர் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இவர்கள் திறமைசாலிகளாகவும் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் இருந்து விலகாதவர்களாகவும் , எமது தேசத்தின் வளங்களைக் கொண்டு நாம் நுகரும் பொருட்கள் உற்பத்தி செய்து சமூக நன்மை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இவர்களது முயற்சியானது நாம் அனைவராலும் பாராட்ட வேண்டியது அவசியமே. தும்புக் கைத்தொழிலுக்கென்று எமது சந்தையில் நிலவும் கேள்விக்கேற்ப அவை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அக்கைத்தொழிலில் ஈடுபட்டுவருபவர்களுக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு பயிற்சிகள் வழங்கப்படும் போது ஏனையவர்களும் ஈடுபடக்கூடிய வாய்ப்பும் ஆர்வமும் ஏற்படும் அதன்போது தும்புக் கைத்தொழிலும் விருத்தியடையும். எமது நாட்டில் பல தொழில் பயிற்சி நிலையங்களில் பல வகையான தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுவரும் வேளையில் எமது கிராமத்தில் எமது வீட்டிலிருந்தவாறே செய்யக்கூடிய ஒரு தொழிலான தும்புக்கைத் தொழிலை பயிற்சி நெறியில் சேர்த்துக் கொண்டால் பாரிய ஒரு ஊக்கமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் சந்தைப்படுத்தல் முயற்சிகளில் கூடிய கவனம் எடுப்பதன் மூலம் இதற்கான கேள்வியை அதிகரித்துக் கொள்ள முடியும். அந்த வகையில், இலத்திரனியல் மயமான முறையில் இதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் உலகளாவிய ரீதியில் அதீத மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. சிறுவர் முதல் முதியோர் வரையிலும், தனி மனிதன் முதல் பாரிய நிறுவனங்கள் வரையிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனை வியாபித்துள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை தமது வியாபார நடவடிக்கைகளை பன்னாட்டு நாடுகளிலும் விருத்தி செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் பல விற்பனை வாய்ப்புக்களையும் வளங்களையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.


**என். லோஜினி**
**யாழ். பல்கலைக்கழகம்**


# சித்திரத்தேர் வடித்த அஜந்தனுக்கு "சிற்பக் கலையரசன்" விருது







காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்திற்கான சித்திரத்தேரை வடித்த சிற்பாச்சாரி அஜந்தனுக்கு "சிற்பக் கலையரசன்" விருதும் குறித்த தேரை அன்பளித்த மகோற்சவகுரு சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்களுக்கு "விநாயக பக்தி கிரியாசாகரர்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாகவரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றமை தெரிந்ததே. இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் முதல் தடவையாக 39 லட்சம் ரூபாவில் 21 அடி உயர பாரிய சித்திரத்தேர் ஒன்று ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்த அமரர் சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பத்தை நன்றி கூறும் கௌரவிக்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் இ.தவராசா தலைமையில் ஆலய சந்தானத்து பிரதிநிதி விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

அதன் போது இத்தேரை குடும்பம் சார்பாக கையளித்த மஹோற்சவ குருவான சுவிட்சர்லாந்து தூண் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார் ."விநாயக பக்தி கிரியாசாகரர்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். வாழ்த்துப்பாவை வி.ரி.சகாதேவராஜா வாசித்து பரிபாலன சபையினர் கையளித்தனர்.

இவ் ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு யாழ்ப்பாணம் கோப்பாய் இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய ஆதீனகர்த்தா அமரர் சிவஸ்ரீ இரத்தினசபாபதி சண்முகரெத்தினம் குருக்கள் வடிவாம்பிகை குடும்பம் சார்பாக இந்த அற்புதமான ஆன்மீக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருடகாலம் பிரதம குருக்களாக இருந்து நிறைந்த சேவையாற்றியவர். அவரது சிரேஸ்ட புதல்வர் வடக்கு கிழக்கில் மிகவும் பிரபலமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இவ் ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார் . அவர் தற்சமயம் கனடாவில் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தில் பிரதம குருவாக செயற்படுகிறார். அக்டோபர் 1 இல் நாடு திரும்புவார்.

அதேசமயம் இந்த சித்திரத்தேரை வடிவமைத்த யாழ்ப்பாணம் கைதடி தச்சன்தோப்பைச் சேர்ந்த சிற்பாச்சாரி சுப்பிரமணியம் அஜந்தனுக்கு "சிற்பக்கலையரசன்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குருக்கள்தர்மகர்த்தா க.சுபரெத்தினம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். குடும்பத்தினர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.


**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**

# வளமான எதிர்காலமே சவூதி அரேபிய இராச்சியத்தின் தீர்க்கதரிசனம்

**சவூதியின் 94வது தேசிய தினத்தை (23.9.2024) முன்னிட்டு இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியின் செய்தி**

சவூதி அரேபியாவின் 94வது தேசிய தினத்தை நாம் கொண்டாடும் இவ்வேளையில், எமது கடந்த காலத்தை கொண்டாடுவது மட்டுமல்லாமல், ஒளிமயமான எதிர்காலத்தையும், அனைத்தையும் உள்ளடக்கிய, நிலையான, புதுமைமிகு மற்றும் வளமான எதிர்காலத்தை சவூதி அரேபிய இராச்சியத்தின் தீர்க்கதரிசனம் மிக்க தலைமைத்துவத்தின் கீழ் கற்பனை செய்கிறோம். இன்று, சவூதி அரேபியா அதன் 94ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. மன்னர் அப்துல் அசீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் ஸுஊத் தொண்ணூற்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற ஒரு நாளில் தான் சவூதி அரேபியாவை நிறுவினார். இந்நாளில் ஒவ்வொரு ஆண்டும், நிறுவனர் எடுத்த வீர நிலைப்பாடுகளை நாம் நினைவு கூருகிறோம். அவர் இராச்சியத்தை ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து, அதனைக் கட்டியெழுப்பினார். பின்னர் அவர் ஆரம்பித்து வைத்த






பயணத்தை, தொடர்ந்து வந்த அனைத்து மன்னர்களும் தொடர்ந்தது மட்டுமல்லாது சவூதி அரேபிய இராச்சியத்தை, பிராந்திய மற்றும் உலக அளவில் உயர் பொருளாதார மற்றும் வளர்ச்சி அடைந்த ஒரு நாடாக மாற்றுவதில் பெரும் பங்களிப்புச் செய்தனர். இச்சந்தர்ப்பத்தில், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸுக்கும், பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல் அசீஸுக்கும், சவூதி அரேபிய மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதைய உயர் தலைமைகளின் கீழ் இராச்சியம் மேலும் முன்னேற்றமும் மற்றும் அபிவிருத்தியும் அடைய வாழ்த்துகின்றேன். சவூதி அரேபிய இராச்சியம், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸ் ஆல் ஸுஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமர் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மற்றும் திட்டங்களின் கீழ், சவூதி அரேபிய இராச்சியத்தின் மூலோபாயத் திட்டமான "விஷன் 2030" ஊடாக பல்வேறு துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும், பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. சவூதி அரேபிய இராச்சியத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நம்பிக்கையளிக்கும் எதிர்கால திட்டங்கள் மற்றும் அதன் குடிமக்களை கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் கலாசாரம், பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டல் ஊடக முதலில் மனித வள அபிவிருத்தியில் முதலீடு செய்வது என அனைத்து மட்டங்களிலும் மேம்படுத்துதல் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்கள் என மிக முக்கிய திட்டங்களை இம்மூலோபாயத்திட்டம் உள்ளடக்கியுள்ளது, உதாரணமாக: மன்னர் சல்மான் பூங்கா, நியோம், திலைன், தி நியூஸ் கொயர் திட்டம், சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்திய கிழக்கு பசுமை முன்னெடுப்பு, திரியாகேட் திட்டம், கிடியா திட்டம், அல்உலா மேம்பாட்டு திட்டம், ராஃபிக் உவர் நீர் சுத்திகரிப்புத் திட்டம், அமலா திட்டம், சகாகா சூரியசக்தி மின் உற்பத்தித்திட்டம், செங்கடல் திட்டம் மற்றும் மன்னர் சல்மான்



**காலித் ஹமூத் அல் கஹ்தானி**
இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர்கொழும்பு

சக்தி வள நகரத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.சவூதி அரேபிய இராச்சியமானது உலக பாதுகாப்பையும் அமைதியையும் பேணுவதில் ஒரு இன்றியமையாத பங்காளியாக விளங்குகின்றது. சமீப காலங்களில், உலகளாவிய பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்காக பல உச்சிமாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புக்களை சவூதி அரேபியா நடத்தி வந்துள்ளது. அத்துடன், காசா தொடர்பான கலந்துரையாடல்கள், உலக பொருளாதார மாநாடு, உலக செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு (Global AI Summit) மற்றும் இஸ்போர்ட்ஸ் உலகக்கோப்பை "போன்ற பொருளாதார, தொழில்நுட்ப, விளையாட்டு, மருத்துவ உச்சி மாநாடுகளை நடத்தி வந்துள்ளது. மேலும், பல்வேறு சர்வதேச துறைகளில், குறிப்பாக 2030 இல் தலைநகர் ரியாதில் எக்ஸ்போ 2030 என்ற நிகழ்வை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பதானது, சவூதி அரேபியா சர்வதேச அரங்கில் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை அனைத்து நிலைகளிலும் உறுதிப்படுத்துகின்றது. அவ்வாறே சவூதி அரேபியா இராச்சியமானது, உலகெங்கிலும் வாழும் மக்களின் துயரங்களை நீக்கும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 171 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 131 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது. அந்த வகையில், 7,090 க்கும் அதிகமான மனிதாபிமான, நிவாரணம் மற்றும் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. உலகளவில் மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் மிகப் பெரிய நாடுகளில் ஒன்றாகவும் சவூதி அரேபியா இருந்து வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கையில் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 18 திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பூமியைப் பாதுகாப்பதற்கும், காலநிலை அபாயங்களைக் குறைப்பதற்கும் சவூதி அரேபிய இராச்சியம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்திய கிழக்கு பசுமை முன்னெடுப்பு, ரியாத்தை தளமாகக் கொண்ட உலகளாவிய நீர் அமைப்பை நிறுவுவதற்கான பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமர் அவர்களின் அறிவிப்பு மற்றும் சுத்தமான சக்தி வளத்தில் தங்கியிருத்தல் உட்பட பல முன்னெடுப்புகள் மூலம் இம்முயற்சியானது மேலும் மெருகூட்டப்பட்டது.

சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது நீண்ட காலமாக மிக உன்னதமான இருதரப்பு உறவுகளை பேணி வருகிறது. இருநாடுகளுக்கிடையிலான இவ்வுறவுகள் பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு நாடுகளுக்கிடையில் பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சமீபத்தில், நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறே, இரு நாடுகளின் உயர் அதிகாரிகளின் இரு நாடுகளுக்குமான பரஸ்பர விஜயங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வளர்ப்பதில் மேலும் பங்களிப்புச் செய்துள்ளன. பொருளாதார ரீதியாக, சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு இடையிலான வர்த்தக பரிமாற்றம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப் பரிமாற்றமானது 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகரித்துள்ளது.

# சவூதி அரேபியாவின் தேசிய தினமானது, ராஜ்ய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்

சவூதி அரேபியாவின் 94வது தேசிய தினமானது, ராஜ்ய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறித்து நிற்கின்றது. அரசர் Salman bin Abdulaziz மற்றும் பட்டத்து இளவரசர் Mohammed bin Salman ஆகியோரின் தொலைநோக்கு தலைமையின் கீழ் பல்வேறு துறைகளில் அதன் குறிப்பிடத்தக்க மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில், இந்த நாள் 1932 இல் ராஜ்யத்தை அதன் நிறுவனர் மன்னர் Abdulaziz Al Saud ஒருங்கிணைத்ததை நினைவுகூருகிறது, மேலும் இது தேசிய பெருமை, முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்திற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் கொண்டாட்டமாக செயல்படுகிறது.

**எரிசக்தி துறை:**

ராஜ்யத்தின் வளர்ச்சியை மேம்படுத்துதல் இலங்கையில், இலங்கைக்கான சவூதி தூதுவர் Khalid bin Hmoud AlQahtani திறமையான தலைமையின் கீழ், இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன. சவூதி அரேபியா நீண்ட காலமாக எரிசக்தி துறையில், குறிப்பாக எண்ணெய் மற்றும்



எரிவாயு உற்பத்தியில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் உள்ளது. 94வது தேசிய தினத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைத் தழுவி அதன் பாரம்பரிய எண்ணெய் அடிப்படையிலான பொருளாதாரத்தினை விரிவடைவதற்கான இராச்சியத்தின் முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

பட்டத்து இளவரசர் Mohammed bin Salman இன் தொலைநோக்கு 2030 இன் கீழ், நாடு சூரிய மற்றும் காற்றாலை ஆற்றல் திட்டங்களில் கணிசமான முதலீடுகளைச் செய்து, நிலைத்தன்மையை மையமாகக் கொண்டுள்ளது. சவூதியின் பசுமை முன்முயற்சி மற்றும் நெம்புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் இயங்கும் எதிர்கால நகரம்சவுதி அரேபியாவை சுத்தமான எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான முக்கிய மைல்கற்கள்.

**தொழில்துறை வளர்ச்சி:**

பல்வகைப்படுத்தல் மற்றும் புதுமை சவூதி அரேபியா எண்ணெய் சார்ந்து இருப்பதைக் குறைக்கும் நோக்கில், தொழில்துறை பல்வகைப் படுத்தலுக்கு துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தேசிய தொழில்துறை மேம்பாடு மற்றும் தளவாட திட்டம் (NIDLP) ஆகியன தொலைநோக்கு 2030 இன் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது, உற்பத்தி, சுரங்கம் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றில் வளர்ச்சியை துரிதப்படுத்தியுள்ளது. Jubail மற்றும் Yanbu போன்ற இராச்சியத்தின் தொழில்துறை நகரங்கள் பெட்ரோ கெமிக்கல்கள் மற்றும் மேம்பட்ட தொழில்களுக்கான செழிப்பான மையங்களாக மாறிவிட்டன. வாகன உற்பத்தி, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பாதுகாப்புத் தொழில்களில் முதலீடுகள் வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதார பின்னடைவுக்கு பங்களித்தன, சவூதி அரேபியா எண்ணெய் துறையில் மட்டுமல்ல, மேம்பட்ட உற்பத்தியிலும் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கிறது.

விவசாயம்: புதுமையுடன் தேசத்திற்கு உணவளித்தல் கடுமையான பாலைவனச் சூழல் இருந்தபோதிலும், சவூதி அரேபியா விவசாய வளர்ச்சியில் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது. உணவுப் பாதுகாப்பை மையமாகக் கொண்டு, ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்து விவசாயம் மற்றும் திறமையான நீர்ப்பாசன முறைகள் போன்ற நவீன விவசாய தொழில்நுட்பங்களை இராச்சியம் ஏற்றுக்கொண்டது. சவூதி அரேபியா அதன் சுற்றுச்சூழல் சவால்களை சமாளிக்க முடிந்தது, வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு நிலையான மற்றும் நிலையான உணவு விநியோகத்தை உறுதி செய்கிறது.

**மத சுற்றுலா:**

புனித யாத்திரை அனுபவத்தை விரிவுபடுத்துதல் சவூதி அரேபியாவானது முஸ்லிம் உலகின் இதயம் போன்றது, இஸ்லாத்தின் இரண்டு புனிதமான இடங்கள் மக்கா மற்றும் மதீனா. மத சுற்றுலா, குறிப்பாக ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரைகள், எப்பொழுதும் ராஜ்யத்தின் பொருளாதாரத்தின் ஒரு மூலக்கல்லாக இருந்து வருகிறது. 94வது தேசிய தினம் இத்துறையில் ஏற்பட்டுள்ள பரந்த முன்னேற்றங்களை பிரதிபலிக்கும் வாய்ப்பாக அமைந்தது.

தொலைநோக்கு 2030 இன் கீழ், 2030 ஆம் ஆண்டிற்குள் 30 மில்லியன் உம்ரா யாத்ரீகர்களை வரவேற்கும் நோக்கத்தை இராச்சியம் கொண்டுள்ளது. புதிய விசா அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் தளங்களின் வளர்ச்சியும் இந்த செயல்முறையை நெறிப்படுத்தியுள்ளது, இது உலகெங்கிலும் உள்ள யாத்ரீகர்களுக்கு அணுகக்கூடியதாக உள்ளது.

பட்டத்து இளவரசர் Mohammed bin Salman உடைய பங்கு: தொலைநோக்கு தலைமைத்துவம் சவூதி அரேபியாவின் மாற்றத்திற்கு முக்கிய பங்களிப்பாளர் பட்டத்து இளவரசர் Mohammed bin Salman ஆவார், அவருடைய தொலைநோக்கு 2030 இராச்சியத்தின் விரைவான நவீனமயமாக்கலுக்கு உந்து சக்தியாக உள்ளது. அவரது தைரியமான மற்றும் லட்சியமான தலைமையானது பொருளாதார பல்வகைப்படுத்தல், சமூக சீர்திருத்தங்கள் மற்றும் சர்வதேச ஈடுபாட்டிற்கு வழி வகுத்துள்ளது.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது முதல் பசுமை ஆற்றல் முன்முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது வரை, உலக அரங்கில் சவுதி அரேபியா போட்டித்தன்மையுடன் இருப்பதை பட்டத்து இளவரசர் உறுதி செய்துள்ளார். அவரது தலைமையின் கீழ், சவூதி சமூகத்தின் கட்டமைப்பை மறுவடிவமைத்த சமூக சீர்திருத்தங்களை இராச்சியம் ஏற்றுக்கொண்டது.



**Dr. அப்துல் காதர்**
அல் மகூர் மௌலானா
கொழும்பு

# சர்வதேச சைகை மொழிதினம் இன்று

சைகை மொழி என்பது தெரியப்படுத்தும் தகவலை சைகை மூலம் மற்றவருக்கு காட்சிபடுத்துவது ஆகும். இவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என இத்தினம் வலியுறுத்துகிறது.சர்வதேச சைகை மொழிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23 அன்று அனுஷ்டிக்கப்படுகிறது. காது கேளாதவர்கள் மற்றும் சைகை மொழிகளைப் பயன்படுத்துபவர்களின் மொழியியல் அடையாளத்தையும் கலாச்சார செழுமையையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த நாள் ஒரு சிறப்பு சந்தர்ப்பத்தை வழங்குகிறது. 2024 சைகை மொழி தினக் கொண்டாட்டத்தின் போது, சைகை மொழிகள் கொண்டு வரும் ஒற்றுமையை வலியுறுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

உலகில் 7 கோடி பேர் காது கேளாதவர்களாக உள்ளனர். இதில் 80 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் உள்ளனர். இவர்களிடம் 300 விதமான சைகை மொழிகள் பயன்பாட்டில் உள்ளன. 1951 செப். 23ல் உலக காதுகேளாதோர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்நாளை அங்கீகரிக்கும் விதமாக இந்நாளே சர்வதேச சைகை மொழி தினம் கடைபிடிக்கப்படுகிறது. A/RES/72/161 என்ற தீர்மானம் ஆன்டிகுவா மற்றும் பார்புடாவின் நிரந்தர தூதரகத்தால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் 97 உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றது. இது டிசம்பர் 19, 2017 அன்று ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சைகை மொழிகளின் சர்வதேச தினத்தின் முக்கியத்துவம் பற்றிப் பார்க்கின்ற போது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை செப்டம்பர் 23 ஆம் தேதியை சர்வதேச சைகை மொழிகள் தினமாக அதிகாரப்பூர்வமாக நியமித்துள்ளது. இந்த நினைவு நாள், காது கேளாத நபர்களின் மனித உரிமைகளை முழுமையாக உணர்ந்து கொள்வதை உறுதி செய்வதில் சைகை மொழியின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்றைய நிலவரப்படி, 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சைகை மொழிகள் தினத்திற்கான தீம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.2023 ஆம் ஆண்டின் சர்வதேச சைகை மொழிகள் தினத்தின் கருப்பொருளாக “எங்கும் காதுகேளாதவர்கள் எங்கும் கையெழுத்திடக்கூடிய உலகம்” !

உலகெங்கிலும் உள்ள காதுகேளாத சமூகங்கள், அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் தங்கள் நாடுகளின் பல்வேறு மொழியியல் நிலப்பரப்புகளின் ஒருங்கிணைந்த கூறுகளாக தேசிய சைகை மொழிகளை ஊக்குவிக்கவும் அங்கீகரிக்கவும் தொடர்ந்து இணைந்து செயல்படும். இந்த நாள் தகவல்தொடர்பு வசதி, உள்ளடக்கத்தை வளர்ப்பது மற்றும் காதுகேளாத சமூகங்களின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில் சைகை மொழிகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

சைகை மொழிகள் இயற்கையான மொழிகள், காதுகேளாதவர்கள் தொடர்புகொள்வதற்குப் பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதும் 300க்கும் மேற்பட்ட வெவ்வேறு சைகை மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன,ஒவ்வொரு சைகை மொழிக்கும் அதன் தனித்துவமான இலக்கணம் மற்றும் தொடரியல் உள்ளது,பேசும் மொழிகளைப் போலவே சைகை மொழிகளும் முக்கியமானது,அவர்கள் மதிக்கப்பட வேண்டும், காது கேளாதவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் உட்பட அவர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தங்கள் சைகை மொழியைப் பயன்படுத்த உரிமை உண்டு.

இந்த தீர்மானம் சைகை மொழி மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கான ஆரம்ப அணுகலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. காதுகேளாத நபர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இத்தகைய அணுகல் அவசியம் என்று கருதப்படுகிறது. சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையின் ஒருங்கிணைந்த கூறுகளாக சைகை மொழிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் தீர்மானம் வலியுறுத்துகிறது. இது “நாம் இல்லாமல் நம்மைப் பற்றி எதுவும் இல்லை” என்ற கொள்கையை எடுத்துக்காட்டுகிறது . காது கேளாதோர் சமூகங்களை அவர்கள் தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் முன்முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

**செ.அபிசேகன்,**
**ஊடகக் கற்கைகள், யாழ்.பல்கலைக்கழகம்**

# திருப்பதி லட்டு விவகாரம் "முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறி இருப்பது உண்மையல்ல" – பிரதமர் மோடிக்கு ஜெகன்மோகன் கடிதம்

திருப்பதி லட்டு விவகாரம் ‘‘முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறி இருப்பது உண்மையல்ல’’ பிரதமர் மோடிக்கு ஜெகன்மோகன் கடிதம்

திருப்பதி லட்டுகளில் கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பொய்யான குற்றச்சாட்டுகளை பரப்பியதாக குற்றம்சாட்டி முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன், பிரதமர் மோடிக்கு ஞாயிற்றுக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

மேலும் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் பொறுப்பற்ற மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்ட அறிக்கைகள் பக்தர்களின் நம்பிக்கைகளை காயப்படுத்தியிருப்பதுடன், திருப்பதி தேவஸ்தான போர்டின் புனிதத்தன்மையை குலைப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெகன்மோதன் ரெட்டி தனது கடிதத்தில், "வெங்கடேச பெருமாளுக்கு இந்தியாவில் மட்டும் இல்லாமல் உலகெங்கிலும் கோடிக்கணக்கான இந்து பக்தர்கள் உள்ளனர். இந்த சிக்கலான சூழ்நிலையை கவனமாக கையாளவில்லை என்றால், இந்தப் பொய்கள் பரந்த அளவிலான வேதனையைத் தூண்டும். பல்வேறு முனைகளில் இருந்து பல விளைவுகளை உருவாக்கும்.

இது உண்மையில் அரசியல் உள்நோக்கத்துடன் பரப்பப்படும் பொய்யாகும். இந்த பொய்கள் உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்களின் உணர்வுகளை காயப்படுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளன. திருப்பதி தேவஸ்தானம் போர்டு என்பது பல்வேறு பின்னணியில் இருந்து புகழ்பெற்ற பக்தர்களை உள்ளடக்கிய ஒரு சுயாதீனமான அமைப்பு.

டிடிடி போர்டில் தற்போது உள்ள உறுப்பினர்களில் சிலர் பாஜகவையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. டிடிடியின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் அதிகாரம் அறங்காவலர் குழுவுக்கு உள்ளது. திருமலை வெங்கடேச கோயில் நிர்வாகத்தில் ஆந்திரப்பிரதேச அரசுக்கு சிறிய அளவிலான பங்கே உள்ளது.



கோயிலுக்கு வரும் நெய்யின் தரத்தை சோதனை செய்ய பல விரிவான சோதனைகள் நடைபெறுகின்றன. ஒரு பொருள் பயன்படுத்துவதற்கு முன்பு கடுமையான இடெண்டர் நடைமுறை, என்ஏபிஎல் அங்கீகாரம் பெற்ற ஆய்வகச் சோதனைகள் மேலும் பல கட்டச் சோதனைகள் உள்ளன. தெலுங்கு தேசம் கட்சியின் முந்தைய ஆட்சியிலும் இது போன்ற நடவடிக்கைகள் இருந்தன. நெய் தரமற்றதாக இருப்பதாக இப்போது கண்டறியப்பட்டிருப்பது போல, முந்தைய காலங்களில் டேங்கர்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளன.

சந்திரபாபு நாயுடு பொய் பேசுவதையே வழக்கமாக கொண்டுள்ளார். அரசியல் நோக்கங்களுக்காக தற்போது அவர், கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைகளை புண்படுத்தும் அளவுக்கு தாழ்ந்துள்ளார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒட்டுமொத்த நாடும் உங்களை பார்த்துக்கொண்டு இருக்கிறது.

பொய்களை பரப்பும் வெட்கமற்ற செயலுக்காக சந்திரபாபு நாயுடு கண்டிக்கப்படுவதுடன், உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வருவது மிகவும் அவசியமானதாகும். அது கோடிக்காணக்கான இந்து பக்தர்களின் மனதில் சந்திரபாபு நாயுடு ஏற்படுத்தியிருக்கும் சந்தேகங்களைப் போக்கவும், திருப்பதி தேவஸ்தான புனிதத்தின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கவும் உதவும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமராவதியில் செப்.18ம் தேதி செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் சந்திரபாபு நாயுடு, “திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயில் மிகவும் புனிதமானது. ஆனால் முந்தைய ஜெகன் மோகன் ஆட்சியில் அங்கு கொடுக்கப்பட்ட லட்டு பிரசாதத்தில் நெய்க்கு பதில், விலங்குகளின் கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக கிடைத்த தகவலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். கோடிக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிக்க முடியாத ஜெகன்மோகனும், ஒய்எஸ்ஆர் காங்கிரஸும் வெட்கப்பட வேண்டும். திருமலையின் ஒவ்வொரு அம்சமும் ஜெகன் அரசால் இழிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.

திருப்பதி லட்டுவின் தரம் முற்றிலுமாக கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், உடனடியாக சுத்தமான நெய்யை பயன்படுத்த உத்தரவிட்டோம்” என்று தெரிவித்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 செப்டெம்பர் 23 திங்கட்கிழமை

# வெற்றி விளிம்பில் இலங்கை: நியூசிலாந்தும் போராட்டம்




நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி விளிம்பில் இருப்பதோடு நியூசிலாந்து அணியும் இரண்டு விக்கெட்டுகளை தக்கவைத்துக் கொண்டு வெற்றிக்காக போராடி வருகிறது.

காலியில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று (22) ஆட்ட நேர முடிவின்போது இலங்கை அணி நிர்ணயித்த 275 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் நியூசிலாந்து அணி 68 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று தடுமாற்றம் கண்டுள்ளது.

இதன்படி ஆட்டத்தின் கடைசி நாளான இன்று முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டுவதற்கு நியூசிலாந்து அணி இன்னும் இரண்டு விக்கெட்டுகள் மாத்திரமே கைவசம் இருக்க 68 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது. இலங்கை அணி எஞ்சியுள்ள இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினால் போதுமானது.

எவ்வாறாயினும் நியூசிலாந்து அணி சார்பில் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ரச்சின் ரவிந்திரா 158 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 91 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் இருந்து நியூசிலாந்து அணியை வெற்றிபெறச் செய்ய முயன்று வருகிறார்.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றதால் இந்த டெஸ்ட் போட்டியில் நேற்று முன்தினம் (21) ஓய்வு நாளாக இருந்த நிலையிலேயே நான்காவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 305 ஓட்டங்களைப் பெற்றதோடு நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 340 ஓட்டங்களைக் குவித்தது.

இந்நிலையில் 237 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் இலங்கை அணி இன்னும் 72 ஓட்டங்களைப் பெறுவதற்குள் எஞ்சிய 6 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. மத்திய வரிசை வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் (50), அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா (40) மற்றும் குசல் மெண்டிஸ் (23) ஆகியோர் பெரிதாகக் கைகொடுக்கத் தவறினர்.

அபாரமாக பந்துவீசிய அஜாஸ் படேல் ஆறு விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு வில்லியம் ஒருக் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து நேற்றைய நாளில் வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு இலங்கை சுழல் வீரர்களால் நெருக்கடி கொடுக்க முடிந்தது. இரண்டாவது ஓவரிலேயே டெவொன் கொன்வோயின் விக்கெட்டை (4 ஓட்டம்) வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோவால் வீழ்த்த முடிந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கை சுழல் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தி நியூசிலாந்தின் விக்கெட்டை ஒன்றன் பின் ஒன்றாக வீழ்த்தினர்.

இதன்மூலம் ரமேஷ் மெண்டிஸ் மற்றும் பிரபாத் ஜயசூரியவினால் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்த முடிந்ததோடு அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா ஒரு விக்கெட்டை பதம்பார்த்தார்.



## சர்வதேச செய்திகள்

# ஹிஸ்புல்லா–இஸ்ரேல் இடையே பரஸ்பர தாக்குதல்கள் உக்கிரம்

## லெபனானில் இருந்து ரொக்கெட் மழை பொழிய இஸ்ரேல் பதிலுக்கு வான் தாக்குதல்

இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே நேற்று (22) பரஸ்பரம் கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்றதோடு இஸ்ரேலிய போர் விமானங்கள் தெற்கு லெபனானில் உக்கிர தாக்குதல்களை நடத்திய நிலையில் லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலின் வடக்குப் பகுதி மீது ரொக்கெட் குண்டுகளை வீசியது.

காசா போரை ஒட்டி இரு தரப்புகளும் சுமார் கடந்த ஓர் ஆண்டாக தினசரி பரஸ்பர தாக்குதல்களை நடத்தியபோதும் தற்போது மோதல் முன்னர் இல்லாத அளவுக்கு தீவிரம் அடைந்துள்ளது.

ஹிஸ்புல்லாவின் ஆயிரக்கணக்கான ரொக்கெட் ஏவு கருவிகள் உட்பட கடந்த சனிக்கிழமை 290 இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியதோடு ஈரான் ஆதரவு அமைப்பின் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்துவதாக அது கூறியுள்ளது.

இஸ்ரேலின் வடக்கு மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டு ஒன்றுகூடல்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

லெபனான் மற்றும் ஈராக்கில் இருந்து ரொக்கெட் குண்டுகள் இரவு முழுவதும் விழுந்த நிலையில் இஸ்ரேலின் சைரன் அபாய ஒலி கேட்ட வண்ணம் இருந்தன. எனினும் பெரும்பாலான ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பினால் இடைமறிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

இதில் பல கட்டடங்கள் நேரடியாக தாக்கப்பட்டது அல்லது ஏவுகணை பாகங்கள் விழுந்ததாக இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் சேவை பிரிவினால் சிகிச்சை பெற்றுள்ளனர். எனினும் எவரும் மோசமான காயங்களுக்கு உள்ளாகவில்லை என்று இஸ்ரேலிய ஊடகங்கள் கூறின.

லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக நடத்தும் தாக்குதல்களுக்கு பதிலடியாக இஸ்ரேலிய ரமட் டேவிட் விமானப்படைத் தளத்தை இலக்கு வைத்து பல டஜன் ஏவுகணைகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா நேற்று டெலிகிராம் தளத்தில் பதிவிட்டது.

இரு தரப்புக்கும் இடையே மோதல் ஆரம்பித்தது தொடக்கம் ரமாட் டேவிட் மீது இஸ்ரேலுக்குள் அழமாக தாக்குதல் நடத்த ஹிஸ்புல்லாவல் முடிந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மறுபுறம் வெடிக்கும் ஆளில்லா விமானங்கள் மூலம் இஸ்ரேல் மீது நேற்றுக் காலை தாக்குதல் நடத்தியதாக ஈரான் ஆதரவு ஈராக் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் புறநகர் பகுதி ஒன்றில் இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை (20) நடத்திய வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி ஒருவர் கொல்லப்பட்டதோடு குறைந்தது 37 பேர் பலியான சம்பவத்தை அடுத்தே மோதல் தீவிரம் அடைந்துள்ளது. இந்தத் தாக்குதலில் மூத்த தலைவர் இப்ராஹிம் ஆகில் மற்றும் மற்றொரு தளபதியான அஹமது வஹ்பி உட்பட தமது 16 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா கூறியது.



கடந்த ஓர் ஆண்டாக நீடிக்கும் பதற்ற சூழலில் லெபனானில் நடத்தப்பட்ட அதிக உயிரிழப்புக் கொண்ட தாக்குதலாக இது இருந்தது.

இந்தத் தாக்குதலில் சனநெரிசல் மிக்க புறநகர் பகுதியில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்புக் கட்டடம் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டதோடு அதற்கு அருகில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றும் சேதமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொல்லப்பட்டவர்களில் மூன்று சிறுவர்கள் மற்றும் ஏழு பெண்கள் இருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக கடந்த வாரம் அடுத்தடுத்த நாட்களில் ஹிஸ்புல்லா அமைப்பு உறுப்பினர்கள் வைத்திருந்த பேஜர் மற்றும் வோக்கி டோக்கி சாதனங்கள் வெடித்த சம்பவங்களில் 39 பேர் கொல்லப்பட்டு 3000க்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர். இது இஸ்ரேலிய உளவுப் பிரிவான மோசாட்டின் செயல் என பரவலாக குற்றம்சாட்டப்படுகிறது.

மோதல் விரிவடைவது தொடர்பில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் கவலையை வெளியிட்டபோதும் முன்னணி ஹிஸ்புல்லா தலைவர் ஒருவர் கொல்லப்பட்டது அந்தக் குழுவுக்கு நீதி வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். ஹிஸ்புல்லாவை ஒரு பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது.

மோதல் தீவிரம் அடைந்த நிலையில் லெபனான் பிரதமர் நஜிப் முகதி, நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

காசாவில் ஹமாஸ் அமைப்புடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றுக்கு இஸ்ரேல் இணங்கும் வரை அதன் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக ஹிஸ்புல்லா கூறி வருகிறது.

எனினும் காசா போரை ஒட்டி லெபனான் மற்றும் இஸ்ரேல் எல்லையில் நீடிக்கும் பதற்றம் முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தல் இருந்து வருகிறது. கிடைக்கப்பெறும் வர்த்தக விமானங்களைப் பயன்படுத்தி லெபனானில் இருந்து வெளியேறும்படி பெய்ரூட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அங்குள்ள அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அண்டை நாடான ஜேர்தானும் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு இது போன்ற அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

லெபனானுடனான வடக்கு எல்லையில் அவதானம் செலுத்தும் வகையில் “புதிய கட்ட போர் ஒன்றில்” இஸ்ரேல் பிரவேசித்திருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

# காசாவில் 325ஆவது நாளாகவும் இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்



காசாவில் 352ஆவது நாளாகவும் இஸ்ரேல் நேற்று (22) நடத்திய தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு மற்றும் மத்திய காசாவில் இடம்பெற்ற செல் குண்டுத் தாக்குதல்களில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது கான் யூனிஸ் நகரின் கிழக்கே உள்ள குசா பகுதியில் இடம்பெற்ற பீரங்கி தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாகவும் சமக காலத்தில் ரபா நகரின் கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வீச்சுகளை அடுத்து பலஸ்தீன செம்பிறை சங்க உறுப்பினர்கள் நான்கு உடல்களை மீட்டதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தவிர மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

இதேவேளை காசா நகரில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலில் பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுவர் உட்பட 22 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பாடசாலையை ஹமாஸ் அமைப்பு கட்டளை மையம் ஒன்றாக பயன்படுத்துவதாக இஸ்ரேல் இராணுவம் சுமத்தும் குற்றச்சாட்டை அந்த அமைப்பு மறுத்துள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலைகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த மாத ஆரம்பத்தில் நுஸைரத் அகதி முகாமில் உள்ள அல் ஜவுனி பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஆறு ஊழியர்கள் கொல்லப்பட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்தது.

காசாவில் ஓர் ஆண்டை நெருங்கும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்தைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அல் ஜசீரா அலுவலகத்திற்கு இஸ்ரேலியப் படையினர் பூட்டு

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ரமல்லாவில் உள்ள அல் ஜசீரா செய்தி ஒளிபரப்பு நிறுவனத்தின் அலுவலகத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட இஸ்ரேலியப் படை, அதனை ஆரம்பக் கட்டமாக 45 நாட்களுக்கு மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளது.

முகமூடி அணிந்து, ஆயுதம் ஏந்திய இஸ்ரேலியப் படையினர் நேரடி ஒளிபரப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நேற்று (22) காலை அந்த அலுவலகத்திற்குள் நுழைந்தனர். இதன்போது இந்த செய்தி ஒளிபரப்பின் மேற்குக் கரை பிரிவுக்கான தலைவர் வலீத் அல் ஒமரியிடம் இந்தச் செய்தி ஒளிபரப்பை மூடும் உத்தரவை படையினர் கொடுக்கும் காட்சி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நேரடியாகக் கண்டனர்.



ஏற்கனவே நசாரத் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்தில் உள்ள அல் ஜசீரா அலுவலகங்கள் மீது இஸ்ரேலியப் படை சுற்றிவளைப்பை நடத்தியது. கட்டாரைத் தளமாகக் கொண்ட இந்தச் செய்தி ஒளிபரப்பு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று இஸ்ரேல் அப்போது தெரிவித்தது. ‘உண்மையை மறைப்பது மற்றும் மக்கள் உண்மையை கேட்பதைத் தடுக்கும் நோக்குடன் ஊடகவியலாளர்கள் எப்போதுமே இலக்கு வைக்கப்பட்டு வருகின்றனர்’ என்று ஒமரி குறிப்பிட்டார்.

அல் ஜசீரா அலுவலகத்திற்கு வெளியில் கடைசி ஒலிவாங்கி மற்றும் கெமராவை பறிமுதல் செய்த படையினர் ஒமிரியை அலுவலகத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றியதாக அல் ஜசீரா செய்தியாளர் முஹமது அஸ்லாபின் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.